
ஜன. 09 - 15, 2005
24 பக்கங்கள் 16.00
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்



# எமக்கேன் இந்த நிலை?

# இலங்கையில் இன்று சுனாமி! நாளை பூகம்பமா?




சுனாமி அலைகள் வந்ததை அடுத்து வதந்தி அலைகள் விஸ்வரூபம் எடுத்துள்ளன. சாதாரண வற்றுப் பெருக்கு கூட எமது கண்ணுக்கு 'சுனாமி' அலைகளாகத்தான் தெரிகின்றது.

அச்ச உணர்வும், அச்ச மனப்பிறள்வும் (FEAR PHYCHOSIS) அதிகரித்துக் காணப்படுகின்றன. பாரிய இயற்கை அனர்த்தங்களின் பின்னர் மக்களின் இயல்பு வாழ்க்கை மாறுவதும், பய உணர்வும், விரக்தி மனப்பான்மை காணப்படுவதும் சகஜமே. சில வேளைகளில் ஊடகங்கள் மக்கள் மறக்க நினைக்கின்ற பயங்கரக் காட்சிகளை திரும்பத் திரும்ப திரையிடுவதும், பிரசுரிப்பதும் மக்களை மனநோயாளிகள் ஆக்குகின்றன என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

உலக வர்த்தக நிலையம் தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டபோது- அமெரிக்க தொலைக்காட்சிகள் சிதைந்த உடல்களையோ, இறந்த சடலங்களையோ காட்டவில்லை. மாறாக அமெரிக்க அரசு மனந்தளராமல் மீட்புப் பணிகளை ஒளிபரப்பியது. அப்படியிருந்தும் அதே இரு கோபுரங்களும் தகர்ந்ததைப் பார்த்து மனோநிலை பாதிக்கப்பட்ட அமெரிக்கர்கள் ஆயிரக்கணக்கானவர்கள்.

இப்படி பயந்த உணர்வுடன் வாழும் எம் மக்களிடையே இப்பொழுது புதிதாக ஒரு செய்தி. புவியியல் ஆய்வாளர் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஒருவர் ஜனவரி மாத முற்பகுதியில் பூமி அதிர்வு ஒன்றால் இலங்கை பாதிக்கப்படும் என்று உறுதியாக சொல்லியிருக்கிறார்.

பல்கலைக்கழகப் பட்டங்கள் இல்லாவிடினும் இந்த புவியியல் ஆய்வாளர்- பல வருடங்களாக - கொழும்பின் கரையோரப் பகுதிகளில் பூமி அதிர்வு உண்டாகும். அதனால் உயிர் அனர்த்தங்கள் நேரும் என்று கூறிவந்தார். அவருக்கு வசதியாக சுனாமியும் வந்தது. அது அவர் குறிப்பிட்ட பகுதிகளை மட்டுமல்ல இலங்கையின் முக்கால் பங்கு கரையோரப் பகுதிகளை அழித்து சின்னாபின்னமாக்கியது. தற்பொழுது இந்த ஆய்வாளர்- "இந்த சுனாமி சுமாத்திராவிலிருந்து வரவில்லை. இலங்கையின் கரையோரப் பகுதிகளில் நடந்த 16 சிறிய பூமி அதிர்வுகளின் விளைவே. இதைத்தான் சொன்னேன்" என்று அடித்துச் சொல்கின்றார். நடக்கும் என்று சொன்னார், அன்று நடந்திடாவிடினும்- என்றோ ஒரு நாள் இயற்கை அனர்த்தங்கள் நடக்கத்தான் போகின்றன. அப்படி நடக்கும்போது இவர் போன்றோர் விஞ்ஞானிகளை விட மேதாவிகள் ஆகிவிடுகின்றார்கள்.

அப்படியென்றால் பூமி அதிர்வு நடக்கவே நடக்காது என்கின்றீரா என்று வாசகர்கள் கேட்கலாம்.

பூமி அதிர்வு ஏற்படலாம். ஏற்படாமலிருக்கலாம். நடிகர் விசுவின் ஸ்டைலில் குயுக்தியான பதில் அல்ல இது.

விஞ்ஞான பூர்வமாக பூமி அதிர்வு ஏற்படப்போவதை நிச்சயம் முன்கூட்டியே ஆரூடம் சொல்ல முடியாது.

*** தொடர்ந்து ஏற்பட்ட AFTER SHOCKS சிறு பூமி அதிர்வுகள் 34க்கும் மேற்பட்டவை. இவற்றினால் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் தொடர்ந்து நில நடுக்கங்களும் ஏற்பட்டன.**

இந்த பூகோளத்தில் ஒரு சில பகுதிகளில் உள்ள நாடுகள், கண்டங்கள் என்பன பூமி அதிர்வு ஏற்படக்கூடிய இடத்தில் உள்ளன. இந்தப் பிரதேசங்களில் பூமி அதிர்வு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள், வாய்ப்புக்கள் மற்றைய இடங்களை விட அதிகம். இப்படியான ஒரு அபாயகரமான வலயத்தில் எமது இலங்கைத் தீவும் அமைந்துள்ளது. எனவே இன்றோ, நாளையோ, என்றோ இலங்கைத் தீவில் பூமி அதிர்வு நடைபெறலாம். ஆனால், என்று நடைபெறும் என்று உறுதியாகக் கூற முடியாது. ஜனவரி முற்பகுதியில் நடைபெற்றால்- புவியியல் ஆய்வாளர் இலங்கையின் கதாநாயகர் ஆகிவிடுவார். ஆனால், ஒரு பூமி அதிர்வு ஏற்பட்டால் சிலவேளைகளில் AFTER SHOCKS எனப்படும் அடுத்தடுத்து நிகழும் பூமி அதிர்வுகள் ஏற்படுவதுண்டு. இதுதான் இன்று அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பூமி அதிர்வு நிகழ்வுகள்.




பூமி என்ற கோளத்தின் மேற்பரப்பு வீட்டுத் தரையில் பளிங்கு அல்லது சலவைக் கற்கள் பதித்தது போல் 12 பெரிய விசாலமான (PLATES) தட்டுக்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தட்டுகள் குறுக்கு நெடுக்குமாக ZIG ZAG PUZZLES துண்டுகள் போல பொருத்தப்பட்டுள்ளன. இந்தத் தட்டுகளின் மேலேதான் கண்டங்களும், சமுத்திரங்களும் இருக்கின்றன. எமது இலங்கை- 'இந்தியா அவுஸ்ரேலியா' தட்டின் (INDO-AUSTRALIAN) மேல் உள்ளது. இந்தத் தட்டுக்கள் ஒவ்வொன்றும் சதா காலமும் சுழன்றுசுழன்று கொண்டு இருக்கின்றன. இப்படியான அசைவுகள் நடைபெறும் போது ஒரு தட்டு இன்னொரு தட்டோடு மோதலாம். அல்லது இப்படி மோதும்போது ஒரு தட்டு இன்னொரு தட்டின் மேல் ஏறலாம். சிலவேளை இந்தத் தட்டுகளின் மோதலால் மோதுகின்ற தட்டோ மோதப்பட்ட தட்டோ உடைந்து துண்டாடப்படலாம். இப்படி மோதல்கள் நடக்கும்போது தான் பூகம்பம் உருவாகின்றது.

மோதும் தட்டு- மற்றத் தட்டின் அடியில் செருகப்பட்டால்- அதற்கு மேல் உள்ள பல கன அடி பரிமாண சமுத்திர நீர் திடீரென்று கீழே இறங்கி சுனாமி அலைகளை உருவாக்கும். கடந்த டிசெம்பர் 26 ஆம் திகதி- இந்தோ அவுஸ்ரேலியன் தட்டும் யூரோ ஆசியன் தட்டும் சந்திக்கும் இடமான சுமாத்திராக்கு அருகிலுள்ள சமுத்திரத்தின் அடியில் இந்தோ அவுஸ்திரேலியத் தட்டு- யுரே ஆசியன் தட்டில் செருகப்பட்டு கீழே இறங்கியதால், 9.0 ரைட்டர் அளவில் பூகம்பம் சமுத்திரத்தின் அடியில் உருவாகியது. அதனைத் தொடர்ந்து 40 வருடத்தின் பின்னர் உலகம் சந்தித்த - பேரழிவுகளின் காரணகர்த்தாவான சுனாமி அலைகள் உருவான பூகம்பத்தின் அதிர்வுகள் எமது இலங்கையிலும் உணரப்பட்டது. ஒரு சில இடங்களில் ஜன்னல்கள் உடைந்தன. தளபாடங்கள் அசைந்தன. கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு முன்னர் டிசம்பர் 19ஆம் திகதி கந்தானையிலிருந்து நீர்கொழும்பு வரையிலான கரையோரப் பகுதிகளிலும் கரையோரத்தில் இருந்து உள்நாட்டுப்பகுதியான யக்கல, கம்பஹா பகுதிகளிலும் ஒரு நில நடுக்கம் 4 ரைட்டர் அளவுக்கு குறைவான அளவில் உணரப்பட்டதாக அறியப்படுகிறது. சமீபத்தில் பல இந்திய நகரங்களில் மிகவும் சிறிய அளவிலான நில நடுக்கங்கள் உணரப்பட்டு மக்கள் பீதிகொண்டு வசிப்பிடங்களை விட்டு வெளியேறிய சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

-அருள்-

இவை யாவும்- எமது நாடும்- இந்தியாவும் பூமி அதிர்வுகளை, பாரிய அளவில் சந்திக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை உணர்த்துகின்றன.

இதற்கு ஆதாரமாக புதியதொரு திடுக்கிடும் தகவல் ஒன்று தற்போது வந்துள்ளது.

(23 ஆம் பக்கம் பார்க்க)

**பூமி அதிர்வின் அளவும் அவை ஏற்படுத்தும் பாதிப்புகளும்**

| ரிக்டர் அளவு | பாதிப்புக்கள் |
|---|---|
| 0—1.9 | பூமி அதிர்வை அறியும் கருவியால் மாத்திரமே அறியலாம். |
| 2—2.9 | சுவரில் மாட்டியுள்ள படங்கள் தொங்கும் மின்சார விளக்குகள் அசையும். |
| 3—3.9 | மாடி வீடுகளில் 3ஆவது மாடிக்கு மேலே வசிப்போர் உணருவர். பாதையில் பலமான லொரி போகும்போது ஏற்படும் அதிர்வு போல் இருக்கும். |
| 4—4.9 | ஜன்னல்கள் அடித்து மூடும்— ஜன்னல் கண்ணாடிகள் உடையும் பீரோ — அலுமாரிகளின் மேல் வைத்த பொருட்கள் நகர்ந்து விழும். |
| 5—5.9 | தளபாடங்கள் அசையும். சுவரிலிருந்து காரை— பூச்சு வெடித்து விழும். |
| 6—6.9 | ஸ்திரமில்லாத அத்திவாரங்கள் உள்ள கட்டடங்கள், சாதாரண செங்கல் கட்டிய கட்டடங்கள் நொறுங்கலாம். |
| 7—7.9 | கட்டடங்கள் அத்திவார மட்டத்தில் முழுதாக அசையும். நிலத்தில் வெடிப்புகள் தோன்றும். நிலத்தடி நீர்க்குழாய்கள், காஸ் குழாய்கள், எண்ணெய்க்குழாய்கள் உடையும். |
| 8—8.9 | பாலங்கள் உடையும். அநேகமான கட்டடங்கள் உடையும். |
| 9ம் அதற்கு மேலே | பாரிய சேதம். தரையில் அதிர்வு அலைகள் பரவி செல்வதை காண லாம். முற்றாக கட்டடங்கள் இடியும். |

# அனர்த்தங்களை எதிர்கொள்ள எப்படித் தயாராக வேண்டும்?

இலங்கையில் பூமி அதிர்வு ஏற்படலாம் என்பது ஓரளவு உறுதியான விதத்தில் பூமி அதிர்வு— நில நடுக்கம் ஏற்படும்போது நாம் எப்படி தயாராக இருக்க வேண்டும்?

நீங்கள் எங்கே இருக்கின்றீர்களோ— அந்த இடத்தில் பாதுகாப்பான இடம் ஒன்றை தேர்ந்தெடுங்கள். சுவரோடு சாய்த்து வைக்கப்பட்டுள்ளன. அலுமாரி, பீரோ என்பன இல்லாத இடம், மேலே இருக்கும் பொருட்கள் உங்கள் மேல் விழாத இடம் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள். பூமி அதிர்வு வரும்வரை காத்திராமல் உங்கள் தொழில் நிறுவனம், வீடு என்பவற்றில் இவ்வாறு பாதுகாப்பான இடத்தை ஒதுக்கி வைத்துக்கொள்ளுங்கள். பூமி அதிர்வின் போது இந்தப் பாதுகாப்பான இடத்தில் சுவரோடு ஒன்றி படுத்துக்கொள்ளலாம். நல்ல உறுதியான மேசை, அல்லது கட்டிலுக்கடியிலும் மறைந்துகொள்ளலாம். அடுத்தது பூமி அதிர்வுக்கு வெளிநாடுகளில் கற்றுக்கொடுக்கப்படும் பாதுகாப்பு முறையான (DROP,COVER HOLD ON) உடனே விழுந்து படுத்தல், கண்களை அழுத்தி மூடி தலையைக் குனிந்து கைகளால் அமுக்கி மறைத்தல், இதே நிலையில் நில நடுக்கம் முடியும் வரை தொடர்ந்து இருத்தல் ஆகியவற்றை அடிக்கடி பயிற்சி செய்து பழகிக்கொள்ள வேண்டும்.

தரையில் உட்கார்ந்திருந்தால்— ஜன்னல்களைப் பார்த்த வண்ணம் உட்காரக்கூடாது. அலுமாரிகள் பீரோக்களுக்கு அருகில் உட்காரக்கூடாது. நில நடுக்கம் நிற்கும் வரை இருந்த இடத்தை விட்டு அசையக்கூடாது. நில நடுக்கம் நின்ற பின்னரே வெளியில் இறங்க வேண்டும். ஜன்னல்களுக்குப் பக்கத்தில் நிற்கக் கூடாது. கட்டிலில் படுத்திருக்கும் போது அதிர்வு ஏற்பட்டால் கட்டிலைக் கெட்டியாகப் பிடித்தவாறே முகம் குப்புறப்படுத்துக் கொள்ளுங்கள். முகத்தைத் தலையணையால் மூடிக்கொள்ளுங்கள். வெளியில் நிற்கும்போது பூமி அதிர்வு ஏற்பட்டால் — கட்டடங்கள், மரங்கள், மின்சார வயர்கள் செல்லும் இடங்கள், மின் கம்பங்கள் இல்லாத இடங்கள் ஆகியவற்றைத் தவிர்த்து வெளியை — மைதானத்தை விரைவாக அடைந்து — நிலத்தில் DROP,COVER HOLD ON பயிற்சியை கைக்கொள்ளுங்கள்.

காரில் போய்க்கொண்டிருக்கும்போது நில அதிர்வு ஏற்பட்டால், வேகத்தைக் குறைத்து ஒரு வெட்ட வெளியான இடத்துக்கு காரை ஓட்டிச் சென்று அதிர்வு நிற்கும் வரை காரினுள் உட்கார்ந்து கண்களை பாதுகாப்பாக மறைத்துக்கொண்டு இருங்கள்.

அதிர்வுகள் நின்ற பின்னர் உங்கள் உடலில் ஏதாவது காயங்கள் ஏற்பட்டிருக்கின்றதா என்று சோதித்துப் பார்த்து — முதலுதவி செய்யுங்கள். மேலும் அபாயங்களிலிருந்து உங்களைக் காப்பாற்றிக்கொள்ள நீண்டகையுள்ள ஆடைகள், காலை மூடி மறைக்கும் பாதணிகள் ஆகியவற்றை அணிந்துகொள்ளுங்கள். உங்கள் குடும்பத்தினருக்கு காயங்கள் இருக்கின்றனவா என்று பரிசோதித்து முதலுதவி செய்யுங்கள்.

அருகில் எங்கேயோ ஏதாவது தீப்பற்றி எரிகிறதா என்று பார்த்துத் தீயை அணையுங்கள். உங்கள் சமையல் வாயு சிலிண்டர்களை மூடி அடுப்பிலிருந்து கழட்டி விடுங்கள். பாட்டரி (BATTERY) வானொலியை உபயோகித்து அரசு விடுக்கும் அறிவித்தலுக்கு ஏற்றவாறு பணியுங்கள். AFTER SHOCK என்ற சிறு நில நடுக்கங்கள் அடுத்தடுத்து வரலாம். அப்படி நடைபெற்றால் திரும்பவும் DROP,COVER HOLDEN தான். இப்படியான பலவகை இயற்கை அனர்த்தங்களை எதிர்பார்த்து என்றும் தயாராக இருக்கச் செய்ய வேண்டிய சில காரியங்கள்:—

அறையில் உள்ள உயர்ந்த அலுமாரி பீரோக்களை சுவரோடு சேர்த்துப் பிணைத்து வையுங்கள். அலுமாரிகளுக்கும், பீரோக்களுக்கும், மேசை லாச்சிகளுக்கும் உறுதியான பூட்டுப்போட்டு எந்நேரமும் பூட்டி வையுங்கள். நில நடுக்கத்தின்போது பூட்டாத கதவுகள், லாச்சிகள் தாமாகத் திறந்து— அவற்றினுள் உள்ள சாமான்கள் உங்கள் மேல் விழுந்து காயங்களை ஏற்படுத்தலாம்.

அதிகமான வீடுகளில் உள்ள கொதிநீர் GEYZERS ஐ உறுதியாக சுவரோடு பிணைத்து விடுங்கள்.

உங்கள் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் நில நடுக்கம் வந்தால் எடுக்க வேண்டிய பயிற்சிகள், காப்பாற்று முறைகள் பற்றி விளக்கமாகக் கூறி, பயிற்றுவியுங்கள். எந்த நேரமும் எடுத்துச் செல்லக்கூடியதான ஒரு EMERGENCY DISASTER KIT எனப்படும் அவசர அனர்த்த பெட்டி ஒன்றை தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். அப் பெட்டியில் முதலுதவிக்குத் தேவையான மருந்து, பிளாஸ்ரர், கட்டுத் துணிகள்— தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு, அதனைத்திறக்க வெட்டுக்கருவி, பாட்டரியில் இயங்கும் ரேடியோ, ஒரு டார்ச் லைட், அதற்குரிய பட்டரிகள் என்பவற்றை வைத்துக் கொள்ளுங்கள். அனர்த்தங்கள் ஏற்பட்ட போது உங்களுடன் இதனை எடுத்துச் செல்லவும்.

இது தவிர மூன்று கலன் குடிக்கும் நீர், பாதுகாப்புத் துணிகள், வயதானவர்கள் வீட்டிலிருந்தால் அவர்களுக்குரிய மருந்துகள், பாலூட்டும் குழந்தைகளிருந்தால் பால்மா என்பவற்றை எந்நேரமும் தயாராக வையுங்கள். இரவில் தூங்கும்போது படுக்கையில் ஒரு டார்ச் விளக்கு அவசியம் வைத்துக் கொள்ளவும்.

வீட்டிலுள்ளோர்— குழந்தைகள் எ[illegible]போருக்கு சமையல் வாயு சிலிண்டர்களை மூடிவிடும், வீட்டு மின் சப்ளைகளை துண்டித்துவிடும் பயிற்சிகளை அளித்துத் தயார் பண்ணிவையுங்கள். முக்கியமானது எந்த அனர்த்தத்திலும் பதட்டப்படாமல் காரியம் ஆற்ற வேண்டும்.

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுகள்


1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள் நடைபெற்று முப்பத்தொரு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் இது இன்னமும் மாறாத வடுவாக இருந்துகொண்டேயிருக்கிறது.

பல தடவைகள் அழியுண்டு மீண்டும் முளைத்த அழிவின் நினைவுச்சின்னங்கள் இன்றும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் மக்களுக்கு அன்றைய அரச பயங்கரவாதத்தின் கொடூர நிகழ்வுகளை மீட்டிக்கொண்டிருக்கின்றன.

வரலாற்றில் சில நிகழ்வுகள் பெரும் திருப்புமுனைகளை ஏற்படுத்திவிடுகின்றன. தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு அத்திவாரமிட்ட நிகழ்வுகளில் முக்கியமானதாக இப்படுகொலைகள் திகழ்கின்றன. தமிழ் இளைஞர்களின் பாதை மாறியது. ஆயுதத்தால் அடக்குபவனுக்கு ஆயுதத்தாலேயே பதிலளிக்க வேண்டும் என்ற உணர்வு இளைஞர்களை நீண்ட ஒரு விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கு இட்டுச்சென்றது.

உலகத் தமிழாராய்ச்சி மன்றம் 1960களின் நடுப்பகுதியில் அருட்திரு தனிநாயகம் அடிகளின் முயற்சியினால் தோற்றுவிக்கப்பட்டது. இம்மன்றமே உலகம் தழுவிய வகையில் உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்திவந்தது. இந்தவகையில் முதலாவது மாநாடு 1966இல் மலேசிய அரசின் ஆதரவுடன் அதன் தலைநகரான கோலாலம்பூரிலும், இரண்டாவது மாநாடு 1968 இல் இந்திய அரசின் ஆதரவுடன் சென்னையிலும், மூன்றாவது மாநாடு 1971இல் பல்வேறு தமிழ் அமைப்புகளினதும், பிரான்ஸ் அரசின் ஆதரவுடனும், அதன் தலைநகர் பாரிஸிலும் இடம்பெற்றது.

மூன்றாவது மாநாடு நடக்கும்போதே அருட் தந்தை தனிநாயகம் அடிகளினதும், இலங்கைத் தமிழாராய்ச்சி மன்றக்கிளையினதும் வேண்டுதலின்பேரில் 1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.



மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை அன்றைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இடது சாரி கட்சிகளின் கூட்டணி அரசாங்கம் விரும்பவில்லை. கொழும்பில் நடத்துவதாக இருந்தால் ஆதரவு தருவதாக ஆட்சியாளர் கூறினார்.

தமிழினம் தமிழ்மொழியின் பெருமையை, தனது பண்பாட்டை, தனது கலையை பாதுகாத்து தமிழினம் தனது தாயகத்தில் கொண்டாடுவது சிங்கள இனவாத அரசாங்கத்துக்கு சினமூட்டியது. இயல்பாகவே தமிழின விரோத உணர்வுடனும் பௌத்தசிங்கள மேலாதிக்க சிந்தனையுடனும் உள்ள தென்னிலங்கைச் சிங்கள அரசால் தமிழர் தங்களது தனித்துவத்தைப் பேணும் விழாவை கொண்டாடுவதை சகித்துக்கொள்ள முடியவில்லை. எனினும், தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையினர் அதனை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவதற்கு நடவடிக்கையை மேற்கொண்டு தீவிரமாக உழைக்கத் தொடங்கினர்.

மாநாட்டுக்கென விழாக்குழு அமைக்கப்பட்டது. நிதிக்குழு, வரவேற்புக் குழு என பல்வேறு உபகுழுக்கள் அமைக்கப்பட்டன. கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் விழாவுக்கான நிதி சேகரிக்கப்பட்டது. மக்கள் நிதியினை வாரிவழங்கினர்.

ஆனால், அரசு தொடர்ச்சியாக முட்டுக்கட்டைகளைப் போட்டுவந்தது. கொழும்பில் நேரடியாகவும் யாழ்ப்பாணத்தில் அப்போதைய யாழ்.மாநகரசபை மேயரும் சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான அல்பிரட் துரையப்பாவினூடாகவும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பிய பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில், மாநாகரசபைக்கு சொந்தமான அரங்குகள் மறுக்கப்பட்டன.

மறுப்பு நடவடிக்கைகள் அதிகரிக்க அதிகரிக்க மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற உத்வேகம் வலுப்பெறத் தொடங்கியது. அமைப்பாளர்கள் மாற்று ஒழுங்குகளை செய்யத் தொடங்கினர். யாழ்ப்பாணம் திறந்தவெளி மண்டபம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி போன்றன தெரிவுசெய்யப்பட்டன.

மக்கள் அலைஅலையாக மாநாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அரசுக்கெதிரான உணர்வு அதிகரிப்பதைக் கண்ட அரசு இறுதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது. அத்துடன் வீரசிங்கம் மண்டபம், யாழ். திறந்தவெளி அரங்கு போன்ற மாநகரசபையின் அரங்குகளை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

கொழும்பு பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தில் நடத்துமாறு கோரிய அரசின்

**-பிங்கலன்-**

முகத்தில் சேறுபூசி மாநாட்டு விழா ஜனவரி 3 இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது.

யாழ். நகரம் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து காணப்பட்டது. இரவு மின் ஒளிகளால் பகலாகிக் காணப்பட்டது.

யாழ்.நகரம் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு ஊரும் விழாக்கோலம் பூண்டிருந்தது. சோடனைகள், சிகரங்கள், மணவறைகள், சப்பறங்கள், வாழை, கமுகு, தென்னை என்பவற்றால் வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் வீரசிங்கம் மண்டபத்திலும், கலை நிகழ்ச்சிகள்

(23 ஆம் பக்கம் பார்க்க)




unicef

## NATIONAL CHILD PROTECTION AUTHORITY

**No. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka. Telephone : 94-2778911-14 Fax : 94-2778915**

**E-mail: ncpa@childprotection.gov.lk**

**Website: http:/www.childprotection.gov.lk**

### பாதிக்கப்பட்ட சிறுவர்களை தத்தெடுத்துக்கொள்ளல் - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவரின் செய்தி.

கடல் கொந்தளிப்பால் நிர்க்கதியாக்கப்பட்ட, அநாதையாக்கப்பட்டோரில் அநேகமானோர் சிறுவர்கள். இங்கு நிர்க்கதியாக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் வேறு இடங்களில் இருக்கலாம். பெற்றோர்களை இழந்த சிறார்கள் அநாதையாக்கப்பட்டிருக்கிறார்கள். இலத்திரனியல் ஊடகங்களின் மூலமாக அநாதையாக்கப்பட்ட சிறுவர்களை தத்தெடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் உண்டு என்று பிரசாரம் செய்யப்படுகின்றது. இது சட்டத்திற்கு முரணான செயலாகும். நீதிமன்றத்தின்மூலம் சட்டரீதியாக தத்தெடுத்தல் உறுதி செய்யப்பட்டால் மாத்திரமே சிறுவர்களை நாம் தத்தெடுத்துக்கொள்ள முடியும். இவ்வாறு சட்டரீதியற்ற முறையில் நிர்க்கதியாக்கப்பட்ட, அநாதையாக்கப்பட்ட சிறுவர்களை தத்தெடுத்துக்கொள்ள முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, மாகாண சிறுவர் பராமரிப்பு திணைக்களம், எல்லே குணவங்ச தேரர், அரச சார்பற்ற நிறுவனங்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து முதல் கட்டமாக கடல் கொந்தளிப்பால் அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்களின் விபரங்களை திரட்டி வருகின்றனர். சேகரிக்கப்படும் விபரங்களைக் கொண்டு நீண்டகால வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும். அதன்பின்னர் அநாதைச் சிறுவர்களை நீதிமன்றத்தி னூடாக சட்டரீதியாகத் தத்தெடுத்துக்கொள்ள முடியும்.

இவ்வாறு நாம் தகவல் தெரிவிக்கவேண்டியதின் காரணம், பாதிப்புக்குள்ளான இடங்களில் சந்தர்ப்பவாதிகள் சிலரினால் மேற்கொள்ளப்படும் திருட்டு சம்பவங்கள், சிறுவர்களை வேலைக்கமர்த்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதைத் தவிர்த்துக்கொள்வதற்காகவே இவ்வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றோம்.

இவ்வகையான சந்தர்ப்பங்களில் எமது சொந்தமில்லாத குழந்தை, அயல் வீட்டிற்கு உரித்தான குழந்தை அநாதரவாக இருப்பின் இது சம்பந்தமாக பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், பொலிஸ் அல்லது சிறுவர் பராமரிப்பு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துங்கள். இதைப்போல் அநாதை சிறுவர்களின் விபரங்களை திரட்டுவதற்கான தேவையான தகவல்களை-

- தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையின் **2778915** என்ற பெக்ஸ் இலக்கத்திற்கும், **2779196, 077-3070327** என்ற தொலைபேசி இலக்கங்களுக்கும், இல. **330**, தளவத்துகொடை வீதி, மாதிவெல, பிடகோட்டை என்ற முகவரியுடனும் தொடர்புகொண்டு தெரிவியுங்கள்.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,
தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா

குறிப்பு : குமுதுமாலி மத்துமகே

Suntel WOW
THE WEB AS YOU'VE NEVER KNOWN IT

# சண்டெல் வழங்கும்

## அவசர நிவாரண வலையமைப்பு

பாதிக்கப்பட்ட பகுதிகளை மீள ஒன்றிணைத்து, பரிகாரம் தேடுகின்ற திறமைவாய்ந்த பயணத்தைத் துரிதப்படுத்துவதே சண்டெல்லின் முக்கிய பணியாகும். இந்த வலையமைப்பிற்குள் மேலும் புதிய இலக்கங்களைச் சேர்த்து நாம் புத்துயிரளிப்போம்.


| | | |
|---|---|---|
| சனாதிபதி அலுவலகம் | கொழும்பு | 011 4740231 - 8 |
| சனாதிபதிச் செயலகம் | கொழும்பு | 011 4740270 - 8, 011 4740253<br>www.tsunamisrilanka.org |
| பொலிஸ் நிலையங்கள் | அம்பலாந்தோட்டை | 047 4379650, 047 4379651, 047 4379646 |
| | கதிர்காமம் | 047 4379964, 047 4379965 |
| | ஹிக்கடுவை | 091 4383295, 091 4383192 |
| | பாணந்துறை | 038 4281881, 038 4281904, 038 4281873 |
| | கெசெல்வத்த | 038 4281856, 038 4281859, 038 4281849 |
| | களுத்துறை | 034 4280304, 034 4280827, 034 4280829 |
| | களுத்துறை தெற்கு | 034 4280807, 034 4280816 |
| | களுத்துறை வடக்கு | 034 4280810, 034 4280837 |
| | பேருவளை | 034 4288441, 034 4288336 |
| | வாதுவ | 038 4284246, 038 4284249, 038 4284223 |
| | அளுத்கமை | 034 4289395, 034 4289403 |
| | காலி - SSP அலுவலகம் | 091 4384829, 091 4384831, 091 4384834 |
| | காலி - DIG அலுவலகம் | 091 4384876, 091 4384868, 091 4384386 |
| | அஹுங்கம | 091 4384942, 091 4384946 |
| | ஹபராதுவ | 091 4384906, 091 4384930 |
| | ஹம்பாந்தோட்டை | 047 4379950 - 2 |
| | மாத்தறை - DIG அலுவலகம் | 041 4390417, 041 4390424, 041 4390357 |
| | மாத்தறை - SSP அலுவலகம் | 041 4390047, 041 4390066, 041 4399096 |
| | மொறட்டுவை - ASP அலுவலகம் | 011 4212715 |
| இலங்கை வான்படை | கட்டுகுருந்த வான்படைத்தளம் | 034 4280747, 034 4280847 |
| | வான்படைத் தலைமையகம் | 011 4740241 - 6 |
| இலங்கை கடற்படை | றங்கல துறைமுகம் - கொழும்பு | 011 4740267 - 8 |
| உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் | ஹம்பாந்தோட்டை - AGA அலுவலகம் | 047 4379953 - 4 |
| | மாத்தறை - AGA அலுவலகம் | 041 4390432 |
| | களுத்துறை - AGA அலுவலகம் | 034 4280182, 034 4280184 |
| பொது மருத்துவமனைகள் | ஹம்பாந்தோட்டை | 047 4379451 - 2 |
| | மாத்தறை | 041 4390568 - 9 |
| | கொழும்பு | 011 4740096 |
| | யாழ்ப்பாணம் | 021 4591889, 021 4591890 |
| இலங்கை சுற்றுலாச் சபை | கொழும்பு | 011 4740220<br>www.contactsrilanka.org |
| சிரச சஹன யாத்ரா | மாத்தறை - உயன்வத்தை நிலையம் | 041 4390621, 041 439625 - 7, 041 4390256 |
| பொது | ராகம தேவத்தை தேவாலயம் | 011 4820625 - 6 |
| | சேர்ச் ஒவ் சிலோன் | 011 4740261 |
| | கதிர்காமம் - கிரிவெஹர | 047 4379966 - 7, 047 4379957 - 8 |
| | கதிர்காமம் - சுகாதார அமைச்சின் சுற்றுலா விடுதி | 047 4379889 |
| | காலி - கோட்டை | 091 4384769, 091 4384895 |
| | ஹம்பாந்தோட்டை - தர்மகபீர் பள்ளிவாசல் | 047 4379660 - 1 |
| | சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மீளிணக்க நிலையம் | 011 4528457 |
| | மருத்துவபீட மாணவர் மன்றம் - கொழும்பு | 011 4615081 |
| | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் | 021 4591886 |
| | பொற்பதி கோவில் - கொக்குவில் | 021 4591887 |
| | யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையம் | 021 4591891 |
| | ஹம்பாந்தோட்டை - மாகாண சேவைப் பணிப்பாளர் | 047 4379286 |
| | பாணந்துறை - இளைஞர் மத்தியஸ்தம் | 038 4281304 |
| | களுத்துறை - தேசிய விஞ்ஞான சுகாதார நிறுவனம் | 034 4280130 |
| | களுத்துறை - எதன்மடவள மஹா வித்தியாலயம் | 034 4280369 |
| | கொழும்பு - ஸ்ரூம் ஆசிய ஸ்தாபன பிரதேச காரியாலயம் | 011 4615408, 011 4616947 |

SOS:
**சண்டெல் வாடிக்கையாளர்களே, 5 மில்லியன் ரூபாவினால் சண்டெல் ஆரம்பித்துள்ள நிதியத்திற்கு தயவுசெய்து நீங்களும் பங்களிப்புச் செய்யுங்கள்.**
**அழையுங்கள் : 4 746746 அல்லது**
**இணையுங்கள் : www.wow.lk.**

Suntel
தொலைத்தொடர்பில் உங்கள் ஆயுட்காலப் பங்காளி

Q & E Advertising

வாசுகி கந்தசாமி



# இனியும் இங்கு பிறந்தால்....

சுடர் ஒளி சிறுகதை

"என்னால் தானம்மா ஆதிக்கு இந்த நிலை! லேபல் பண்ணாத செறிவான 'அசிட்' போத்தலை அவன் பக்கத்தில வச்சிட்டு நான் வெளியே போனதாலதானம்மா இந்த விபரீதம்!" என்று குலுங்கி அழும் குகனேசனிடமிருந்து நழுவிய நாளேட்டைக் கையிலெடுத்தாள் ஞானமலர்.

பெட்டிச் செய்தியாக வெளிவந்திருந்தது அது:

மத்திய கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடத்தில் அனர்த்தம்!

உயர்தர வகுப்பு 'இளம் விஞ்ஞானி' உயிர் ஊசலாட்டம்!

"இரண்டு கண்களிலும் பார்வை பறி போயிட்டதாம்... கடுமையான முகக்காயம் காரணமாக மூச்செடுத்து விடுகிறதிலும் சிக்கல். அதைச் சீர்ப்படுத்த உடனடியாக தொண்டையில் ஆப்பரேசன் செய்து குழாய் பொருத்தணுமாம்.... ஐயோ ஆதி, உன் உயிருக்கு நானே உலைவச்சிட்டேன்....!"

"குகன், நீ அறியாமல் எதேச்சையாக நடந்த சம்பவம் இது. இதையே திரும்பத் திரும்ப சொல்லி புலம்பிக்கிட்டிராதே. ஏற்கனவே பஞ்சாட்சரம் மாமா குடும்பத்துக்கும் உங்கப்பாவுக்கும் இடையிலுள்ள தகராறு இந்தப் பிரச்சினையால வீதிக்கு வந்திடும்; ஊர் சிரிக்கிற அளவுக்கு அசிங்கமாயிடும்."

"என்ன.. இரண்டு வீட்டுக்குமிடையில கொழுவலை உண்டுபண்ணுற மாதிரி எது நடந்துச்சு?" என வினவியவாறு ஈரத் தலையைத் துடைத்தவாறு வெளிப்பட்டார் சதானந்தன். அவன் குரல் அடைத்துப்போய் நிற்க அம்மா ஒன்றும் விடாமல் அவரிடம் ஒப்புவித்தாள்.

"அட, அதுக்கு நீயென்ன செய்வாய்? உயிராபத்தை உண்டு பண்ணுகிற சேர்வைகளை அனாமதேயமாக வைத்திருந்தது இரசாயன பாட வாத்தியாரின் முழுப் பிழை! ம்ம்..... பெற்றவர்களின் பழி, பாவம் பிள்ளைகளை ஒறுக்கும்னு சொல்லுவாங்க. இதுவும் கூட....."

"அப்பா... இந்த நேரத்தில போய் உங்களுக்கிருக்கிற மனக்கசப்பை இப்படி வார்த்தைகளால கொட்டணுமா?" குகனேசன் அப்பாவின் நியாயப்படுத்தலினால் நொந்துபோனான்.

எவ்வளவுக்கு அன்னியோன்யமாக இருந்த குடும்பங்கள் இரண்டும்! இன்று குரோத உணர்வுகள் புரையோடிப்போய் தெருவில் எதிர்ப்பட்டால் கூட உறுத்துப் பார்த்தபடி ஒதுங்கிப் போகும் போக்கு... ஊரில் கொண்டாட்டங்கள், வீட்டு விசேட தினங்களிலும் ஒருவரை மற்றவர் புறக்கணித்து நடக்கும் நிலை.....

"அப்பா, எங்களைப் போல பஞ்சு மாமாவும் நீங்களும் ஒரே வகுப்பிலதானே உட்கார்ந்து படிச்சீங்க..... இருவரும் ஒரே வாத்தியாரின் வழிநடத்தலிலதானே புடம் போடப்பட்டீங்க.... தொழிற்கூட பங்குதாரர்களாகவே ஆரம்பிச்சீங்க! பிறகேன் இந்த விரிசல் - இடைவெளி?"

"................."

"பதில் பேசுங்கப்பா. சரி உங்களுக்குள்ளே ஆழவேரோடின பகை உங்களோடயே முடிந்து போகக்கூடாதா..... இப்ப வாழுற சந்ததி - பிள்ளைகள் நாங்களும் கூட விலகி நடக்கணுமா?"

"குகன்.... நீ இப்ப பெற்றவங்க நிழலில வாழுறாய். ஒரு பொறுப்பு வாய்ந்தவனாக இந்தச் சமூகத்தில் தலையெடுக்கும்போது தான் உலகத்தைப் புரிஞ்சுப்பே. விடலைப் பருவத்து வாசலில நிற்கிற உனக்கு, பெரியவங்க எதை இடிச்சுச் சொன்னாலும் விளங்கப் போறதில்லை."

"பஞ்சு மாமா உங்களுக்கு அப்படியென்ன துரோகம் பண்ணினார்? வெளிப்படையாகச் சொல்லப்போனால் அவரின் தயாள குணத்தை நீங்கள் சரியா புரிஞ்சு கொள்ளலை. உங்க இளமைப் பருவத்துக் காதலுக்கா - அம்மா மேல கொண்டிருந்த ஒருதலைக் காதல் ஈடேற வேணும் என்ற ஒரே நோக்கத்துக்காக தன்னோட ஆறாண்டு கால காதல் வாழ்க்கையை தியாகம் பண்ணினாரே! நட்பை நிலைநிறுத்த வேண்டி தனக்கிருந்த வளமான எதிர்காலத்தையே தூக்கி எறிஞ்சார். அம்மாவோட பந்தந்தினால தாத்தா பாட்டி காலமானதுக்குப் பிறகு அவ்வளவு முதுசமும் உங்களுக்கென்று ஆச்சு!"

"டேய் குகன்..... ஆரிடம் எதைப் பேசுறாய்? அப்பாகிட்ட மகன் பேசுற பேச்சா இது?" எதுவரை விலகிநின்ற ஞானமலர் பொரிந்து தள்ளினாள். அவளது கடந்த காலம், பெற்ற மகன் மூலம் கிளறப்பட்டதால் வெகுண்டு போனாள்.

இலங்கை வானொலியில் 'பொங்கும் பூம்புனல்' ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

"இவ்வளவுக்குப் பிறகும் எல்லாத்தையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டு இருந்திட முடியலேம்மா. பாலர் வகுப்புத் தொட்டு பத்தொன்பதாண்டுகள் நிலைச்சிட்ட சினேகிதம் ஆதியோடு! இந்த மியூசிக்கை கேட்கையில் உங்களுக்கு ஞாபகம் வருகுதாம்மா, 'ஸ்கொலர்சிப்' படிக்கும் வரைக்கும் நாள் தவறாமல் என்னைத் தன்னோட 'சொப்பர் சைக்கிளில்' ஏற்றிப் போக இதே நேரம் வந்து நிற்பானே.... அவன் வீட்டில் காரணமேதுமின்றி கோபித்துக் கொண்டு வரும் சமயங்களில் அடுக்களைக்குள் புகுந்து உரிமையோடு சாப்பாடு போடென்று உன்னிடம் அதிகாரம் பண்ணுவானே....."

அவன் உருக்கமாகச்சொல்ல தாயின் விழியோரங்களிலும் ஈரம். "ம்.. நான் சொல்வதையும் கொஞ்சம் காதில போடுடா. உன் தங்கை - அனுசியா இப்ப கொஞ்ச நாட்களாகத்தான் அந்த ஆதித்தன் நினைப்பை மறந்துட்டு தையல்வேலை, டைப்பிங் வகுப்புன்னு இயல்பாக இருக்க ஆரம்பிச்சிருக்கிறாள். இந்த நேரத்தில பழசுகளை மீட்டு அவ மனசில சஞ்சலம் உருவாக வேண்டாம்.... அப்புறம் அவள் எதிர்காலம் பாழாகிப்போக நீயே காரணமாக இருந்துடாதே!"

அம்மா சொல்லவருவதன் அர்த்தம் குகனுக்குப் புரிந்தது. ஆதியுடன் அவனுக்கிருந்த நட்பின் நெருக்கமே அனுசியாவுக்கும் ஆதிக்குமிடையில் காதல் மலர வழி சமைத்தது.

குகன் சட்டைப்பையை தொட்டுப் பார்த்தான். இரண்டு வாரங்களுக்கு முன் அனுவிடம் சேர்ப்பிக்கும்படி ஆதி தந்த கடிதம் இன்னும் சேருமிடம் சொல்லாமல் அஞ்சற்காரனிடமே காத்திருக்கிறது.

"நல்லா உறைக்கச் சொல்லு ஞானம். கூடப்படிக்கிறவன்என்ற முறையில உவன் மட்டும் ஆசுப்பத்திரிக்குப் போயிட்டு வரட்டும்; மற்றவர்களெவரும் வருவதற்கில்லை. கத்திரித்துக் கைவிட்ட தொடர்புகளைப் புதுப்பிக்கிறதால மேலும் வில்லங்கங்கள் விளைய வேண்டாம்...."

அம்மாவும் அப்பாவும் முடிவாய்ச் சொல்லிவிட வெறுத்துப் போய் உள்ளே நகர்ந்தான். ஹோலில் ரீ.வி திரைக்கு முன்னால் சாப்பாட்டுத்தட்டைக் கையில் வைத்திருந்த அனு இடியப்பத்தை விரல்களால் சிக்கெடுத்துக் கொண்டிருந்தாள்.

அவள் எதிர்கால வாழ்கையும் இந்த இடியப்பச்சிக்கலைப்போன்று..... "அண்ணா, அவர் - ஆதிக்கு என்ன ஆச்சு? காலையில் நீ என்னிடம் சொன்னதெல்லாம் பொய் தானே!"

"ஆதிக்கு அப்படி பயப்படும் படியா ஒண்ணுமில்லை.... மூணு அல்லது நாலு நாளில துண்டு வெட்டிடுவாங்க....."

"நீ அம்மாவோட கதைச்சதை நான் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். உயிருக்குப் போராடிக்கிட்டிருக்கிறவங்க உயிரை இழுத்துப் பிடிக்கத்தானே 'ஐ.சி.யு வாட்டில' அனுமதிப்பாங்க....!" என்ற தங்கையை நேரே பார்த்துப் பேச துணிவின்றி அவசரமாக அங்கிருந்து அகன்றான்.

* * * * *

தேசிய விளையாட்டு விழாவுக்கு மாவட்ட ரீதியிலான அணிகளின் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிழக்கு மாகாணத்திலிருந்து குகனின் மத்திய கல்லூரி சார்பாக வழமையாகக் கலந்து கொள்ளும் அஞ்சலோட்டக் குழுவிற்கு இம்முறை வாய்ப்பில்லாமல் போய்விட்டது. போட்டியின் முதல் இருநூறு மீற்றர் தூரத்தை ஓடிக் கடந்து ஆரம்ப இடைவெளியை எடுத்துத் தரும் ஆதித்தனுக்கு மாற்றீடாகப் போடப்படக் கூடியவர்கள் இல்லாததாலேயே இந்தத் தொய்வு!

ஆயினும் கல்லூரி சார்பில் தனிநபர் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் குகன் தெரிவானான். பலத்த போட்டியின் மத்தியில் தெரிவாகியிருந்தும் அவனில் உற்சாகமில்லை; தேசிய மட்டத்தில் கல்லூரியின் பெயர் கொடிகட்டிப்பறக்க இன்னும் வீச்சாகப் பயிற்சி செய்ய வேண்டுமென்ற ஓர்மம் இல்லை.

ஆசுப்பத்திரியே கதியெனக் கிடக்கும் ஆருயிர் நண்பன்... அவன் நினைவால் உருக்குலைந்து முடங்கிக் கிடக்கும் தங்கை.... இவற்றின் விளைவாக இரு குடும்பங்களிலும் சீர்குலைந்து போன நிம்மதி....

அனைவரிலும் அதிகமாக நொருங்கிப் போனது தங்கை அனுசியாதான்! அவளுக்கென ஆதி எழுதித்தந்த கடைசி மடலை மனம் பொறுக்க முடியாமல் காலையில் பிரித்துப் பார்த்து விட்டான். இரு உள்ளங்களின் சங்கமத்தை, எந்தவொரு இதிகாச கர்த்தாவும் - படைப்பாளியும் சொல்லாத சேதியை, எழுத்தாளாத கருத்துக் கோர்வையை கண்கள் பனிக்க இரண்டாது தடவையாகவும் வாசித்துப் பார்த்தான்.

இதே பிரக்ஞை தானே அனுசியாவிடமும் குடிகொண்டிருக்கும்!

இருவரும் கனவு கண்டுள்ள எதிர்கால வாழ்க்கை கானலாகிப் போய்விடும் என்பதை எவ்வாறு ஜீரணித்துக் கொள்ளப் போகிறார்கள்!

"குகன் இதுதான் கடைசி முறை. கொஞ்சம் வேகமாக ஓடிவந்து கோலை ஊன்றி மேலேழ முயற்சிசெய்" என்ற பயிற்சியாளருக்குச் செவிசாய்த்துவிட்டு அந்த நீண்ட மூங்கிற்கோலை நெஞ்சுக்குக் குறுக்கே பிடித்துக் கொண்டான்.

'கடவுளே, இந்த ஜென்மத்தில் கைகூடாது போன இருவரின் காதலை - மனமொத்த வாழ்க்கையை இனிமேலும் இங்கொரு பிறப்பிருந்தால்.... அப்போதாவது அவர்களுக்குக்கொடு' என்று உள்ளுர பிரார்த்தித்தபடி விரைந்து வந்தவன் நீண்ட கோலின் ஒரு முனையை வாகாகத் தரையில் பதித்து நுனிக்காலை உன்னி மேலெழுந்தான். நிலத்தில் மோதிய இறப்பர் பந்துபோல விசையாக உயர்ந்தவன் கைப்பிடி நழுவிய அந்தக் கணத்தில் நிலைதடுமாறி கட்டுப்பாடிழந்தான். அந்தரத்தில் தலைகீழாக விழுந்தவன் பிடரியை கீழே தடையாக வைத்திருந்த உருக்குக்கேடர் பதம் பார்த்தது.

பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அலறியடித்தவாறு காரில் அவனைப்போட்டுக் கொண்டு விரைய, நினைவழியும் அந்த நேரத்தில் அவன் உதடுகள் பிரிந்து சொன்னவை "இனியும் இங்கு பிறந்தால் அப்போதாவது..." என்பதுதான்.

குகன் வீடபத்துக்குள்ளாகி ஒருதிங்கள் கடந்த நிலையில் ஆதி வீட்டவர்கள் அனுபவித்த துயரம், வாழ்க்கை மீதான பிடிப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# கவிதைப் புனல்

## விரக்தியின் வேலி

அரைச் செங்கற்
சுவர்களினால்
அமைக்கப்பட்டதொரு
சிறையினுள்
சிறைப்பிடிக்க முடியா
கனவுகள் பலவிற்கு
சொந்தக்காரன் நான்!
ஒருபோதும்
உயர்த்தப்படா
கைகளையுடைய
பின்வரிக்கு
கட்டளை
பிறப்பிக்கும்
பதவி கிடைக்கா
தலைவன் நான்!
எழுத்துக்கள் தெரிந்து
இலக்கங்களும் புரிந்த
முன்வரிசை
சகாக்களுக்கான
பாடங்களின்
மத்தியில்
உங்கள் விழிக்கு
ஒருபோதும்
அகப்படாத
ஆதரவற்ற
அன்பர்களுக்கு
ஆறுதல்
கொண்டுவரும்
நகைச்சுவை
மன்னன் நான்!
தேர்ச்சி அறிக்கை மீது
சிவப்பு, பச்சை,
மஞ்சள் நிறங்கள்
அத்தனையும்
உறிஞ்சிக்கொண்ட
கருப்புப்
புள்ளிகளின்
நிறங்களுக்கு
உரிமை கூறும்
நிர்வாணி நான்.

*ஜாவிட் ரயிஸ்,*
*திக்கலூர்.*

## நாக்கு

ஆயுதம் தரிக்காத
அரசியல்வாதி.

## தாலி

கொண்டவன்
உயிரில்
ஆடும் ஊஞ்சல்.

## இரகசியம்

மனித
வாழ்வில்
விழப்படாத
மர்ம
முடிச்சுகள்

## விபச்சாரி

எழுதப்பட்டது
அவள்
கல்லறையில்
இன்றுதான்
இவள்
தனியே
உறங்குவதாய்.

*கு.தவசீலன்,*
*விஸ்வமடு.*

## பின்விளைவு

நீ
அவனோடு சிரிக்கிறாய்.
நான் என்னோடு
அழுகிறேன்.

## அடைகாப்பு

ஓராயிரம்
குஞ்சுகள் பொரித்து
நான்
அடைகாத்த
ஒரே முட்டை
உன்
நினைவு.

## நடப்பு

ஊர் வற்றிப்போன
உன் வீட்டுத்தெருவில்
நடக்கிறோம்
நானும்-உன்
நினைவுகளும்.

## வாடிக்கை

காத்திருக்கும்
போதெல்லாம்
நான் காணாமல்
போவதும்
உனைக் காணும்
போதெல்லாம்
நான் காணாமல்
போவதும்
நம்
வாடிக்கைதானே?

*வே.தினகரன்,*
*பத்தனையூர்.*

## நடமாடும் நரகங்கள்

நியதிகளுக்குள்
நிலை பெறாத
நிர்மூலங்களே
வரம்பிட முடியா
வக்கிரகங்களாய்
வந்துபோகும்
வானவில் உணர்ச்சிக்கு
வர்ணம் தீட்டி
வனப்புக் கொண்டது போதும்.
விளங்க முடியா
விபரீதங்களாய்
வியூகம் காட்டும்
விதியின் விழுதுகளுக்கு
விருத்தம் பாடியது போதும்.
குழந்தைக் கனவுகளின்
குருட்டு
குந்தகங்களுக்கும்
மரபு வேலிக்குள்
மலர்ச்சி காணா
மத மொழிகளுக்கும்
மணமுவந்து
மண வாசலில்
மாவிலை தோரணம்
கட்டியது போதும்.
நடமாடும் நரகங்களாய்
நடைப்பிணமாய்
நகல்களுக்கு மட்டும்
நயப்புரை எழுதி
இன்ப ராட்டினமாய்
இகலோக
இன்பங்களில்
சுழற்சி பெறும்
சுற்றங்களே
உங்கள் முகத்திரையில்
முதுமைக்கோடுகள்
முஹாரி பாடுமுன்
முழுமையைப் பெறு.
போலிப் பிரஸ்தாபங்கள்
அழியா அழுத்தங்களாய்
பல அவதூறுகள்
உன்னில்
அரங்கேறிப்போகும்.
அணுவளவேனும்
அஞ்சாதே!
அவதாரமாய் புது
அத்தியாயமாய்
அடையாளம் காட்டு
முன் மாதிரியாய்
உன் முகவரிகள்
முரசு கொட்டும்.

*எஸ்.மனோஹரன்,*
*ஹட்டன்.*

## சொல்லாதே

என்னை
பூவாய் மாறி
புயலை
சந்திக்கச் சொல்
மீனாய் மாறி
வலையை
சந்திக்கச் சொல்
மானாய் மாறி
கணையை
சந்திக்கச் சொல்
இலையாய் மாறி
உதிர்வை
சந்திக்கச் சொல்
கனியாய் மாறி
கற்களை
சந்திக்கச்சொல்
ஆனால்...
உன் காதலியாய்
உருவெடுத்த பின்
உன்
பிரிவை மட்டும்
சந்திக்கச் சொல்லாதே
அதை
நொடிப்பொழுதேனும்
சந்தித்தால்
மறுகணம்-என்
இதயம்
நிரந்தர ஓய்வினை
நிச்சயம் சந்திக்கும்.

*வதனி,*
*பூநகரி.*

## தொலைவினில்

என் கவிதைகளை
நான்
பரிசளித்தேன்
அவள் கலைத்தாள்
தேன் கனியாய்!
என் ஆசைகளை
நான்
பரிசளித்தேன்
அவள் ரசித்தாள்
தேவதையாய்!
என் பௌர்ணமியை
நான்
பரிசளித்தேன்
அவள்
பூரித்தாள்
மெல்லினமாய்!
என்
இனியவளை
நான் நேசித்தேன்
அவள்
மௌனமாய்
பதிலளித்தாள்.
ஆனால்
என்னவள்
தொலைவில்
போனபோது
இப்போது
தவிக்கிறேன்
அவளை எண்ணி.

*யமுனா,*
*யாழ்ப்பாணம்.*

## புது வசந்தம் வீசி புத்தாண்டே நீ வருக

நெஞ்சமெல்லாம்
நிம்மதி பிறக்க
துன்பங்கள் ஓடி
துயரெலாம் விலக
மங்களம் பொங்கி
மகிழ்விங்கு நிலைக்க
புத்துவரும் புத்தாண்டே
புது வசந்தம் வீசி வா!
வீசுகின்ற
இளம்காற்றே—எம்
தேசமெங்கும் சென்று
வாசம் வீசும்
புத்தாண்டு
வசந்தங்கள்
தருமென்று சொல்.
நேசம் கொண்ட
எம் உறவுகள்
நிம்மதியாய்
வாழ்ந்திடவே—தமிழ்
தேசமொன்று
மலருமென்று
பாசமுடன் கூறிவிடு.
செய்த குற்றம்
தெரியாது
கைதாகி நிற்போர்க்கு
நல்லதொரு
சேதி கொண்டு
வல்ல ஆண்டு
வருகுதென்று
சிறைக்கதவை
திறந்து கொண்டு
சீக்கிரமாய்
சேதி சொல்லு
சிறகசைக்கும்
இளங்காற்றே!
யுத்தத்தின்
கோரத்தால்
உண்டான
சத்தங்கள் அடங்கிடவும்
மத்தாப்பு சிரிக்கின்ற
புத்தாண்டு பிறந்ததென்று
பூங்காற்றே நீ கூறு.

கி.திருவேணி,
யாழ்.பல்கலைக்கழகம்.

## எதைத்தான் எழுதுவது?

உறக்கமற்ற விழிகள்
உன்னைப்பற்றி
எதைத்தான் எழுதுவது?
வார்த்தை தேடி
வாழுகிறேன் இங்கே
உனக்குள் நான்
உயிராய் மாறி!
உன் சுட்டும் விழிகள்
சுட்டு எரிகிறது
என் இதயம் பற்றி.
உன் சுவாச விழிகள் பட்டு
புரிகிறது என்னைப்பற்றி
ஆனால்
எதைத்தான் கூறுவது
உன் புன்னகை பற்றி
பார்த்த பார்வையில்
என்
இதயக் கடல் வற்றி
ஒரேயொரு
வினாடியிலே
இளநெஞ்சம் முற்றி
உயிரே எரிகிறது
தீ போல்!
எதைத்தான்
எழுதுவது கண்ணே
உன்னைப்பற்றி?
வார்த்தைகளை
தேடுகிறேன்
என் கண்களை
நான் மூடி...!

*சி.குகானந்தன்,*
*விஸ்வமடு.*

## அவஸ்தை

நிசப்தமான
இராப்பொழுதுகளில்
அலைமோதும்
உன் காதல்
நினைவுகளால்
என் இளமையின்
சாயங்கள் கரைகின்றன.
விடியலைத்தேடுகிறேன்
முடியவில்லை.
உன் இம்சைகளால்
இரவும் எட்டிப்போகிறது.

*கணேஷ்,*
*முள்ளியவளை.*

## ஏன்?

இயற்கைக்கு
எம்மீது
ஏன் இந்தக் கோபம்?
எதுமறியா
பிஞ்சுகள் முதல்
ஏக்கங்கள் மலிந்த
முதியோர் வரை
காவு கொள்ள
துடித்ததேன்?
இயற்கைக்கே
எம்மீது
இத்துணை
கோபமெனில்
மனிதனை மனிதன்
ஒடுக்கும் அவலம்
என்றுதான்
ஓயும் இங்கு?

*எஸ்.நிலா,*
*கொழும்பு.*

## எங்கள் நிலை

நாங்கள்
பக்கத்து வீட்டாருக்கு -
பழைய செருப்புகள்.
ஒருசமயம்
கூலிக்கு
வேலை செய்யும்
கொத்தடிமைகள்.
இன்னோர் சமயம்
சட்டியில் மிஞ்சிய
அவர்களின்
ஒட்டி மீன்கறியும்
பானையில் ஒட்டிய
சொட்டிச் சோத்தையும்
கெட்டியாய்
உண்ணுகிற
குட்டிப்பிசாசுகள்.
வயிறு முட்ட
உண்பவரைப் பார்த்து
கொட்டாவி விடுகிற
கெட்ட பேர்வழிகள்.
அனாதையென்றும்
அடிமாடுகளென்றும்
பொய்யர்களென்றும்
பொறுக்கிகளென்றும்
போற்றப்படும்
பெருச்சாளிகள்.
பாசமென்பதை
தொலைத்துவிட்டு
அடைமழையில்
ஒன்று சேர்ந்த
அற்பக் குச்சிகள்.
இலட்சியமென்பதே
எங்களுக்கில்லை.
அதனால்தான்
வயிறு கழுவ
இடமிருந்தால்
வாழ்க்கைப் பயணத்தை
சக்கரம் செய்பவர்கள்.
பிறருக்காய் வாழ்ந்து
தங்களுக்காய்
மடிந்துபோனாலும்
உண்மை நிலைக்கும்
ஒரு கணத்தில்
நாங்கள் வாழ்ந்துகொண்ட
மக்களல்ல.
பிறரை
வாழ்வித்துச்சென்ற
வள்ளல்களென்று!

*செலின்தம்பி லியாம்,*
*கல்முனை-06.*

## மனு

பெண்ணே—உன்
மனச் சோலையில்
இடம் கேட்டுத்தானே
மனு அனுப்பினேன்.
நீ ஏன்
உன் தந்தையிடம்
சொல்லி என்னை
மாவட்ட
வைத்திய சாலைக்கு
அனுப்பிவைத்தாய்?

*வ.ரெங்கநாதன்,*
*தெப்பட்டான்.*

## நானும் தான்

தலையிழந்த
முண்டங்களாய்
தவித்து நிற்கும்
கற்பக தருக்களே...
குலையிழந்த
உறவுகளாய்
கலங்கி நிற்கும்
தென்னைகளே...
கூரையை
தொலைத்தவிட்டு
வானம் பார்க்கும்
சுவர்களே...
போரின் எச்சங்கள்
நீங்கள் மட்டுமல்ல
மிதிவெடியில்
இருகாலும் போன
நானும் கூடத்தான்..!

*தமிழின் தோழி,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## உறக்கம்

நித்திரையை
நான் தேடி
நித்தமும்
பயணிப்பேன்
நித்திரையே இல்லாத
நிசப்தப்
பொழுதுகளில்
ஓலைக்கிடுகினுள்
ஒத்துழைக்கும்
உறக்கம்
மாட மாளிகையில்
மறைந்து போகும்
மாயம் ஏன்?
சாதிச் சண்டையில்
ஒழிந்தது
ஒரு சிலர் தூக்கம்.
காவல் நிலையம்
புகுந்ததும்
மறைந்தது
மறு சிலர் தூக்கம்.
காதல் மயக்கம்
கண்டதும் சென்றது
காதலர் தூக்கம்.
கல்லறைக்குள்ளேயும்
கலகம்.
புரண்டு படுக்க
முடியா இடத்தில்
முரண்டு பிடித்து
முனகுது தூக்கம்.
அல்லும் பகலும்
மனிதர்கள்
கரைச்சல்.
ஊர்வன தொடக்கம்
பறப்பன வரைக்கும்
உள்ளுக்குள்
எரிச்சல்.
பறவைகள் உறவு
உறக்கம் கொடுக்கும்.
விலங்குகள்
சினேகம்
தூக்கத்தை
ஜெயிக்கும்
தேடினேன்
மனித வாசம்
அற்றதொரு
வனாந்தரத்தை.
பறவைகள்
கூடென்று
பத்திரமாய் இருந்தது
பயமின்றி
உறங்கினேன்
விடியு முன்னே
நானும்
விழிக்க வேண்டும்
என்றெண்ணி!

*கமால்தீன்.அல்.ஆஸாத்,*
*ஏறாவூர்—02.*

# அந்நிய படை வருகையும் ஜே.வி.பியின் மௌனமும்

இன்று இலங்கையை நோக்கி அமெரிக்கா 1 500 துருப்புகளையும், 20 ஹெலிகொப்டர்களையும் 5 சரக்குக் கப்பல்களையும் நகர்த்தி வருகிறது. அமெரிக்கப் படையினர் காலியில் தளம் அமைத்து நிலை கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியா ஆயிரத்துக்கு சற்றுக்குறைவான படையினரை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. ஐந்து கடற்படைப்படகுகள், வானூர்திகள் ஆகியனவையும் இந்திய உதவிகளில் அடங்கும்.

பாகிஸ்தான் 400 கடற்படை வீரர்களை அனுப்புகிறது. இரு யுத்தக்கப்பல்கள், விமானங்கள், ஹெலிகள் ஆகியனவும் நகர்த்தப்பட்டு வருகின்றன. 150 இராணுவ கட்டுமானப்பிரிவைச் சேர்ந்தவர்களும் வருகின்றனர்.

கடலின் மேற்பரப்பில் தரித்துநின்று சேவை ஆற்றக்கூடிய இரண்டு விமானங்களை இத்தாலி அனுப்புகிறது. பிரிட்டனும் படைகளையும், விமானங்களையும் அனுப்பிவருகிறது.

சுனாமி பேரலைகளால் அழிவுற்ற பகுதிகளில் நிவாரண வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதே வெளிநாட்டுப்படைகளின் வருகையின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை முதலில் நிவாரணப்பணிகளில் ஈடுபடுத்திவிட்டு பின்னர் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்த இலங்கை அரசு திட்டமிட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு துறையையும் ஒவ்வொரு நாட்டுக்கு வழங்கி அந்த நாட்டின் செலவில் மீளக் கட்டி எழுப்பும் திட்டம் அரசிடம் உண்டு.

இவற்றில் பாதிக்கப்பட்ட இராணுவ, கடற்படைத்துறைகளை மீளக்கட்டியெழுப்பி பலப்படுத்தும் திட்டமும் உள்ளடங்கி இருக்கிறது.

கடந்தகாலங்களில் ஒப்பந்தங்கள் மூலம் சில நடவடிக்கைகளை புலிகளுக்கு எதிராக அரசு நகர்த்தியது. அப்பொழுது தமிழ் அரசியல் கட்சிகளும், புலிகளும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், இன்றைய நிலையில் நேரடியாக அரசுக்கு உதவக்கூடிய ஒரு வசதி ஏற்பட்டுள்ளது.

நாகர் கோவில் முதல் தொண்டமானாறு வரை பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள இராணுவத் தளங்களை மீளக்கட்டியெழுப்பும் பணி இடம்பெறும்போது இராணுவச் சமநிலை பாதிக்கப்படுமா என்பது சிந்திக்கப்பட வேண்டியது.

கடந்த காலங்களில் புலிகள் மேற்கொண்ட பல இராணுவ நடவடிக்கையினால் அதிர்ந்தது இராணுவம்.

இராணுவத்துக்கு நிகராகப் புலிகள் இருப்பதை அறிந்த பின்புதான் இலங்கை அரசு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் நிலைக்கு உள்ளாகியது.

எனவே, மீண்டும் இராணுவத்தைப் பலப்படுத்தி புலிகளை அடக்கலாமா என்று கூட சில இராணுவ ஆய்வாளர்கள் சிந்திக்கலாம்.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் சுனாமியால் தனக்கு ஏற்பட்ட இராணுவ இழப்பைப் போன்று நிச்சயம் புலிகளுக்கும் ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறது.

வெளிநாட்டுப்படைகளின் உதவி மூலம் இராணுவத்தை மீளக்கட்டியெழுப்புதல் என்ற பெயரில் வடக்கு கிழக்கில் நீண்ட காலத்துக்கு வெளிநாட்டு இராணுவத்தை நிலைகொள்ளச் செய்தல், அதன் மூலம் புலிகளின் தாக்குதலை முறியடிக்கும் திட்டங்கள் அரசுக்கு இருப்பின் அது பாரிய பிரச்சினைகளை உருவாக்கும்.

இதனால்தான் வெளிநாட்டுப்படை வருகை தொடர்பாக புலிகள் மிக அவதானமாகச் செயற்படுகின்றனர்.

பகடைக்காய் ஆடுவதில் சிறந்த ஜனாதிபதி மீண்டும் ஏதாவது செய்வதற்கு முயற்சி எடுப்பாரானால் நாடு பிளவுபடுவதற்கு அவரே காரணமாகஇருப்பார். இந்த நிலையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குஎதிராக குரல் கொடுக்கும் ஜே.வி.பி இவர்களுடைய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காது மௌனமாக இருப்பதன் மூலம் இதனை வரவேற்கிறது எனத் தெரிகிறது.

சர்வதேச நாடுகளின் நிதியின்றி எமது நாட்டைக் கட்டி எழுப்புவோம் என்று கூக்குரலிட்ட ஜே.வி.பியினர் இன்று ஏன் மௌனம் சாதிக்கின்றனர்?

நிரந்தரமாக ஒரு சில இராணுவ வீரர்களை அமர்த்தும் நோக்குடன் உலக நாடுகள் இலங்கையை நோக்கி வந்திருந்தால் அது ஆபத்தான விளைவுகளையே ஏற்படுத்தும்.

வந்தோமா நிவாரணப் பணியில் ஈடுபட்டோமா, மீள் நிர்மாணங்களைச் செய்தோமா, வெளியேறினோமா என்ற நிலையில் இருந்தால் அதுவே வரவேற்கத்தக்கது.

**வியாஸா**




## தமிழ் பிரதேச அகதிமுகாம்கள் குப்பை கொட்டும் இடமா என்ன?

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பல்லின மக்களும் நிவாரணப் பொருட்களை வாரிவழங்கினர்.

பொதிகளிலும் வான்களிலும் போட்டி போட்டுக் கொண்டுவந்து பொருட்களைக் கொண்டு வந்து உதவினார்கள்.

அண்மையில் காவி உடைதரித்த மதகுருமார்கள் சிலரும், இளைஞர் கோஷ்டி ஒன்றும் இரண்டு வான்களில் பெரிய பெரிய பொதிகளைக் கொண்டுவந்து மட்டக்களப்பில் உள்ள அகதி முகாம் ஒன்றில் இறக்கினார்களாம்.

இறக்கியவர்கள் அந்தப் பொதிகளை ஒப்படைப்பதற்கு முன் வீடியோ கமெராவில் படம் எடுப்பதில்தான் கூடுதலான அக்கறை காட்டினார்களாம்.

"ஐயா உங்களுடைய உதவிகளுக்குபெரிதும் நன்றி உடையவர்களாவோம். அதேவேளை, நீங்கள் கொடுக்கும் பொருட்கள் என்ன என்பது தெரிய வேண்டாமோ. அதனால் முதலில் பொதிகளைப் பிரித்துப் பார்ப்போம்'' என்றனராம் முகாமுக்குப் பொறுப்பான இளைஞர்கள்.

''என்ன தம்பி நீங்கள், நாங்கள் எவ்வளவு தூரத்தில் இருந்து பெறுமதியான உடுபுடைவைகளைக் கொண்டு வந்துள்ளோம். படம் எடுத்துக்கொள்வோம். பின்பு நீங்களே மூடைகளைப் பிரித்து எல்லோருக்கும் கொடுத்து விடுங்கள்'' என்று கூறினாராம் மதகுருவானவர்.

அவர் கூறிக் கொண்டிருக்கும் போதே ஒரு இளைஞன் கத்தியை எடுத்து மூடைகளைப் பிரித்து விட்டானாம்.

அதற்குள் இருந்தது என்ன தெரியுமா? நெருப்பில் போட்டால் கூட எரியாத ஊத்தை உடுப்புகளாம். அதில் ஒருதுண்டுகூட பாவனைக்கு எடுக்க முடியாததாகவே இருந்ததாம்.

அந்தக் குப்பைகளைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு இப்பொழுது வீடியோபடம் எடுப்போம் என்றனராம்

குருவானவரும் இளைஞர்களும் இதனை சிறிதும் எதிர்பார்க்கவில்லையாம். இதனால் இயந்திரகெதியில் பிரிக்கப்பட்ட மூடைகளை வாரிச்சுருட்டி வான்களில் ஏற்றிக்கொண்டு ஓடிவிட்டனராம்.

'அகதிகள் என்றால் உடைமைகளை இழந்து இருக்கலாம். அதற்காகத் தன்மானத்தை இழந்து விடவில்லை. தமிழ் அகதி முகாம்கள் என்றால் குப்பை கொட்டும் இடம் என்று கேவலமாக எண்ணிவிட்டார்களா? என்று கொதிப்படைந்துள்ளனர் இளைஞர்கள். இது எப்படி இருக்கு?

## கழித்துவிடும் குப்பைகளை எங்கே கொட்டினால் தான் என்ன

மலையகத்தில் தனிப்பெரும் தொழிற்சங்கம் தாங்களே என்று கூறிக்கொள்ளும் சங்கத்தில் மத்திய மாகாணத்தில் பொறுப்பான பதவிகளை வகித்துவரும் ஒரு நபர் பல்டி அடித்துவிட்டாராம். என்னடா இது பல்டிக்குள்ளும் ஒரு பல்டியா என்று ஆச்சரியப்படுகின்றீர்களா? அது உண்மைதான்.

இப்படி பல்டி அடித்தவர் அரஹறா கோவிந்தா என்று மலைச் சந்திரனின் கோட்டைக்குள் புகுந்து கொண்டாராம். வந்தாரை வாழ வைக்கும் எண்ணம் கொண்ட மலைச் சந்திரனும் கட்டித் தழுவி அணைத்து வரவேற்றுச் சேர்த்துக் கொண்டாராம்.

இது தொடர்பாக தனிப்பெரும் சங்கத்தின் ஈஸ்வரனானவரிடம் நண்பர் மெதுவாகத் தூண்டிலை வீசினார்.

''என்ன ஐயா இது பச்சை வயலில் விளைந்த நீங்கள் எல்லோரும் பதவிக்காக வெற்றிலைக் கொடிக்குத் தாவிவிட்டீர்கள். ஆனால், உங்களிடம் இருந்தவர் அதுவும் நீர்வீழ்ச்சிப் பிரதேசத்தில் மலைச் சந்திரனுக்கு சிம்ம சொப்பனமாக நின்று போராட்டம் நடத்தியவர் இப்பொழுது அதே சந்திரனின் மடியில் குந்திக் கொண்டாரே!'' என்றார் நண்பர்.

"அது இல்லை சார் உண்மை. இப்பொழுது நாங்கள் டிசம்பர் மாதத்தில் வீட்டை வெள்ளையடித்து பழைய குப்பை கூழங்களை எல்லாம் கழித்துக்கட்டுவது இல்லையா? அந்த மாதிரி நாங்களும் கட்சிக்குள் சில களைகளைப் பிடுங்கி எறிய வேண்டி உள்ளது. அந்த வேலைகளைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். வீட்டில் இருந்து வெளியே முற்றத்தில் வீசிய குப்பைகள் காற்றோடு காற்றாக எங்கே போய் சேர்ந்தால்தான் என்ன? எங்களுக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை.

இதே மாதிரித்தான் ஐந்து பஞ்சபாண்டவர்களும் பிய்த்துக் கொண்டு ஓடினார்கள். கடைசியில் என்ன ஆனது? போனமச்சான் திரும்பிவந்தான் என்ற கதையாகிவிட்டது. திமிராக மிஞ்சியவர்களும் தலையில் இருந்து விழுந்த மயிராகிவிட்டனர். அப்படித்தான் இதுவும்'' என்றார் ஈஸ்வரனார்.

மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறாரா அல்லது உண்மையாக இருக்குமோ பொறுத்திருந்து பார்ப்போம்.

## உதவிக் கரம் நீட்டும் சன்டெல்

சுனாமி பேரலையானது பல பேரழிவுகளை ஏற்படுத்தியது. வரலாற்றில் மிக மோசமான பேரழிவாக இது உள்ளது.

சுனாமியினால் பல உயிர்கள் இறந்து, இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். தெற்கு மற்றும் வடக்கின் கரையோர பிரதேசங்களின் கட்டமைப்புக்களை சுனாமி சிதைத்தது.

சுனாமி அழிவு ஏற்பட்டும் அதன் வலையமைப்பு வசதிகளை உடனடியாக வழங்கிய சன்டெல் நிறுவனம் சுனாமியினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது.

சன்டெல்லின் வலையமைப்பு வசதியினால், பாதிக்கப்பட்ட மக்கள் தமது தொலைத் தொடர்புகளை பெறக்கூடிய வசதி வழங்கப்பட்டுள்ளது.

சுனாமி பேரழிவின் பின்பும் அனைத்து சன்டெல் கேந்திர பரிவர்த்தனை நிலையங்களும் தங்கு தடையின்றி தமது பணியினை மேற்கொண்டு வருகின்றன.

சுனாமி பேரலையால் தொலைத் தொடர்பு சாதனங்கள் செயலிழந்த நிலையில் சன்டெல் இந்நாட்களுக்குள் தனது சேவையினை கதிர்காமம், அம்பாந்தோட்டை பிரதேசங்களில் நிறுவி அப்பிரதேசமக்களுக்கு பேருதவி புரிந்தது.

மேலும் தன்னுடைய விரிவாக்க பணியாக பாதிக்கப்பட்ட இடங்களில் 150 இணைப்புக்களுக்கு மீள் இணைப்பை வழங்கியது.

நிவாரண வேலைகளை திறம்பட மேற்கொள்வதற்கு துரிதகதியில் தொலைத் தொடர்புகள் இடம் பெறுவதற்கு ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி அலுவலகம், பொலிஸ், ஆகாய, கடற்படை தலைமை அலுவலகங்கள், மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம், தேசிய வைத்தியசாலை, இங்கை சுற்றுலாசபை மற்றும் சிரசசகன யாத்திரை ஆகிய இடங்களில் சன்டெல் வசதி வழங்கப்பட்டது.

அரசாங்க நிறுவனங்களிலும், அதேவேளை றாகம தேவத்த தேவாலயம், சிலோன் தேவாலயம், கதிர்காமம் கிரிவிகாரை, கதிர்காமம் சுகாதார வைத்திய பணிமனை, காலி கோட்டை, அம்பாந்தோட்ட தர்மகபீர் பள்ளிவாசல், சமாதானத்தை கட்டியெழுப்பும் செயலகம், கொழும்பு பல்கலைக்கழக வைத்திய மாணவர் பிரிவு, களுத்துறை வைத்தியபீடம், யாழ்.பல்கலைக்கழக உடல் ஆரோக்கிய பிரிவு, யாழ்.மத்திய போக்குவரத்து நிலையம் மற்றும் கொக்குவில் பொற்பதி ஆலயம் ஆகிய இடங்களிலும் தொலைந்த உறவுகளை தேடிக்கண்டுபிடித்து தொடர்புகளை ஏற்படுத்த இலவச வசதிகளை சன்டெல் நிறுவனம் மேற்கொண்டது.

இலங்கை உல்லாச சபை, ஜனாதிபதி செயலகம் என்பவற்றில் பொதுமக்கள் விவரங்களைப் பெறுவதற்கு இணையத்தள உருவாக்கத்துக்கு ஆரம்ப நடவடிக்கைகளை சன்டெல் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

அதுமட்டுமன்றி இணையத்தளமான http/www.wow.lk இணையம் மூலம் நிவாரணப்பணிக்கு பணம் வழங்கும் வசதியினையும் சன்டெல் மேற்கொண்டுள்ளது. 5 மில்லியன் ரூபாவினை வழங்குவதற்கு சன்டெல் நிறுவனம் எதிர்பார்கிறது.


**G.A.Q விண்ணப்பப்படிவம்**

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் G.A.Q பரீட்சைக்கான பதிவுகள் 31.01.2005 வரை செய்து தரப்படும். மேலதிக விபரங்கட்கு 100/= பெறுமதியான தபாற் கட்டளை The Director B.B.C எனும் பெயருக்கு Kotahena Post Office இல் மாற்றக்கூடியதாக காசுக்கட்டளை உடன் சுயவிலாசமிடப்பட்ட முத்திரையுடன் அனுப்பிவைக்கவும்.

**Bright Training Centre, P.O.Box - 162, Colombo.**

**தபால் மூலம் கல்வி**

BRIGHT நிறுவனத்தின் தபால் மூலம் கல்வி எனும் திட்டத்தின் கீழ், Spoken English, Spoken Singhala, Business English, Method of computerized Book - Keeping & Accountancy கணணியின் உதவியுடன் கடைக்கணக்கு எழுதும் பயிற்சி, பாலர் முன் பள்ளி ஆசிரியர் பயிற்சி, Nursery Teacher Training Course, சட்டக்கல்வி, பத்திரிகையாளர் பயிற்சி நெறி, குடும்பநல வாழ்க்கை நெறி

மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

**Bright Training Centre, P.O.Box - 162, Colombo.**

**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலைமிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

ஜனவரி 20 – 24 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**

பெப்ரவரி 05 - 06 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**

ஜனவரி 08 -12
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

ஜனவரி 09 — 15, 2005

65, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14. டெலிபோன்: 011—4734401—6
பாக்ஸ் : 011 — 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஏன் இந்த நிலை?

இந்தோனேசியாவைச் சேர்ந்த சுமாத்திராவுக்கு சமீபமாக கடலில் இடம்பெற்ற நில அதிர்வினால் உருவான சுனாமி பேரலையால் இலங்கையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 35 ஆயிரத்தைத் தாண்டி விட்டது. வடக்கு, கிழக்கிலேயே உயிரிழப்புக்கள் அதிகம்.

கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான உடமைகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. பல லட்சம் பேர் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், தேவாலயங்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களில் பெரும் பாலானோரின் வீடுகள் இருந்த இடம்கூடத் தெரியாமல் கடல் அலையால் அள்ளிச் செல்லப்பட்டு விட்டன. பல கிராமங்கள் முற்றாக அழிந்து விட்டன.

இந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமரவும் தமது முன்னைய வாழ்க்கையை ஆரம்பிக்கவும் உதவும் பெரும் பொறுப்பு இலங்கை அரசிடமும் சர்வதேச சமூகத்திடமும் இருந்து வருகிறது. அது மட்டும் அல்ல பெற்றோர், உற்றாரை இழந்து அனாதரவாக்கப்பட்டுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகளை பாதுகாக்கும் பெரும் பொறுப்பும் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தினால் இலங்கையில் உயிரிழந்தவர்களில் 12 ஆயிரம் பேர் சிறுவர்கள் என்று ஆரம்ப கணக்கெடுப்புக்கள் தெரிவிக்கின்றன. பெண்களும் குழந்தைகளுமே அதிகம் இறந்துள்ளனர்.

இலங்கையில் மட்டும் அல்ல இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்தியா, சுமாத்திரா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் இதே நிலைமை தான்.

இலங்கையில் உயிரிழந்தவர்களில் 40 சதவீதமானோர் சிறுவர்கள். உயிரிழந்த சிறுவர்களில் பலர் கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டனர். அவர்களது சடலங்களை மீட்க முடியவில்லை.

பல சடலங்கள் பெற்றோர், உறவினர்களினால் அடையாளம் காணப்படாத நிலையிலேயே அடக்கம் செய்யப்பட்டுவிட்டன.

தமது குழந்தைகளை இழந்த பெற்றோர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் அகதிமுகாம்களில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. சமீப காலவரலாற்றில் இடம்பெற்ற பேரழிவு இது. இப்படியான ஓர் அழிவை எவருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

குழந்தைகளைப் பறிகொடுத்த சிலர் தமது குழந்தையின் உடலாவது கடலில் மிதந்து வராதா என்ற ஏக்கத்தில் கடலை வெறித்துப் பார்த்தவண்ணம் இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில், உயிரிழந்தவர்கள் தவிர, பெற்றோரை இழந்து அனாதையாக்கப்பட்ட சிறுவர்களைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு அரசுமீதும், தொண்டு நிறுவனங்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

பெற்றோரை இழந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு அதிக பாதுகாப்பு தேவைப்படுவதாக ஐ.நா.சபையின் குழந்தைகளுக்கான யுனிசெவ் அமைப்பு தெரிவிக்கிறது.

பெற்றோர், உறவினர்களை இழந்த குழந்தைகள் முன்பின் அறியாதோரால் கூட்டிச் செல்லப்படும் சம்பவங்கள்—

அகதி முகாம்களில் உள்ள சிறுவர், சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்கள் — பற்றியும் தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

ஆகவே, பெற்றோரை இழந்து அனாதைகளாக்கப்பட்ட சிறுவர்களுக்கு உரிய பாதுகாப்புகளை வழங்கி அவர்களுக்கு சிறப்பான ஒரு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பது ஒவ்வொருவரினதும் கடமை ஆகும்.

நொடிப்பொழுதில் ஆயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்ட இந்த நிகழ்வு வரலாற்றில் கறை படிந்த அத்தியாயமாக இடம் பெற்றுவிட்டது.

# சுனாமி அனர்த்த நிதியை தென்னிலங்கை சூறையாடுமா?

அஸ்லம் எஸ். மௌலானா

சுனாமி கடல் பூகம்ப பேரலைகளால் நமது நாட்டில் பேரழிவுகள் ஏற்பட்டு இரண்டு வாரங்களாகிவிட்டன. 31ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். கரையோரப் பிரதேசங்களில் பெரும் பகுதிகள் முற்று முழுதாக அழிந்து விட்டன. மக்கள் தமது உறவினர்கள், வீடுவாசல்கள், சொத்துக்கள் மற்றும் உடைமைகள் அனைத்தையும் இழந்து தவிக்கின்றனர். அவர்கள் நிர்க்கதியான நிலையில் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இயற்கையின் கோரத்தாண்டவத்தினால் அழிந்துபோயுள்ள நாட்டை கட்டியெழுப்புவதற்கு அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது. அவற்றை மிகத்துரிதமாக நடைமுறைப்படுத்தி நாட்டை நிமிர்த்தி எடுப்பதற்கு செல்வந்த நாடுகளிடம் இருந்து இலங்கை அரசு எதிர்பார்ப்பதைவிட மிகக் கூடிய அளவில் உதவிகள் வந்து குவிந்துள்ளன.

அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், சீனா, நோர்வே, இத்தாலி, இந்தியா, சவுதி அரேபியா, குவைத், ஈரான் போன்ற நாடுகளும், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய யூனியன் போன்றவையும் பெருந்தொகையான நிதி உதவிகளை வழங்கியுள்ளன. இவை தவிர அவசர நிவாரண உதவிகளும் பெருமளவில் குவிந்து கொண்டிருக்கின்றன. அத்தியாவசிய பாவனைப் பொருட்கள், மருந்து வகைகள் என்பனவும் வெளிநாடுகளில் இருந்து நிறைய வந்து சேர்ந்துள்ளன.

கடல் பேரலைகளுக்குப் பலியானோரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வடக்கு—கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த செவ்வாய்க் கிழமை (04.01.2005) காலைவரை இப்பதிகளில் சுமார் 17 ஆயிரம் பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தின் கல்முனை கரையோரப் பிராந்தியத்திலேயே கூடிய எண்ணிக்கையானோர் (11 ஆயிரத்து 225 பேர்) கடலின் கோரச் சீற்றத்துக்குப் பலியாகியுள்ளனர்.

சுனாமியின் கோரத்தாண்டவத்தால் பேரழிவுக்குள்ளான கரையோரப் பகுதிகளில் நான்கில் மூன்று பகுதி வடக்கு—கிழக்கு மாகாணப் பிரதேசங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் வடக்கு— கிழக்கின் மீனவர் சமுதாயம் ஒட்டு மொத்தமாக அழிந்து விட்டது. இப்பகுதி மக்களின் வீடுகள், உடைமைகள் மற்றும் சொத்துக்கள் யாவும் பேரலைகளின் கோரப்பிடிக்குள் சிக்கி சுக்கு நூறாகி — அழிந்து — நாசமாகி விட்டன.

### நியாயம் கிடையாது

இந்நிலையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசின் திட்டங்களில் வடக்கு — கிழக்குப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பது யதார்த்தமான — மறுக்க முடியாத உண்மையாகும். எனினும், சிங்களத் தேசிய அரசு யதார்த்தத்தை புரிந்து கொண்டு நியாயமாக நடந்து கொள்ளும் என்று சிறுபான்மையினர் எதிர்பார்க்க முடியாது என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய உண்மையாகும்.

கடந்த கால வரலாறுகள் மட்டுமன்றி சுனாமி பேரழிவுக்குப் பின்னரான இருவார கால அரசின் நடவடிக்கைகளும் இதனை நன்கு உணர்த்துகின்றன. வடக்கு, கிழக்கு, தெற்கு என்கின்ற வேறுபாடும், பாரபட்சமும், புறக்கணிப்பும் இயற்கை அனர்த்தப் பேரழிவுக்கு மத்தியிலும் இடம் பெற்றே வருகின்றன.

இரு தசாப்தகால கோர யுத்தத்தினால் அழிவுற்றிருந்த வடக்கு — கிழக்குப் பகுதியை நிமிர்த்தி எடுப்பதற்கு முன்னதாகவே இயற்கையின் பெரும் சீற்றம் அப்பகுதியை முற்றாக சீரழித்து விட்டது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்புப் பணிகளுக்குகாக வெளிநாடுகளும், நிதி நிறுவனங்களும் ஒதுக்கிய பெருந்தொகைப் பணத்தை சிங்களத் தேசிய அரசுகள் தெற்கின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தி வந்தன.

அதனாலேயே வடக்கு — கிழக்கு மாகாணத்திற்கு இடைகாலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும், வெளிநாட்டு நிதி உதவிகள் அந்த சபையின் ஊடாகவே புனரமைப்பு வேலைகளுக்கும் பயன் கடுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்த வேண்டிய அவசியம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது.

இவ்வாறான ஒரு நிலையே கடல் பேரழிவுப் பகுதிகளை மீள் நிர்மாணம் செய்யும் போதும் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற நிதியுதவிகள் அனைத்தையும் தென்னிலங்கை சூறையாடிவிடுமோ என்ற அச்சம் தமிழ், முஸ்லிம் தரப்புகளில் மேலோங்கிக் காணப்படுகிறது.

### தலைவர்கள் அச்சம்

இதனால்தான் கடல் அனர்த்தத்தால் பாதிகப்பட்ட பகுதிகளைப் புனரமைப்பதற்காக உலக நாடுகளும், நிதி நிறுவனங்களும் இலங்கைக்கு வழங்குகின்ற நிதி உதவிகளில் வடக்கு — கிழக்கு மாகாணத்திற்குரிய பங்கினைத் தம்மிடம் தர வேண்டும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அரசைக் கேட்டுள்ளார்.

இந்தியா, இலங்கை அரசுக்கு வழங்கும் நிதி உதவிக்குப் புறம்பாக வடக்கு— கிழக்குத்



தமிழர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை, அரபு, முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்தும் பேச்சுக்கள் நடத்திய ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அந்நாடுகளின் அரசுகள் இலங்கைக்கு வழங்குகின்ற நிதியுதவிகளுக்கு மேலதிகமாகத் தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து முஸ்லிம்களுக்குப் பிரத்தியேகமாக அவசர நிவாரண— புனரமைப்பு நிதிகளைப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தியுள்ளார்.

அரசு மீதான அவநம்பிக்கையே தமிழ், முஸ்லிம் தலைவர்களின் இவ்வாறான முயற்சிகளுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. வடக்கு—கிழக்குப் பகுதிகளில் ஒப்புக்கு சில வேலைத்திட்டங்களைச் செய்துவிட்டு அனர்த்த நிதிகள் அனைத்தையும் தென்னிலங்கை கபளீகரம் செய்துவிடலாம் என தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

அரசின் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் அதனை உணர்த்துவதாகவே அமைந்திருக்கின்றன. அவசர நிவாரண உதவிகள் வழங்கப்படுவதிலும், மீட்புப் பணிகளின்போதும், இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதிலும் அரசு வடக்கு—கிழக்குப் பகுதிகளைப் புறக்கணிப்பதாகவும், பாரபட்சம் காட்டுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

### அரசின் பாரபட்சம்

சுனாமி கடல் பூகம்பப் பேரலைகளால் ஏற்பட்ட பேரழிவுகளைத் தொடர்ந்து நிர்க்கதியான மக்களுக்கு அவசர நிவாரண உதவிகள் வழங்கும் விடயத்தில் அரசு வடக்கு— கிழக்குப் பகுதியை இரண்டாம் பட்சமாகவே கவனித்தது. இப்பகுதி மக்களுக்கு அனர்த்தம் இடம்பெற்று நான்கு, ஐந்து நாட்களுக்குப்பின்னரே அரச நிவாரண — உலர் உணவுப் பொருட்கள் கிடைத்தன. ஆனால், தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரசு விரைந்து உதவிகளைச் செய்தது. அன்றைய தினமே அப்பகுதி மக்களுக்கு ஹெலிக்கொப்டர்கள் மூலம் சமைத்த உணவுகள் எடுத்துச்செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

வடக்கு—கிழக்கில் வீடுவாசல்கள், சொத்துகள், உடைமைகள் அனைத்தையும் இழந்து, உடன்பிறப்புக்களைக் கடலுக்குப்பலி கொடுத்துவிட்டு நிர்க்கதியான நிலையில் அகதி முகாம்களில் தஞ்சமடைந்த லட்சக்கணக்கான மக்களுக்கு தனியார் மற்றும் பொது அமைப்புக்களும், பாதிக்கப்படாத மக்களுமே உடனடியாக அவசர நிவாரண உதவிகளைச் செய்தனர். அவ்வாறான உதவிகள் கிடைத்திராவிட்டால் பல்லாயிரக் கணக்கானோர் பட்டினிச்சாவடைந்திருப்பர்.

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் கட்டட இடிபாடுகளை அப்புறப்படுத்துவதிலும், மீட்டுப்பணிகளை மேற்கொள்வதிலும் அரசு உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை. அரச இயந்திரங்கள், வாகனங்கள் அனைத்தும் தென்னிலங்கைக்கே பயன்படுத்தப்பட்டன.

இதனால் வடக்கு—கிழக்கு மாகாண கரையோரப் பிரதேசங்களில் இன்னும் இடிபாடுகள் அகற்றப்பட்டு, துப்புரவு செய்யப்படவில்லை. இதனால் இப்பகுதிகளில் சுகாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இப்பகுதி மக்களுக்குத் தொற்று நோய், சுவாச நோய்கள் ஏற்படும் ஆபத்து உள்ளது என சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

அவசர நிவாரண உதவிகள் மற்றும் மீட்புப் பணிகளில்கூட வடக்கு— கிழக்கை மாற்றான்தாய் மனப்பாங்குடன் நோக்குகின்ற அரசு இப்பகுதியை மீள்நிர்மாணம் செய்துதருவதிலும், அநாதரவாக அகதி முகாம்களில் முடங்கிக் கிடக்கும் மக்களுக்கு வாழ்விட மற்றும் தொழில்துறைகளை ஏற்படுத்திக்கொடுப்பதிலும் எந்தளவுக்கு இதயசுத்தியுடன் செயற்படும் என்கிற அச்சம் நியாயமானதே.

### சிறுபான்மையினருக்கு கதவடைப்பு

சுனாமி அனர்த்ததால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீள்கட்டமைப்புச் செய்வதற்காக அரசு உருவாக்கியுள்ள உயர்மட்ட செயலணியில் சிறுபான்மையினத்தவருக்குக் கதவடைப்புச் செய்யப்பட்டிருப்பதும் இந்த அச்சத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

ஏழு அமைச்சர்களையும், இரண்டு எம்.பிக்களையும், ஆறு உயரதிகாரிகளையும் உள்ளடக்கிய 15பேர் கொண்ட செயலணியில் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள், அதிகாரிகளில் ஒருவராவது இடம்பெறாமல் முழுக்க முழுக்க பெரும்பான்மையினர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருப்பதானது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு— கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர்கள், பிரதமர் மட்டுமல்லாது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் வருகைதந்து அனர்த்தங்களைப் பார்வையிட்டதுடன், மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி— பிரச்சினைகளைக் கேட்டறிந்து — உத்தரவாதங்கள் பலவற்றையும் வழங்கியிருந்தார்.

வடக்கு — கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவசர நிவாரண உதவிகள்

(16ஆம் பக்கம் பார்க்க)

# கவனயீனமா? உதாசீனமா? இயலாத்தன்மையா?

உலக வல்லரசுகள், பிராந்திய வல்லரசுகள் என நாடுகள் பிரிக்கப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கும் நாடுகள் என்ற பாகுபாடுகள். அதே வேளை, விண்ணையும் மண்ணையும் துளைத்துக் கொண்டு சாகசம் செய்யும் அற்புத விஞ்ஞானக் கருவிகள். எதிர்வுகூறுதலுக்கென விஞ்ஞானக் கருவிகள். நாடுகளின் உள்விவகாரங்களில் நடைபெறும் விடயங்களை அறிவதற்கென உளவுத்துறையினர், செயற்கைக் கோள்கள்.

இப்படியாகப் பல்வேறு விடயங்கள் இருப்பினும் பயன் என்ன?

ஒரு நாடா இரண்டு நாடா, ஒன்பது நாடுகளில் ஒரே நேரத்தில் அனர்த்தம். இது சாதாரண



அனர்த்தமா? இல்லை. சென்ற ஆண்டின் மிகப் பாரிய அனர்த்தம்.

இத்தகைய அனர்த்தத்தை விஞ்ஞானிகளினாலும், மெஞ்ஞானிகளாலும் எதிர்வு கூற முடியாத நிலைமை ஏன் ஏற்பட்டது? இது சிந்திக்கப்பட வேண்டிய விடயம். கவலைப்பட வேண்டிய விடயம்.

'அந்தநாள் ஞாபகம் வந்ததே நெஞ்சிலே' பாடலுக்கேற்ற தினம் டிசம்பர் 26-2004.

இந்த நாடுகளில் ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒரே நேரத்தில் மூச்சுத்திணறியும், பாரிய கடல் அலையினால் அள்ளப்பட்டும், புதைந்தும், சிக்கியும் துடி துடித்து இறந்தனர்.

12 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்தனர். ஆயிரக் கணக்கானோர் காணாமல் போயினர்.

இந்த நிலைமை கவனயீனத்தால் ஏற்பட்டதா? அல்லது உதாசீனப்படுத்தப்பட்டதா? இது ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயம்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண உதவி ஒருங்கமைப்பாளர் ஜோன் ஈகிலன்ட் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறுகையில், "பல நாடு

**-வியாஸா-**

களில் நாம் நிவாரண வேலைகளைச் செய்து வருகின்றோம். திட்டங்களையும், கொள்கைகளையும் வகுத்து உலக நாடுகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஒன்பது நாடுகளில் ஏற்பட்ட சுனாமி அலைகளின் தாண்டவம் எம்மை உலுக்கி விட்டது. அனைவருக்கும் ஒரே நேரத்தில் நிவாரணம் வழங்குவது மிகவும் சிரமம்" எனத் தெரிவித்தார்.

### முதலில் சென்னையில் அதிர்வு

டிசம்பர் 26ஆம் திகதி அதிகாலை 6.30 மணியளவில் சென்னையில் நில நடுக்கம் உணரப்பட்டது. ஆனால், மக்கள் அழிவின் அறிகுறியாக அதனைக் கண்டு கொள்ளவில்லை. வேறொரு பிரதேசத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் பாதிப்பு சென்னையில் உணரப்பட்டதாக நினைத்தனர்.

ஊடகங்கள், வானிலை ஆய்வு நிலையங்கள் எல்லாமே மௌனமாக இருந்தன.

அந்த வேளையில் இலங்கை நேரப்படி காலை 6.58 மணிக்கு சுமாத்திராவுக்கு அருகில் கடலுக்கடியில் பாரிய நில அதிர்வு ஏற்பட்டது.

அந்தத் தாண்டவத்தின் விளைவு இலங்கையில் தொண்டமனாறு, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, மூதூர், திருகோணமலை, வாகரை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிரதேசங்களிலும், நாட்டின் தென்பகுதியிலும், இந்தியாவில் சென்னை நாகப்பட்டினம், கடலூர், கேரளா, ஆந்திரா பகுதிகளிலும் மிக பெரிய அழிவுகள் ஏற்பட்டன. இந்தோனேசியாவில் சுமார் ஒரு லட்சம் பேர்வரை மாண்டனர்.

தமிழகத்தில் காலை 8.30 மணி, 9.30 மணி, 10.38 மணி, 10.50 மணி, பிற்பகல் 12.24 மணி எனத் தொடர்ச்சியாக சுனாமி அலைகள் ஏற்பட்டதால் அழிவுகள் அதிகரித்தவண்ணம் இருந்தன.

காலையில் ஏற்பட்ட முதலாவது சுனாமி அலையின் தாக்கத்தை காலநிலை அவதான மையம், பூகோளவியல் ஆய்வு மற்றும் சுரங்க மையம் எச்சரிக்கையாக எடுத்து, உடனடி நடவடிக்கைகளில் இறங்கியிருந்தால் பாரிய உயிர் அழிவுகளைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

### 2 மணி நேரத்தின் பின்பே இலங்கையில்

சுமாத்திரா பகுதியில் சுனாமி அலை ஏற்பட்டு சுமார் இரு மணித்தியாலத்தின் பின்புதான் இலங்கை, இந்திய ஆகிய நாடுகள் பாதிப்புற்றன. அந்த இரண்டு மணி நேரத்துக்குள் விஞ்ஞானத்தின் சாதனைகள் எல்லாம் தோற்றுப்போயினவா என்ற ஒரு கவலைக்குரிய கேள்வி எழுகிறது.

அதே வேளை சுவீடன் நாட்டில் உள்ள உப்பசல்ல நிறுவனத்தில் சுனாமி அலையின் தாக்கம், சுனாமி அலை அளவிடும் கருவியில் பதிவாகியுள்ளது. அதே போல் யப்பான் நாட்டிலுள்ள சுனாமி ஆய்வு நிறுவனத்திலும் கடலுக்கடியில் நில அதிர்வு ஏற்பட்டு 4 நிமிடத்தில் அது பற்றிய பதிவு இடம்பெற்றிருந்தது. பிரித்தானியாவிலும் இந்த கடலடி நில அதிர்வு பதிவாகியுள்ளது.

நில அதிர்வு ஏற்பட்ட இடத்திலிருந்து 5000 மைல் தொலைவிலுள்ள பிரித்தானிய ஆய்வு நிலையத்தில் அதன் தாக்கம் பதியப்பட்டிருப்பினும், அழிவைத் தடுக்கக்கூடிய ஆற்றல் அதற்கு இருக்கவில்லையே என்று பெருமூச்சுவிட வேண்டியதுதான்.

ஆனால், ஜப்பானும் சுவீடனும் இந்த நில அதிர்வு, பதிவுக்கருவிகளில் கிடைக்கப்பெற்றதும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட சம்பந்தப்பட்ட பலருக்கு தகவல் தெரிவித்திருந்தன என்று கூறப்படுகிறது.

அப்படியாயின் தகவல் கிடைத்த பின்பும் மௌனம் சாதித்தது ஏன்?

கருவிகள் தமது கடமையைச் சரிவரச் செய்தாலும் அதிகாரிகளின் அசட்டுத்தன்மை பாரிய உயிர் அழிவையும் பொருள் சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

### தகவல் கிடைத்தும் மௌனம் ஏன்?

இலங்கை நேரப்படி 6.58 மணிக்கு வட சுமாத்திராவின் மேற்குக் கடலின் அடியில் 9 றிச்டர் அளவில் பாரிய பூமி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது என பசுபிக் சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்தால் காலை 7.14க்கு கொழும்பிலுள்ள பூகோளவியல் ஆய்வு மற்றும் சுரங்க மையத்துக்கு அறிவிக்கப்பட்டது.

காலை 7.14 மணிக்கு அனுப்பப்பட்ட செய்தியை பூகோளவியல் ஆய்வு மற்றும் சுரங்க மையத்தின் பணிப்பாளர் 7.40க்கு பார்வையிட்டு அறிந்துகொண்டார்.

அப்படியாயின் 7.40 முதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் எதனையாவது மேற்கொண்டாரா என்பது கேள்வி.

காலை 8.27 மணிக்கு சுனாமி முதன்முறையாக கல்முனையைத் தாக்கியது. ஆகவே, தகவல் கிடைத்து ஒருமணித்தியாலம் 13 நிமிடத்துக்குப் பின்பே இது இடம்பெற்றுள்ளது.

பல வருடங்களுக்கு முன்னர் சுனாமி அலை போன்று பாரிய அனர்த்தங்களை அளவிடும் கருவி வானியல் அவதான மையத்தில் இருந்தது. இன்னும் அந்தக் கருவி உள்ளது. ஆனால், அது செயலிழந்து காணப்படுகிறது.

15 வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்று இந்தக் கருவி காணப்படுகிறது. வானியல் ஆய்வு நிலையத்தின் இத்தொழிற்பாட்டை பின்பு பூகோளவியல் ஆய்வு மற்றும் சுரங்க மையத்தினர் மேற்கொண்டனர்.

சுனாமி அலை இலங்கையை தாக்காது என்ற எண்ணம் தான் மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தியது. இதே சிந்தனை இந்தியாவிலும் இருந்தது. ஆனால், இப்பொழுது சுனாமி அலை எச்சரிக்கை நாடுகள் 28 உடன் இந்தியாவும் இணைந்து கொண்டுள்ளது. 1000 கோடி ரூபா செலவு செய்து இதனைக் கண்டறியும் கருவி ஒன்றைப் பொருத்த இந்தியா நடவடிக்கை எடுக்க உள்ளது. இந்தியாவில் பொருத்தப்படுவதால் இலங்கைக்கும் அதன் அண்டைய நாடுகளுக்கும் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பூமியின் சுழற்சி வேகமும் பாதிப்பு

அதே வேளை, டிசம்பர் 26 ஏற்படுத்திய தாக்கம், பூமியின் சுழற்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

சுமத்திரா தீவுக்கருகில் ஏற்பட்ட 9.0 ரிச்டர் அளவு நில அதிர்வு பூமியின் சுழற்சி வேகத்தை 3 மைக்ரோ விநாடிகளில் அதிகரித்திருத்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஒரு விநாடியின் பத்து இலட்சத்தில் ஒரு பங்குதான் ஒரு மைக்ரோ விநாடி ஆகும். அதே வேளை, இந்த நில அதிர்வினால் பூமி அமைந்திருக்கும் அச்சிலிருந்தும் ஒரு அங்குலச் சாய்வு ஏற்பட்டதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

சாதாரணமாக கடல் அலையின் உக்கிரத்தை மையமாக வைத்து கடல் அலையினை மூவகையாகப் பிரிப்பர். பீ.எஸ்.எல் என்பவை அவை.

தற்போது இலங்கையைத் தாக்கி பல ஆயிரம் உயிர்களைக் காவுகொண்டது பீ வகை அலையாகும். இதுதான் அலைகளில் மிக வீச்சுக்கொண்டது. மின்னல் வேகத்தில் இந்த வீச்சு இடம்பெறுவதால்தான் மனிதர்களும், கட்டடங்களும் ஈடுகொடுக்கமுடியாத நிலைமை ஏற்படுகிறது. சேதங்கள் மிக அதிகமாக ஏற்படுகின்றன.

ஒரு காலத்தில் சோமாலியா நாட்டைத் தாக்கியது எஸ் வகையான சுனாமி ஆகும். அதே வேளை, சுமாத்திராப் பகுதிகளில் ஏற்பட்ட கடல் நில அதிர்வு இன்னும் முற்றாக ஓயவில்லை. அந்தமான், நிக்கோபார் தீவுகளில் இப்பொழுதும் அலைவீச்சு வேகம் அதிகம். இது எல் வகையான அலைவீச்சாகும். இது பாரியளவு அழிவை ஏற்படுத்தாது.

பூமியானது பாறைத்தகடுகளினால் அமையப்பெற்றது. இது இரு வகைப்படும்.

1. பிரதான பாறைத்தகடுகள்,
2. குறைவன்மைப் பாறைத்தகடுகள்.

பிரதான பாறைத்தகடுகள்

ஆசியா-ஐரோப்பா, அவுஸ்ரேலியா - இந்தியா, பசுபிக், அமெரிக்கா, ஆபிரிக்கா, அன்டார்க்கா ஆகிய பிரதேசங்களின் கீழ் உள்ளன.

குறைவன்மை பாறைத்தகடுகள் கரிபியன், பிலிப்பைன்ஸ், கொக்கோஸ், கரோலின், ஸ்கோஷியா ஆகியவற்றின் கீழ் உள்ளன.

இந்த வகை குறைவன்மைப் பாறைத்தகடுகளின் அசைவினாலேயே நில அதிர்வு ஏற்படுகிறது. இந்தியா - அவுஸ்ரேலியாத் தகடானது ஆசியத்தகட்டுடன் செருகப்பட்ட நிலையில்தான் இந்த டிசம்பர் 26 நிகழ்வு ஏற்பட்டது.

இந்த மோதுகை இடம்பெற்ற பிரதேசம் சுமாத்திரா. அதனாலேற்பட்ட விளைவுகளும், விபரீதங்களும் எண்ணிலடங்கா. சுமாத்திராவில் ஏற்பட்ட இந்தக் கடலடி நில அதிர்வின் விளைவாக சுமாத்திரா தீவுக்கருகிலுள்ள சிறிய தீவுகள் 20 மீற்றர் தென்மேற்காக நகர்ந்துள்ளன. சுமாத்திராத்தீவின் வடமேற்கு முனை 36 மீற்றர் தென் மேற்காக நகர்ந்திருக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

### காலத்துக்குக் காலம் ஏற்படும் அழிவுகள்

இலங்கையில் நில அதிர்வு அழிவுகள் காலத்துக்காலம் இடம்பெற்றே வந்துள்ளன.

1615 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இங்கு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறந்ததுடன் 200 வீடுகள் அழிந்தன.

1938, 1939, 1953, 1956 மற்றும் 1961 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் நிலநடுக்கங்கள் உணரப்பட்டன.

(18 ஆம் பக்கம் பார்க்க)



# பித்தன் பதில்கள்

*சோ.சுஜாத்தா— கோணாவில்.*

**கேள்வி:-** *அன்பின் பித்தா! இந்தியாவில் நீண்டகாலமாக கண்டுபிடிக்க முடியாமல் இருந்த வீரப்பனை அவனுக்கு கண் தெரியாமல் போனதுக்குப் பின்னர் பிடித்துவிட்டு அது பெரிய சாதனை என்று கூறுகிறார்களே! இது நியாயமா?*

பதில்:— அவ்வளவு அதிரடிப்படையினரும் சுற்றி



வளைத்து வீரப்பனை உயிருடன் பிடித்திருக்கலாம். அல்லது கண் தெரியாமல் போன வீரப்பனுக்கு சரணடையும்படி வேண்டுகோள் விட்டிருந்தால் கண் பார்வை போனபின் காட்டுவாழ்க்கை எதற்கு என்று அவன் சரணடைந்திருக்கலாம். இவைகளையெல்லாம் விட்டுவிட்டு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கென வந்தவனை அவசரமாக சுட்டது ஏன் என்று விளங்கவில்லை. எல்லாமே அரசியல் அம்மணி... அரசியல்.

*செ.தனலக்ஷிமி— வவுனியா.*

**கேள்வி:-** *பித்தா! உமக்கும் உமது மனைவிக்கும் இடையே எப்போதும் பிரச்சினையாக இருக்கிறதே.... நல்ல ஒரு சாத்திரியாரைப்பார்த்து இருவருக்கும் பொருத்தம் பார்ப்பித்தால் என்ன? பொருத்தம் சரியில்லாவிட்டால் ஏதாவது பரிகாரம் செய்துகொள்ளலாமே!*

பதில்:— ஐயய்யோ... நான் சாத்திரி... எவரிடமும் இதுவரை போனதில்லை. ஏனென்றால் எங்களது பொருத்தத்தைப் பார்க்கச் சொன்னால்... அவர்.. இனி ஏழேழு ஜென்மத்துக்கும் இவள்தான் உமது பெண்டாட்டி என்று ஒரு குண்டை தூக்கிப் போட்டுவிட்டால்... அதிலிருந்து தப்பிக்க நான் புறம்பாக பரிகாரம் தேட வேண்டி வந்துவிடும். ஏன் சோலி... சாத்திரிமாரின் சகவாசமே வேணாமப்பா...

*ஜானகி—மன்னார்.*

**கேள்வி:—** **இதய வீணை என்ற நிகழ்ச்சியை இலங்கை வானொலியில்கேட்டீரா...? உமது அபிப்பிராயம்...?**

பதில்:— பொய்—புழுகு—சுய தம்பட்டம் நிறைந்த ஒரு நிகழ்ச்சி... தமது பூசனிக்காய்களை சோற்றிலே மறைத்துவிட்டு மற்றவர்களின் சோற்றிலே இருக்கும் தேசிக்காய்களை தேடிப்பார்க்கிறார்கள்.

ஒருவகையில் அவர்களை நினைத்தால் பாவமாகவும்— பரிதாபமாகவும் இருக்கிறது. ஏனென்றால் கையை நீட்டி மாதா மாதம் அரசாங்கத்திடம் காசு வாங்கிவிட்டு... சும்மா இருக்க முடியுமோ... ஏதோ இதையாவது செய்துகொடுத்தால் தானே.. சுளையாக பைசா பார்க்க முடியும்.

*மு.சிவரூபன்— வவுனிக்குளம்.*

**கேள்வி:—** **பித்தா! திருப்பாச்சியா —சச்சினா —டயறியா—சுக்கிரனா முதலில் வெளியாகும். ஒழுங்குபடுத்தும் பார்ப்போம். அத்துடன் இதில் எது வெற்றியடையும் என்பதையும்குறிப்பிடும்பார்ப்போம்.**

பதில்:— பொங்கலுக்கு— திருப்பாச்சி, சித்திரைப்புத்தாண்டுக்குசச்சின்இவை அனைத்தும் முடிந்த பின்னர்தான் அடுத்த படங்கள் பற்றிவிஜய் தீர்மானிப்பாராம். இதில்சுக்ரன் சேராது. ஏனென்றால் அது விஜய் சும்மா கௌரவமாக தலைகாட்டும் படம். இவைகளில் எதுஎது வெற்றிபெறும் எனக் கூற நான் ஒன்றும் முக்காலமும் உணர்ந்த முனிவரல்ல...அப்பாவித்தமிழன்.

*ந.சயந்தினி—செல்வபுரம்.*

**கேள்வி:— பித்தன் அண்ணாவே— உமக்கு உலக அழகி ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தால்... செய்துகொள்வீரா?**

பதில்:— இல்லை. அதற்கான காரணங்கள் உண்டு.

1. ஏதோ கொஞ்சம் உருப்படியான ஒருவரை கலியாணம் முடித்தே கடிவாளம் என் கையில் இல்லை. இதில் உலக அழகியென்றால்.. யப்பா...
2. இப்போ ஏதோ அடிபட்டு— குத்துப்பட்டு என்றாலும் ஒரே மனைவிக்கு— ஒரே கணவனாக இருக்கிறேன் — கௌரவமாக. ஆனால், உலக அழகியை கல்யாணம் செய்துகொண்டு 'இவரும் எனது கணவர்களில் ஒருவர்' என்ற ரீதியிலே இருக்க விரும்பவில்லை.
3. என்னுடைய பிள்ளைக்கு நான் ஒருவனே அப்பாவாக இருக்க விரும்புகிறேன்.
4. அடித்தாலும்— பிடித்தாலும் அடுப்படிக்கு அண்மித்த பகுதிகளில் நடமாடும் பெண்ணையே விரும்புகிறேன். அயல் நாடுகளிலே சஞ்சாரம் செய்துவிட்டு அலுப்புத்தட்டும்போது அடிக்கடி வீட்டுப் பக்கம் தலைகாட்டும் பெண் வேண்டவே வேண்டாம்.




ஆயினும் ஒரு சிறிய நப்பாசை... உலக அழகியை திருமணம் செய்வதென்றால் ஒரு வசதி இருக்கிறது. தூக்க முடியாத சுமையுள்ள புடைவைகளையெல்லாம் தோய்க்க வேண்டிய அவசியமில்லை. ஏதோ சின்னதாக— கட்டையாக இத்துனூண்டு சட்டை ஒன்றைத் தோய்த்தால் போதும். சில சமயம் தோய்க்க வேண்டிய அவசியமே ஏற்படாது.

*க.காசினி— கரந்தாய்.*

**கேள்வி:— பித்தா ஒரு ஜோக் Please...**

பதில்:— ஒரு சிறுவன் புத்தகம் ஒன்றை வெகு சுவாரஸ்யமாக படித்துக்கொண்டிருந்தான். அப்போது அந்த வழியால் வந்த தந்தை அவனைப் பார்த்து என்ன புத்தகம் படிக்கிறாய் என்று கேட்டார். சிறுவன் குழ்ந்தை வளர்ப்பது எப்படி என்ற புத்தகத்தை படித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னான். தந்தைக்கோ ஆச்சரியம்.




''என்ன... குழந்தை வளர்ப்பது எப்படியா... நீ ஏன் அந்தப் புத்தகத்தை வாசிக்கிறாய்... உனக்கு வளர்ப்பதற்கு குழந்தையா இருக்கிறது'' என்று கேட்டான்.

சிறுவன் ''நீங்கள் என்னை இந்தப் புத்தகத்தில் உள்ளபடி வளர்க்கிறீர்களா என்று அறிந்துகொள்ளத்தான் வாசிக்கிறேன்'' என்றான்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான யதார்த்தமான— பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜனவரி15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



*கே.மகா — மிருசுவில்*

**கேள்வி:—** **Dearest பித்து (முத்து) அங்கிள்! வீதியில் செல்லும் ஆண்கள் பெண்களைக் கண்டவுடன் கையில் Hand Phone ஐ எடுப்பது ஏன்?**

பதில்:— டயல் செய்வதற்கு (சுழற்றுவதற்கு)

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85.ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு—14.

*விதுஷன் — தங்காலை*

**கேள்வி:—** ***பித்தா முந்திய காலத்தில் காளையை அடக்கும் வீரருக்குத்தான் தங்கள் பெண்ணை திருமணம் செய்து கொடுத்தார்களே ஏன் பித்தா இந்தப் போட்டி?***

பதில்:— காளையை அடக்கச் கூடிய வீரம் உள்ளவர்களால்தான் தங்கள் வீட்டு கன்னியை அடக்க முடியும் என்று பெற்றோர்கள் நினைத்திருப்பார்கள் அதனால்.

*புவிதா— திருநெல்வேலி கிழக்கு.*

**கேள்வி:—** ***பித்தா! இன்றைய கால கட்டத்தில் இந்தச் சமாதானம் நிலைக்குமா? அல்லது குழம்புமா? என்ற மனநிலை அனைவரிடமும் ஏற்பட்டு காணப்படுகிறது. இதுபற்றி உமது கருத்தென்ன?***



பதில்:— அப்படி ஒரு நிலைமை இருந்தது டிசம்பர் 26க்கு முன்னர். ஆனால், இப்போ நிலைமை வேறு. ஸ்ரீலங்காப் படைகளின் கட்டமைப்பில் சுனாமி கடற்கொந்தழிப்பு ஏற்படுத்திய பாதிப்புகளை சீர் செய்யவே குறைந்தது ஒரு வருடமாவது வேண்டுமாம். இந்த நிலையில் இப்போதைக்கு போர் என்ற பேச்சை எடுக்கக் கூட முடியாத நிலை படைத்தரப்புக்கும் அரசுக்கும் ஏற்பட்டுள்ளது.

*க.றதீஸ்— யூனியன் குளம்.*

**கேள்வி:—** *பித்தா! சினிமாவினால் இளைஞர்கள் சீரழிகிறார்களா? அல்லது தெரியாதவற்றைத் தெரிந்து கொள்கிறார்களா?*

பதில்:— இப்போதைய படங்களில் எல்லாம் தெரியாதவற்றைத் தெரியப்பண்ணுவதால் அவைகளைப் பார்த்து இளைஞர்கள் கெட்டு சீரழிந்து போகிறார்கள் என்பதே உண்மை.

*ஐ.றமேஷ்— சிலாபம்.*

**கேள்வி:—** *பித்தா! சில படித்தவர்கள் தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் — மற்றவர்கள் எல்லாம் முட்டாள்கள் என்று நினைக்கிறார்களே— உமது கருத்தென்ன?*

பதில்:— சாதாரணமான— படிக்காதவர்களிடத்திலும் புத்திசாலித்தனம் வெளிப்படுவதுண்டு. உதாரணம் ஜப்பானிலே ஒரு நிறுவனம் சவர்க்காரங்களைத் தயாரித்து விற்று வந்தது. ஆனால், தொழில் போட்டியால் நின்றுபிடிக்கமுடியவில்லை. எனவே தாம் தயாரித்த சவர்க்காரங்களை பிளாஸ்டிக் பெட்டி ஒன்றில் போட்டு விற்பனை செய்ய முடிவு செய்தது. அவ்வாறு வந்ததில் வியாபாரம் சூடுபிடித்தது.

ஆனால் ஒரு சிக்கல்... பல பிளாஸ்டிக் பெட்டிகளில் சவர்க்காரம் வைக்கப்படாமல் விற்பனைக்குச் சென்றது. இதனால் வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடைந்தனர்.ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்தன. இதனால் சவர்க்காரம் விற்பனை குறைந்தது.

உடனே சவர்க்காரக் கம்பனிக்காரர்கள் இதனைத்தடுக்க திட்டமிட்டனர். பல்வேறு ஆலோசனைகளைத் தருவிக்க திட்டமிடப்பட்டது. எல்லாம் பல லட்சம் ரூபாசெலவான திட்டங்களாகவே இருந்தன.

இதனைக் கண்ட அங்கு வேலை செய்த ஊழியர் ஒருவர் தனக்குத் தெரிந்த ஆலோசனை ஒன்றைக்கூற முன்வந்தார்.



ஆனால், சவர்க்கார நிறுவனத்தின் நிர்வாகிகள் அதனைக் கேட்க விரும்பவில்லை. பல நாடுகளில் சென்று படித்த எமக்குத் இவனிடம் என்ன பெரியதாக ஆலோசனை இருக்கப்போகிறது என்று நினைத்தனர். ஆயினும் அவனது தொல்லையை தாங்க முடியாது சரி எதற்கும் கேட்டுப்பார்ப்போமே என்று வேண்டா வெறுப்புடன் தீர்மானித்தனர்.

அந்த ஊழியன் சாதாரணமான ஒரு மேசை விசிறியை (Table Fan) கொண்டு இந்தப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று சொன்னபோது அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

அந்த ஊழியன் சவர்க்காரங்கள் அடங்கிய பிளாஸ்டிக் பெட்டிகள் நகர்ந்து வரும் இடத்தில் அந்த மேசைவிசிறியை வைத்து அதனைப் பலமாக சுற்ற விட்டான். அப்போது சவர்க்காரமில்லாத வெற்று பிளாஸ்டிக் பெட்டிகள் விசிறியின் காற்றில் தூக்கி வீசப்பட்டன. சவர்க்காரமிருந்த பெட்டிகளில் விசிறியின் காற்றுப் பட்டபோதும் பாரம் காரணமாக அவை தூக்கி வீசப்படவில்லை.

பல லட்சம் ரூபாக்களை செலவழிக்க இருந்த நிறுவனத்துக்கு சில ஆயிரங்களுடன் பிரச்சினை தீர்க்கப்பட்டது. இதற்கு அந்த ஊழியனின் புத்திசாலித்தனம் தானே காரணம். மெத்தப்படித்தவர்கள்— படித்தவற்றை வைத்துத்தான் சிந்திப்



பார்கள். படிக்காதவர்கள் நடைமுறையையும்— அனுபவத்தையும் வைத்துச் சிந்திப்பார்கள்.

*தயாபரன்— வேணாவில்.*

**கேள்வி:—** ***அறிவுடைய பித்தா! ஆண்களும் கருத்தரித்தால் எப்படி இருக்கும் நிலைமை?***

பதில்:— ஆண்கள் இரவிலே தனியாக றோட்டால் செல்லமுடியாத நிலை ஏற்படும்.

*செ.நிர்மலா—நாணாட்டான்.*

**கேள்வி:—** ***பித்தா! கட்டிய சேலையுடன் உன்னை வைத்து நான் காப்பாற்றுவேன் என்று காதலர் சொல்கிறாரே.. போகவா?***

பதில்:— ச்சீய்.. பிளவுஸையும் போட்டு கொண்டு போம். இல்லாவிட்டால் கவர்ச்சி தூக்கலாக இருக்கும்.


## பித்தனின் கேள்வி

**கேள்வி:—** ஆனைக்கும் அடி சறுக்கும் என்பார்களே எவ்வளவுதான் அவதானமாய் இருந்தாலும் சிலர் வாழ்க்கையை கோட்டை விடுகிறார்களே? இதை என்னவென்று சொல்வது பித்தா?

## வாசகர்கள் பதில்கள்


*இளவேனில்— யாழ்ப்பாணம்.*

எந்தப் பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும்

*திருமதி. பிரியந்தி — அளவெட்டி*

பூனை உருவில் இருந்து கொண்டு ஆனை அளவுக்கு கதை அளப்பவர்களுக்காக கொடுக்கப்பட்ட முதுமொழி.

*திண்டுவளர்ந்தான் — நல்லூர்*

அவர்கள் அதிக அவதானமாய் இருப்பதாக எப்போது அவர்களது மண்டை கனக்கிறதோ அதுவே அவர்களை சறுக்கி விழுத்துகிறது.

*தஜீகரன் — யாழ்ப்பாணம்.*

அதைத்தான் நீரே சொல்லி விட்டீரே இதில் நான் என்ன சொல்ல? இது போன்ற குண்டக்கா மண்டக்கா கேள்வி எல்லாம் இனிமேல் வேண்டாம் பிளீஸ்.

*உ.நந்தினி— செட்டிகுளம்.*

இப் பழமொழியின் சரியான அர்த்தம் தொரியாமல் எத்தனையோ மனித ஜென்மங்கள் எம்மத்தியில் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனைகளுக்கு சொல்லியா புரியப் போகின்றது.

**இலக்கியப் பொழில்**

# இராவணன் இராட்சதனா?

**சொல்லேருழவன் ம.க.அ.அந்தனிசில்**

இலங்கைத்தீவின் நீளளவு என்ன? இலங்கையின் பருத்தித்துறையிலுள்ள பனைமுனை முதல் தென்கோடியிலுள்ள தெய்வேந்திரமுனைவரையுள்ள தூரத்தை ஒரே நோக்கில் நம் கண்களால் பார்க்க முடியுமா? இல்லையல்லவா! வாகனத்தில் சென்றாலும்கூட நம்மைக் கடந்து செல்லும் நிலத் தொகுதியையே பார்த்து அளவிட்டுக் கணிக்கலாம். அதுவும் கடுகதி வேகத்தில் செல்லக்கூடிய பேருந்து அல்லது ரயில் வண்டியில் சென்றால் மட்டுமே; அதுவும் கூட எங்கும் தரிக்காமல் சென்றால் மட்டுமே சுமார் பன்னிரெண்டு மணி நேரங்களில் தெய்வேந்திரமுனையை சென்றடையமுடியும். இதனைக் கணிப்பிட்டுப் பார்க்கும் பொழுது கும்பகர்ணனின் வலதுதோள் முதல் இடதுதோள் வரையிலான அளவு இலங்கைத்தீவின் நீள அளவை கொண்டதாக அமைந்து கொள்கிறது. இதனாற்றான் இராம இராவணச் சமர் நடைபெற்ற போர்க்களம் எங்கிருந்ததென்ற கேள்வியை எழுப்பினோம்.

ஏனெனில், கம்பரின் வர்ணனையை நோக்கும் கால் கும்பகர்ணனின் மேனியளவை ஊகித்துப் பார்க்கும் பொழுது அவனொருவன் மட்டும் தானே இலங்கைத்தீவின் நிலப்பரப்பில் நிற்பதற்கு இடம் இருந்திருக்க முடியும்! அது அவ்வாறிருக்க-

இராவணனின் ஒரே தங்கையான சூர்ப்பனகை இராமனையும், இலட்சுமணனையும் தண்டகாருண்யம் காட்டில் தற்செயலாக சந்திக்க நேர்ந்தமை ஏலவே சொல்லப்பட்டதே.

இராமனின் அழகில் சூர்ப்பனகை மயங்குகின்றாள். இவர் மன்மதனா, இந்திரனா, மகாதேவனா, மகாவிஷ்ணுவா என்றெல்லாம் யோசிக்கிறாள். அதற்கான பதிலும் அவளது மனதில் உதிக்கிறது. மன்மதனுக்கு உடலில்லையே. இந்திரனுக்கு ஓராயிரம் கண்களாயிற்றே. மகாதேவனுக்கு நெற்றிக்கண் இருக்குமே. இவனுக்கு நான்கு கைகள் கூட இல்லையே. ஆதலால் இவன்

**இராவணன் இராட்சதனா? தொடரின் முதலாவது பகுதி இலக்கியப் பொழிலில் கடந்த வாரம் பிரசுரமாகி இருந்தது. இரண்டாவது - இறுதிப் பகுதி இங்கே பிரசுரமாகி இருக்கிறது.**

மன்மதனோ, இந்திரனோ, பரமசிவனோ, மகாவிஷ்ணுவோ அல்ல. ஒரு சமயம் பரமசிவனால் சாம்பலான மன்மதன் தான் பெருந்தவம் செய்து அழகுடம்பைப் பெற்றாரோ என நினைக்கலானாள்.

'கற்றையஞ் சடையன் கண்ணிற் காய்தலால் இற்றவன் அன்று தொட்(டு) இன்று காறுந்தான் நற்றவும் இயற்றி, அவ் அனங்கள் நல் உருப் பெற்றன னாம் எனப் பெயர்த்தும் எண்ணுவாள்'
என்றவாறு.

ஆயினும் இவன் ஒரு மானிடன் என்ற முடிவுக்கு வந்த சூர்ப்பனகை இந்த அழகுமிக்க ஆடவன் ஏன் விரதமிருந்து தன் அழகுமேனியை வருத்த வேண்டும். தவமிருந்து ஏன் காலத்தை வீணாக்க வேண்டுமென எண்ணியவாறு இராமனையே கண்கொட்டாமல் பார்த்து நிற்கிறாள்.

சூர்ப்பனகை கன்னி கழியாதவள்; ஓர் இளமங்கை. இராமனை அவள் காட்டில் சந்தித்த வேளையில் அவன் மணம் முடித்தவன் என்ற சேதி அவளுக்கு தெரியாமலிருந்தது. ஒரு மங்கை ஓர் ஆடவனை விரும்பினாளென்றால் அவன் அவளுக்கு பிடித்தமான அழகுடையவனாக இருத்தல் வேண்டும். அப்படியானால்தான் அவள் அவனை கண்கொட்டாமல் பார்த்து நிற்கமுடியும். அவ்வாறுதான் ஆடவனின் பார்வையும் அமையுமெனில் அந்நொடியில் தான்



தூய்மையான காதல் அரும்புகிறது.

ஆதலின் சூர்ப்பனகை இராமனை கண்கொட்டாமல் பார்த்து நின்றதில் எவ்விதத தப்புமில்லை; தவறுமில்லை.

அதனாற்றான் இராமனும் தன்னைக் கண்டு காதல் கொள்ள வேண்டுமென்பதற்காக சூர்ப்பனகை தனது அரக்கி உருவத்தை மாற்றி எழிலான மங்கைபோல் ஒயிலாகத் தோன்றினாள் என்கிறார் கம்பர்.

'திங்களில் சிறந்தெழில் முகத்தள் செவ்வியள் பொங்கொளி விசும்பினில் பொலியத் தோன்றினாள்' என்றவாறு.

அரக்கர்கள் (இராட்சதர்கள்) தம் உருவத்தை மாற்றி அழகானவர்களாகத் தோன்ற முடியுமானால் அதே மாயசக்தியைப் பயன்படுத்தி அவர்கள் என்றென்றும் அழகுள்ளவர்களாகவே வாழ்ந்திருக்கலாம்.

வால்மீகி இராமாயணத்தில் சூர்ப்பனகை 'காமருபினி' என விவரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. காமருபினி என்றால் நினைத்த நேரத்தில் நினைத்த வடிவம் எடுக்கும் மாயாசக்தி வாய்ந்தவள் என்பதாம்.

தண்டகாருண்யம் காட்டில் சூர்ப்பனகை இராம இலட்சுமணரைப் பார்த்த பின்னரே சீதையைக்காண நேரிடுகிறது. அதனாலென்ன? சூர்ப்பனகை சீதையை தன் எதிரியாகக் கணிப்பது போல் கதை அமைக்கப்படுகின்றது.

சூர்ப்பனகை இராம இலட்சுமணரால் மிலேச்சத்தனமாக அவமானப்படுத்தப்பட்டதை அறிந்த இராவணன் சினம் கொண்டான்; சீற்றமுற்றான். இராம இலட்சுமணன் தண்டகாருண்யம் காட்டில் நாணாவித சேனைகள் புடைசூழ இருக்கவில்லை; தனித்தே வாழ்ந்தார்கள். அதன் காரணமாகவே அந்நாட்டு பேரரசனான இராவணனால் அவர்கள்மீது போர் தொடுக்கும் எண்ணம் எழாமல் இருந்திருக்கலாம். மாறாக தன் தங்கையும் இளவரசியுமான சூர்ப்பனகையை பண்பாடின்றி அவமதித்த மன்னிக்க முடியாத குற்றத்திற்காக சீதையைக் கடத்தி இராமனை என்றுமில்லாத அவமானத்துக்கு உள்ளாக்க வேண்டுமென்ற முடிவுக்கு அவன் வந்திருக்கலாம். இம் முடிவு மாற்றான் மனைவியான சீதையின் பால் இராவணனுக்கு உண்டான காமவெறியின் நிமித்தம் தோன்றியதென யார் தான், ஏன்தான், எப்படித்தான் சொல்ல முடியும்?

தண்டகாருண்யம் காட்டில் தனியனாக நின்ற இளவரசியான சூர்ப்பனகையை வரம்புமீறி பிரம்பால் அடித்தனுப்பியது, அவள் பெண் என்ற வகையில் எந்தவொரு சாமான்ய குடிமகனாலும் கூட மன்னிக்க முடியாத இழிசெயல் அல்லவா? இதற்குப் பழி தீர்க்கவே இராவணன் சீதையைக் கடத்தினானென்றால் என்ன மிகை?

அரக்கி என்று சொல்லப்படும் சூர்ப்பனகை தான் மையல் கொண்ட இராமனை தன் மாயவலையில் வீழ்த்துவதற்கு சந்திரவதனம் போல் தன் முகத்தை மாற்றி அழகான உருவில் அவன்முன் தோன்றினாள் என்பது கம்பரின் கற்பனையாயின் அதனை இராவணன் எப்படி அறிந்திருக்க முடியும்?

அரக்கர்கள் யாவரும் அவலட்சணமுடையவராயின் சீதையைக் கடத்திய இராவணன் தன் உருவத்தையும் அழகனாக மாற்றிக் கொண்டானா? இல்லையே!

ஆதிகாலத்தில் இயக்கரும், நாகரும் கூட நினைத்த நேரத்தில் நினைத்த வடிவம் எடுப்பவர்களென இதிகாச புராணங்கள் மட்டுமன்றி இலங்கையின் பௌத்த, சிங்கள வரலாற்று நூலான மகாவம்சமும் சித்திரிக்கின்றன.

தண்டகாருண்யம் காட்டில் இராமன் சூர்ப்பனகையை சுந்தரவதனமுடைய பெண்ணாகவே காண்கிறான்.

'குயில் தொடர் குதலை மொழியும் கொவ்வைச் செவ்வாயும் உடைய மயில் தொடர் இயலியாய்...'

சூர்ப்பனகை நின்றாளென கம்பர் கூறுகிறார்.

உண்மையில் அழகுடைய சூர்ப்பனகையே கற்பனை அம்சத்திற்கு மெருகூட்டுவதற்காக விகார உருவம்கொண்ட அரக்கியாகச் சித்தரிக்கப்பட்டாளோ என்னவோ?

வால்மீகி இராமாயணத்தை முதனூலாகக் கொண்டே கம்பர் இராமாவதார நூலை இயற்றினார். சில அம்சங்களில் கம்பராமாயணம் மாறுபட்டிருப்பினும் வால்மீகி முனிவரின் மையக்கருத்துக்கு குந்தகமில்லாத போக்கையே கம்பர் கையாண்டார்.

இராவணனால் தனிமையில் சீதை சிறைவைக்கப்பட்டிருந்த காலத்தில் அவளின் கற்புநெறி தொடர்பாக இராமனுக்கு ஐயம் தோன்றியிருத்தல் வேண்டும். அதனால் தான் சிறைமீட்கப்பட்ட சீதையை இராமன் தீமிதிக்கச் சொன்னானா? உலகின்கண் சீதையின் கற்பின் மேன்மையை உணர்த்துவதற்காகவே இராமன் அப்படிச் சொன்னானென்றால் அழகுமேனியுடைய இராமனைவிடவும் இராவணன் அழகிற் சிறந்து விளங்கினானா என்ற கேள்வியும் அல்லவா இங்கு எழுகிறது! இல்லையேல் இராமனுக்கு சிற்றளவு ஐயமும் உண்டான காரணம் என்னவோ?

ஆதலின் இராட்சதர்கள் (அரக்கர்கள்) அவலட்சணமானவர்கள் எனும் கதையின் அம்சம் இங்கு அடிபட்டுப் போகிறது.

## காவியம்

பழைய வரலாற்றுச் செய்திகளுடன் கற்பனையும் கலந்து எழுதப்படும் போது அது காவியமாக பரிணமிக்கிறது. பெரும்பாலும் காவியங்கள் எல்லாம் அத்தகையவைதான்.

பாட்டு வடிவிலமைந்த இலக்கியங்களில் முதலில் தோன்றியது காவியமாகவே இருக்க வேண்டும் என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். வட மொழியின் ஆதிகாவியமான இராமாயணத்தை வால்மீகி முனிவர் பாட்டு நடையிலேயே இயற்றினார். அதனையே கம்பர் விருத்தப்பாவில் நமக்குத்தந்தார்.

பழங்காலத்து மக்கள் பெரும் பெரும் நிகழ்ச்சிகளையெல்லாம் உணர்ச்சியோடு கண்டனர். உணர்ச்சியூட்டிக் கூறினர். அவற்றை வழிவழியாகப் பலருக்கும் கூறிவந்தனர். மக்களின் உள்ளங்களில் அப்பழைய நிகழ்ச்சிகள் உணர்ச்சியோடு வாழ்ந்து நிலைத்தன. பிற்காலத்தில் வாழ்ந்த மக்கள் தத்தமது காலத்துப் பெரிய நிகழ்ச்சிகளையும் அவற்றோடு கூட்டிப் பெருக்கினர். அவை பல்வேறு நிகழ்ச்சிகளின் கோவையாக உருப்பெற்றன. அவைகளே காவியம் எனப்பட்டன. ஈற்றில் அவற்றுக்கு எழுத்து வடிவம் தந்து தொகுக்கும் வாய்ப்பு ஒருவருக்கு கிட்டுகிறது. அவரே அக்காவியத்தை இயற்றிய புலவரென போற்றப்படுகிறார். உண்மையாக நோக்கினால் அவருக்கு முன்னரே நிகழ்ச்சிகள் உணர்ச்சியுடன் உருவாகி வளர்ந்திருந்தன எனலாம்.
(C.T. WINCHESTER 'SOME PRINCIPLES OF LITERARY CRITICISM', P. 24)

அவ்வாறுதான் வால்மீகி முனிவரும் பல நூற்றாண்டுகளாக பழங்கால மக்களிடையே வழங்கிவந்த மாயுக் கதைகளை தனது கற்பனை அம்சங்களுடன் பின்னிப்பிணைந்து இராமாயண காவியத்தை இயற்றினார். சிலர் கூறுவது போல் அவர் இராமர் காலத்தில் வாழ்ந்தவரல்ல.

## இராவணன்

ஆரியர் (இந்திய) துணைக் கண்டத்திற்கு ஊடுருவ முன்னர் துணைக்கண்டத்தில் வாழ்ந்தவர்கள் ஊமைகளாகவோ, அன்றி பேசு மொழி அற்றவர்களாகவோ இருந்ததில்லை. ஆரியரின் கூற்றுக்களைப் படித்தால் அப்படித்தான் நினைக்கத் தோன்றும். அத்தனையும் குயுக்திபானவை.

(22 ஆம் பக்கம் பார்க்க ...)

**வாராவார்ம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**



'காதல்'
-சாந்தி-

## அந்த நடிகையா இவர்?

திரையில் கலக்கிக் கொண்டிருக்கும் காதல் திரைப்படத்தின் நாயகி சாந்தியா இவர் என்று கேட்கும் அளவுக்கு அழகாக இப் படத்தில் மாறியிருக்கிறார் அல்லவா?

# புரட்சியோடு காதல் அரங்கம்

'கடவுள்', 'புரட்சிக்காரன்' போன்ற புரட்சிகரமான படங்களை இயக்கித் தயாரித்த வேலு பிரபாகரனின் அடுத்த படைப்பு 'காதல் அரங்கம்'.

தனது ஒவ்வொரு படத்தின் மூலமும் புரட்சிகரமான கருத்துக்களை வலியுறுத்திவரும் வேலு பிரபாகரன் 'காதல் அரங்கம்' படத்தின் மூலம் சொல்ல வரும் கருத்து என்ன....?

''ஒரு ஆண் பிறவியைப் போன்றதுதான் பெண்பிறவியும். ஆனால், ஒரு ஆணுக்குள்ள சுதந்திரம் பெண்ணுக்குக் கிடையாது.

ஒரு ஆண் வீதியில் நடந்து சென்றால் யாரும் அவரைப் பார்க்க மாட்டார்கள். ஆனால், அதே இடத்தில் ஒரு பெண்ணாக இருந்தால், அவளைப் பல மனிதக்கண்கள் பின்தொடரும். அவளது அங்க — அவையங்களை ரசித்துப் பார்ப்பார்கள். சிலர் காமப் பார்வையோடு பார்ப்பார்கள்!

பெண் என்றாலே ஆண்களின் போக வஸ்துவாகத்தான் நினைக்கிறார்கள். ஆண்களின் காமத்தைத் தணிக்கப் பயன்படும் ஒரு பொருளாகத் தான் மதிக்கிறார்கள்.



'காதல் அரங்கம்'
-ப்ரீத்தி ரங்கயானி-

ஆண்களின் இந்த மனநிலைக்கு என்ன காரணம்? இந்த நிலை மாற வேண்டும் என்றால் அதற்கு எந்த வழி முறைகளை நாம் பின்பற்ற வேண்டும்?

இந்தக் கருத்தைத் தான் 'காதல் அரங்கம்' மூலம் வேலு பிரபாகரன் சொல்ல வருகிறார்.

கதைக்குத் தேவையான ஏராளமான கவர்ச்சிக் காட்சிகளுடன் இப்படம் உருவாக்கப்படுகின்றது.

இப்படத்தில் ஷெர்லிதாஸ், ப்ரீத்தி ரங்கயானி, ஷரத் செந்தில், ரத்தனராஜ், பூச்சி, செந்தில், பாபிலோனா, ஜெய் ஆகியோருடன் வேலு பிரபாகரனும் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

இயக்கம் வேலு ராஜா, இசை ஜேரோம்.

இப் படத்தினை எதிர் வரும் புதுவருடத் தினத்தில் திரையில் பார்த்தால்தான் உண்மை நிலவரம் புரியும்.

# 2004 இல் சூப்பர் ஸ்டார் யார்?

2004 இல் சூப்பர் ஸ்டார் யாரு? இந்திய வார இதழ் ஒன்றின் கருத்துக்கணிப்பு முடிவுகள் இவை.

டியர் ரீடர்ஸ்.... 2004 ஆம் வருடத்தின் வெற்றிக் கோப்பை யாருக்கு? உங்களை போலவே எங்களுக்கும் ஆர்வம். 2004 டிசம்பர் இரவு வரை காத்திருந்து கடைசி நிமிட வாக்குகளையும் பெற்றுக் கொண்டு முடிவுகளை சரிபார்க்க ஆரம்பித்தோம்.

முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களை மட்டும் இங்கே அறிவித்திருக்கிறோம். பெற முடியாத மற்றவர்கள் போராடி அடுத்த ஆண்டிலாவது முதலிடத்திற்கு வர வாழ்த்துவோம்.

பிடித்த நடிகர்:— விஜய் 48.5, அஜித் 22.9, கமலஹாசன் 7.4. பிடித்த நடிகை:— த்ரிஷா 40.4, சினேகா 15.5, ஜோதிகா 11.6. சிறந்த நகைச்சுவை நடிகர்:— விவேக் 50.7, வடிவேலு 38, கருணாஸ் 6.6. சிறந்த இசையமைப்பாளர்:— ஏ.ஆர்.ரஹ்மான் 28.7, வித்தியாசாகர் 21.2, யுவன்சங்கர்ராஜா 18.6.

சிறந்த பாடகர்:— கார்த்திக் 28.9, எஸ்.பி.பி. 14.5, ஹரிஷ் ராகவேந்திரா 8.9. சிறந்த பாடகி:— சாதனா சர்க்கம் 18.5, சித்ரா 11.5, ஹரிணி 9.7. சிறந்த நடிப்பு:— விஜய் 36.5, அஜீத் 10.4, கமல் 8.7 சிறந்த குணசித்திர நடிகர்:— யுகேந்திரன் 19.6, பிரகாஷ்ராஜ் 10.6, சிறந்த கவர்ச்சி நடிகை:— சோனியா அகர்வால் 19.7, மும்தாஜ் 11.5, ரீமாசென் 8.5. சிறந்த டைரக்டர்:— தரணி 32.5, சேரன் 16.2, செல்வராகவன் 11.3. சிறந்த படம்:— கில்லி 26, ஆட்டோகிராஃப் 14, அட்டகாசம் 12.8, சிறந்த வில்லன்:— ரகுவரன் 25, பிரகாஷ்ராஜ் 29, பசுபதி 6.32 சதவீதமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## இளமை தொட்டுக்க ஊறுகாய் மாதிரி—அபர்ணா

50 கிலோ கிராம் இளமை அருவி. தமிழ்நாட்டில் புறப்பட்ட இந்த அருவி இப்போது சங்கமமாகியிருப்பது கேரளாவில்.

'டிசம்பர்' என்கிற மலையாளப் படத்தில் நடிக்கிறேன். படத்தோட கதை என்ன ரொம்ப இம்ப்ரஸ் பண்ணிடுச்சு. இதில் ரொம்ப ரொம்ப ஜொலியான மருத்துவக் கல்லூரி மாணவிப் பொண்ணு. விளையாட்டுத் தனமும் யதார்த்தமும் புத்திசாலித்தனமும் சேர்ந்த சரிவிகித கலவையா நடிச்சிருக்கேன்.

புதுக்கோட்டையிலிருந்து சரவணன் படத்தில் கிளாமராக நடித்த அபர்ணாவின் இஷ்ட நடிகைகள் கவர்ச்சியே காட்டாத ரேவதி மற்றும் சுஹாசினி. அப்படினா கிளாமருக்கு குட்பையா?

என்னைப் பொறுத்தவரை கிளாமர்ங்கிறது தொட்டுக்க ஊறுகாய் மாதிரி இருக்கணுமே தவிர முழுச்சாப்பாடாக இருக்கக் கூடாதுன்னு விரும்புகிறேன் என்றார்.

அவரது கனவு நாயகன் இங்கிலாந்து இளவரசர் வில்லியம்ஸ். காதலிக்க இன்னும் மன்மதன் அபர்ணா கண்ணில் படவில்லையாம்.

# இயக்குனர் தரணியின் உள்ளக் குமுறல்கள்

திருச்சி தூயவளனார் கல்லூரி கலை விழா நிறைவு விழாவுக்கு வந்திருந்தார் 'தில்', 'தூள்', 'கில்லி' திரைப்படங்களின் இயக்குநர் தரணி. 18 ஆண்டுகள் உதவி இயக்குநராக பணியாற்றிய அனுபவம் பற்றி உணர்ச்சிபூர்வமாக விளக்கினார் அவர்.

''இயக்குனர் ஆர்.வி.உதயகுமார் சாரிடம்தான் பணியாற்றினேன். அக்காலம் நல்ல அனுபவத்தை தந்தது. 7 பெரிய ஹீரோக்களுடன் பணியாற்றியுள்ளேன்.



-இயக்குநர் தரணி-

எஜமானில் ரஜினிகாந்த், சிங்காரவேலனில் கமல், புதிய வானத்தில் சிவாஜி மற்றும் சத்தியராஜ், கிழக்கு வாசலில் கார்த்திக், உறுதிமொழியில் பிரபு மற்றும் சிவகுமார் ஆகியோருடன் பணியாற்றியுள்ளேன்.

உதயகுமார் சார் நல்லா பாடல் எழுதுவார். எதிரும் புதிரும் படத்தை முதலில் இயக்கினேன். அந்த படம் வெளியாக 5 வருஷம் ஆனது. இருந்த போதிலும் பல ஊர்களில் சராசரியாக அந்தப் படம் ஓடியது.

இந்த நிலையில் விபத்தில் சிக்கினேன். நடக்க முடியாது ஊன்றுகோலுடன் கதை விவாதத்தில் பங்கேற்பேன். தமிழ், தெலுங்கு என்று மொழி வித்தியாசமில்லாமல் பணிபுரிந்தேன்.

நான் பணியாற்றிய 7 ஹீரோக்களுக்கும் என்னைத் தெரியும். யாரும் எனக்கு வாய்ப்புத் தரவில்லை. இதற்காக அவர்களை குறை கூறவில்லை. என்னை பற்றி அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும், புது இயக்குநராக செல்லும் போது அவர்களுக்கு என் மீது நம்பிக்கை வரவில்லை.

இவன் ஜெயிப்பானா? என்று நினைத்தார்கள். 'தில்' வாய்ப்பு வந்தது. ஊன்றுகோலுடன் சென்று கதை சொன்னேன்.

என்னோட கல்லூரியில் படிச்ச விக்ரம்தான் ஹீரோ. எனக்கு தோல்வி, பிரச்சினை வந்தபோதும் மனசை இழக்கவில்லை. இதயமே வலிச்ச போதும், இலக்கில்மட்டுமே கவனம் செலுத்துவேன்.

இயக்குநராகவிரும்புவோருக்கும் நான் சொல்வது இது மட்டும்தான். பெரிய இயக்குநரின் உதவியாளராக சேர்ந்தால்தான் ஜெயிக்க முடியும் என்று அர்த்தம் இல்லை. நன்றாக நீங்கள் பணிபுரிந்தால் உங்களை அடையாளம்கண்டு கொள்வார்கள்'' என்றார் தரணி.

தேசிய விருது பெறும் வகையில் திரைப்படம் தரும் எண்ணமுண்டா என்று கேட்டதற்கு, சோதனை முயற்சி சொந்த செலவில்தான் செய்து பார்க்க வேண்டும். ஊரார் காசில்செய்து பார்க்கக்கூடாது. 'காதல் கோட்டை' மாதிரி படம் எடுக்கும் ஆசையுண்டு. நமது வேலையை தேர்வு செய்து அதை நன்றாக செய்தால் போதும், உங்களுக்கு நல்ல இடம் கிடைக்கும்' என்றார் பளிச்சென்று.



'சச்சின்'
-விஜய், ஹரினி-

# பனிமழையில் சச்சின்

ஊட்டியில் நடைபெறும் சச்சின் படப்பிடிப்பு முழுவதும் இயற்கை பொழியும் பனிமழையில் படமாக்கப்பட்டு வருகிறது. இப்படப் பிடிப்புக்காக கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் நடித்து வருகிறார் இளைய தளபதி விஜய். இந்தப் படத்தில் விஜயின் ஈடுபாட்டைக் கண்டு படப்பிடிப்புக் குழுவினர் பிரமித்து விட்டனராம்.

# இவ்வார சினி ஸ்டார்

# சினி டிப்ஸ்

ரோகான் என்பவரின் வலையில் சிக்கி, பெற்ற தாயை விலக்கிவைத்திருந்த நடிகை ஷெரீன் அந்தத் தாயாரே வியக்கும் அளவுக்குத் திருந்திவிட்டாராம். காதல் திருடா படப்பிடிப்புக்கு தாயார் யசோதா துணையுடன் வந்த ஷெரீன் காதலன் ரோகானின் உறவைத் துண்டித்து விட்டார்.

*****

அழகிய தீயே இயக்குனர் கே.இராதாமோகன் இயக்கும் பொன்னியில் செல்வன் படத்தில் அழகிய முகத்தை கோரமாக மாற்றிக் கொள்கிறாராம் ரவிகிருஷ்ணா. 7 ஜி ரெயின்போ காலனி ரசிகர்களிடம் பரபரப்பாக பேசவைத்ததுதைப் போல பொன்னியின் செல்வன் படமும் பேசவைக்கும் என்று நம்புகிறார் அவர்.

*****

சிகரெட் குடிப்பது உடல் நலத்துக்கு கேடு என்ற வாசகம், அட்டகாசம் படத்தின் தலைப்பு காட்டுவதற்கு முன் திரையில் காட்டப்படும். இதே போல் மரக்கன்றுகள் நடுங்கள் என்பதும் இனி எனது படங்களின் மூலம் வலியுறுத்தப்படும் என்கிறார் அஜித்.

*****

சச்சின் படத்தின் படப்பிடிப்பு ஊட்டியில் தொடங்கிவிட்டது. கதைப்படி ஊட்டிதான் படத்தின் ஹைலைட். 20 நாள்கள் தொடர்ந்து அங்கேயே படப்பிடிப்பு நடத்துகின்றனர் சச்சின் குழுவினர்.

*****

செல்வராகவனின் படங்களில் ஒளிப்பதிவு செய்து வந்த அரவிந்த் கிருஷ்ணா, இயக்குநராகிறார். படத்தின் ஹீரோ, தனுஷ். ஹீரோயின், சோனியா அகல்வார். படத்தின் பெயர் யுவன்.




# இயக்குனராகும் லாரன்ஸ்

ஏற்கனவே நடிகராக அவதாரமெடுத்து எடுபடாத நடன இயக்குநர் லாரன்ஸ் இப்போது இயக்குநராக புது அவதாரம் எடுக்கிறார்.

பிரபல நடன இயக்குனர் 'லாரன்ஸ்' ஏற்கனவே சில வருடங்களுக்கு முன் தெலுங்கு படம் ஒன்றில் நாயகனாக நடித்தார்.

படம் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து தெலுங்கில் ஹீரோ வாய்ப்பு வரவில்லை. அடுத்து, தமிழ் படங்களில் நடிக்க வாய்ப்புப் பெற்றார்.

பாலசந்தரின் 'பார்த்தாலே பரவசம்' மற்றும் 'ஸ்டைல்', 'அற்புதம்' ஆகிய படங்களில்நாயகனாகவும் 'பார்த்தேன் ரசித்தேன்' போன்ற படங்களில் வில்லன் கதாபாத்திரத்திலும் நடித்தார். எனினும் அவரது நடிப்பு எடுபடவில்லை.

இந்நிலையில் தெலுங்கில் இயக்குனராக உயர்கிறார் லாரன்ஸ். நாகர்ஜுன் ஹீரோவாக நடிக்கும் 'மாஸ்' படத்தை லாரன்ஸ் இயக்கிவருகிறார். இப்படத்தில் ஜோதிகா நாயகியாக நடிக்கிறார்.

இப்படம் தெலுங்குப் படவுலகில் நிஜமாகவே ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. கதை நன்றாக உள்ளது என்ற பேச்சும் தெலுங்குப் பட வட்டாரத்தில் பரவலாக அடிபடுகிறதாம்.

எப்படியோ லாரன்ஸின் 'மாஸ்' வெற்றி பெற்று அவருடைய இயக்குனர் அவதாரம் எடுபட்டால் நமக்கும் சந்தோஷமே.

# வெள்ளத்தில் சிக்கிய ராதிகா




சே, மனசே கனத்துப் போச்சு.

... சாந்தி, எவனாவது நீ குளிக்கும் போது வீடியோ எடுத்திட்டானா?

சீ, நீயும் உன் புத்தியும். நான் கடல் கொந்தளிப்பில் உயிரை விட்டவங்களை பத்தி சொன்னேன்.

ரொம்ப கொடூரம், காலையில் பீச்சுக்கு போனா எல்லா இடமும் அழுகை சத்தம். பீச், பீச் மாதிரி இல்ல.

ராதிகா இலங்கையில மாட்டிகிட்டாங்களாமே. அதுபத்தி தெரியுமா?

ராதிகா, 'செல்வி'ங்கிற பெயர்ல புதிய டி.வி. தொடர் தயாரிக்கிறாங்க. அந்த ஷூட்டிங்கிற்காக கொழும்பு கடற்கரையில் ஷூட்டிங் ஏற்பாடு செய்திருக்காங்க. நல்லவேளை, அலையைப் பார்த்ததும் ஓடி வந்த தால தப்பிச்சுட்டாங்க.

குஷ்பு கூட ரொம்ப பயந்துட்டாங்க.

# தமிழ் மணிவினர் பாலுமகேந்திரா

மூட்டைப்பூச்சிக்குப் பயந்து வீட்டை கொளுத்திய கதை பாலுமகேந்திராவின் படப்பிடிப்பின்போது நடந்துள்ளது.

தனுஷ் கதாநாயகனாக நடிக்கும் 'அது ஒரு கனாக்காலம்' படத்தின் படப்பிடிப்பு அண்மையில் ஆந்திரா மாநிலத்தில் உள்ள ராஜமுந்திரையில் நடந்து முடிந்து இப்போது பூந்தமல்லி எனும் இடத்தில் உள்ள பார்வையற்றோர் பாடசாலையில் நடந்து வருகிறது.

இப்படத்தின் படப்பிடிப்புக்கு முறைப்படி அனுமதி பெற்று அண்மையில் படப்பிடிப்பு ஆரம்பமானது. அரக்க பறக்க காட்சிகளை நடிகர்களுக்கு இயக்குநர் பாலுமகேந்திரா விளங்கப்படுத்திக் கொண்டிருந்த போது அங்கே வந்த முரட்டு ஆசாமி ஒருவர் இயக்குநரிடம் 'சீன்' காட்டத் தொடங்கியுள்ளார்.

''யோவ், யாருய்யா இங்க பயாஸ்கோப் காட்றது. நான் இந்த ஏரியா கவுன்சிலர். சுனாமியால எல்லாரும் சோகமாக இருக்கிறப்போ நீங்க 'ஷோ' காட்டிக்கிட்டு இருக்கீங்களா? தொலைச்சிடுவேன் தொலைச்சு'' — என்று அந்த ஆசாமி மிரட்டியிருக்கிறார்.

இதனால் கோபமாகிப்போன இயக்குநர் பாலுமகேந்திரா படப்பிடிப்பை இடைநிறுத்தி விட்டுப் போய் விட்டாராம்.

மீண்டும் படப்பிடிப்பைத் தொடங்க தயாரிப்பாளர்கள் பொலிஸாரை அணுகினர். உடனே பொலிஸார் வந்து விசாரித்தபோது, அந்த ஆசாமி கவுன்சிலர் அல்ல என்பது தெளிவானது.

''அடப்பாவி என்னையே ஒருத்தன் இயக்கிப் போட்டுப் போட்டானே'' என்று புலம்பியபடி மறுபடியும் படப்பிடிப்பைத் தொடங்கினார் பாலுமகேந்திரா.

# எஸ்.ஜே.சூர்யா - சிம்பு கூட்டில் ஏசி



'பி.எவ்' படத்திற்கு அடுத்து எஸ்.ஜே.சூர்யா இயக்கும் 'நிக் ஆர்ட்ஸ்' நிறுவனத்தின் படத்தில் சிம்பு கதாநாயகனாக நடிக்கிறார்.

'நியூ' படத்திற்குப் பிறகு விவகாரமான இயக்குநர் ஆனவர் எஸ்.ஜே.சூர்யா. 'நியூ' படத்துக்கு மகளிர் அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன. அதன்பிறகும் போட்டியாக மறுபடியும் ஒரு செக்ஸ் பாடல் எடுத்து படத்தில் இணைக்க முயன்றவர். அதற்கும் மேலாகத் தனது அடுத்த படத்துக்கு 'பி.எவ்.' என்று பெயர் வைத்தவர் ஒப்புக்கு 'பெஸ்ட் ப்ரண்ட்' என்பதன் சுருக்கம்தான் 'பி.எவ்' என்று சமாதானம் சொல்லிக்கொண்டார். உண்மையில் அவருக்கு விளம்பரத்திற்காகத் தேவை ஒரு பலமான காரணம்.

இந்நிலையில் 'ராமதாஸ்' பயமுறுத்தலுக்கு பயப்படமாட்டேன். 'பி.எவ்'பெயரை மாற்றமாட்டேன்' என்று கூறி பரபரப்பு ஏற்படுத்தினார். அடுத்து சிம்பு நாயகனாக நடிக்கும் தனது அடுத்த படத்துக்கு 'ஏசி' என்று பெயர் அறிவித்தார்.

ராமதாஸுடன் மோதத் தயாராகிவிட்டார் என்று நினைத்தால், அடித்தார் பாருங்கள் ஒரு பல்டி. 'ஏசி' என்ற டைட்டில் ஆங்கில AC அல்ல, தமிழ் 'ஏசி' தான். ஹீரோவின் பெயர் ஏழுமலை. ஹீரோயினியின் பெயர் சித்ரா. இரண்டின் முதல் எழுத்துக்கள்தான் ஏசி'' என்றவர் மேலும் "ராமதாஸ் தமிழ்ப்பெயர் வையுங்கள் என்று சொன்னது சரிதானே. இனிமேல் இப்படிப்பட்ட தமிழ்ப் பெயர்கள் தான் வைப்பேன்' என்று விளக்கமளித்துள்ளார்.

'ஏசி' என்பது தமிழ்ப் பெயர்தான் என்று இவர் கூறுவது உண்மையா அல்லது ராமதாஸை சீண்டவா என்று புரியவில்லை.

'பி.எவ்' படம் ஆகஸ்ட் மாதமும் 'ஏசி' படம் செப்டம்பர் மாதமும் வெளியாகின்றன என்றும் சூர்யா தெரிவித்தார்.





# நெருப்பாறு

02 குறு நாவல்

ச. முருகானந்தன்

அவள் அதிர்ந்து அவனை நோக்கினாள். அவளது உதடுகள் இளகியிருந்தன. மார்ப்புக் குன்றும், நெஞ்சும் ஒழுங்காக, மெதுவாக மிருதுவாக, மிதந்து, அமிழ்ந்து பெருமூச்சுவாங்கின.

"ஏன்?"

கேட்கும் அவள் குரலில் தெரிவது சலிப்பா, சீற்றமா என்று தெரியாமல் அவன் தவித்தான்.

அவன் மனதுக்குள் சந்தேகம் படி தாண்டிற்று.

அவன் மௌனமாக முகட்டைப் பார்த்தான். பதில் சொல்லவில்லை. அவளுக்குக் கலக்கமாக இருந்தது. ஒருவேளை குறைபாடு உள்ளவர் தானோ?.. சீ... அப்படி இருக்காது. முதலிரவுப் படத்தில் சிலருக்கு இப்படி ஏற்படுமென்று எங்கோ படித்த ஞாபகம். அப்படித்தான் இருக்கும் என்று அவள் தன்னைச் சாந்தப்படுத்திக்கொண்டாள்.

ஒரு முத்தமாவது.....?

இப்போது அவளே நெருங்கினாள். அவளது முகம் விகாரமுற்று உடலெல்லாம் வியர்த்துக் கொண்டிருந்தது. நெருக்கத்தில் வந்த அவளைத் தள்ளி விலக்கினான்.

"வேண்டாம்..."

ஒருவேளை அலியோ....?

அவளது மனதிலே கலக்கம்.

இப்போது அவன் ஒரு வித குற்ற உணர்வோடு அவளை நோக்கினான். சற்றே விலகியிருந்த முந்தானையூடாக, சட்டையின் மேற்புறமாக, பிதுங்கி வெடிக்கிறேன் என்று முனைப்பாய் நின்ற அழகை முந்தானையைச் சரிசெய்து அவன் மூடியபோது அவளுக்கு தலை கிறுகிறுத்தது.

ஊருலகத்தில் அவளது அழகில் மயங்காதவரே இல்லை என்னும் அளவுக்கு அவள் பேரழகி. கூடவே அந்த மாதுளை நிறமும் பார்ப்போர் கண்களைக் கட்டி நிறுத்தும். எத்தனை பேர் வழியிலும், தெருவிலும் அவள் அழகை ரசித்திருக்கிறார்கள். அப்படியிருக்க இவன்...?

வசந்தமாலாவுக்குக் குழப்பம். 'நான் ஒரு பெண். என்னதான் கணவன் என்றாலும் ஒரு அளவுக்கு மேல் வலிந்துபோனால் விரசமல்லவா? திருமணம் என்பது பரஸ்பர தேவைகளைப் பகிர்ந்து பூர்த்திசெய்வதற்கான ஒரு ஒப்பந்தம்தான். ஆனாலும் தேவை ஒருவருக்கு என்கிறபோது, ஒருவருக்கு மட்டும்தான் என்கிறபோது...?'

மின்விளக்கு இன்னமும் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அவளது வாழ்வு ஒளி இழந்துவிட்டதா? ஆரம்பத்தில் அன்பாக உரையாடிக்கொண்டிருந்தவன், இப்போது அதுவும் இல்லை என்பதுபோல அமைதியாகி, சூனியத்தை வெறித்துப் பார்த்தபடி....

'ஒருவேளை....? அப்படித்தான் இருக்கவேண்டும். இவன் யாரோ ஒரு பெண்ணைக் காதலித்திருக்கிறான். அந்த நினைவுகள் இந்த இரவில் அவன் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்....'

அவளது துப்பறியும் மூளை பலவாறு எண்ணியது. அதிகமான பெண்களோடு சகவாசம் வைத்தவர்களும், அதனால் நோய்வாய்ப்பட்டவர்களும் இப்படி ஆகிவிடுவார்கள் என்று இவளது தோழி ஒருத்தி முன்னர் கூறியது இப்போது நினைவுக்கு வந்தது.

அப்படி இருக்குமா....? யாராவது பெண்ணை ஏமாற்றி அல்லது, பாலியல் வல்லுறவு கொண்டு அதனால் அந்தப் பெண் தற்கொலை புரிந்திருந்தாலும் இப்படி ஏற்பட்டிருக்கலாம்.

இவனைப் பார்த்தால் அப்படிக் கெட்டவனாகவும் தெரியவில்லை.

தனது மனதில் சுழன்றாடும் பல எண்ணங்களில் மூக்குளித்தவள், தன்னைச் சுதாகரித்துக்கொண்டு அவனை நோக்கினாள். மனதில் வெடித்திருக்கும் எரிமலையையோ, அவன் மீது ஏற்பட்டிருக்கும் இனம் தெரியாத வெறுப்பையோ வெளிக்காட்டிக்கொள்ளாமல் மென்மையாக அவனை நோக்கினாள்.

"அத்தான்.. உங்களுக்கு என்ன ஆச்சு? ஏன் திடீரென்று இப்படியாகி விட்டீர்கள்? எதற்கும் யோசிக்காதீர்கள். நான் உங்கள் மனைவி இருக்கிறேன். மனதில் என்ன இருந்தாலும் மனம்விட்டுச் சொல்லுங்கள்"

அவன் மௌனமாக அவளைப் பார்த்தான். நேருக்கு நேராக அவளை நோக்க முடியாமல் ஒருவித தயக்கத்துடன் பார்வையை வேறுபக்கம் திருப்பினான்.

"அத்தான்.... கவலையை விடுங்கள்.... நான் ஏதும் குறை விளங்க மாட்டேன்.. நீங்கள் யாரையாவது காதலித்தீர்களா?"

ஆமாம் என்பது போல தலையசைத்தான். முகத்திலும் சிரிப்பு!

அவள் ஒரு கணம் அதிர்ந்து, சிலிர்த்து, நொடிந்துபோனாள்.

(தொடரும்...)

# இனியும் இங்கு பிறந்தால்......

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னம இவன் வீட்டையும் ஆக்கிர மித்திருந்தன. வெளிச் சூழலும் மழைகால இருட் போர்வையில் மந்தகாரமாகக் காணப்பட்டது.

குக்கரில் கொதிக்கவைத்த பசுப்பால் தீர்ந்துபோனவாடை பரவுவதைக்கூட உணராது சுதவோரம் யோசனையிலிருந்தாள் ஞானம்.

"ஞானம் உள்ளே போய் அடுப்பை அணைத்துவை" என்று கணவன் அருட்டிடுக்குற்றாள்.

"என்னங்க.... குகனுக்கு மூளை ஆபரேசன் பண்ணின டாக்டரை சந்திச்சீங்களா? மேற்கொண்டு ஏதாவது செய்யலாமான்னு விசாரிச்சீங்களா....?"

"அதான் ஆபரேசனுக்கு ஏற்பாடுசெய்த போதே அனைத்தையும் தெளிவாகச் சொல்லியிருந்தாரே.... மூளையில தேங்கின இரத்தக் கட்டியை அகற்றினால் கூட நம்மபிள்ளை பழைய நிலைக்குத் திரும்ப ஒரு வீதத்திலும் குறைந்தளவு சந்தர்ப்பமே இருக்குன்னு. ம்... அவ்வளவுதான்!"

"ஆபரேசனுக்குப் பிறகு சுயமாக மூச்செடுத்து விடக்கூட முடியாமற் போயிட்டதுங்களே!. இருபத்து நாலுமணி நேரமும் வென்டிலேற்றர் உதவிதேவைப்படுகுதே."

"அதுவும் இன்னும் மூணு தினங்களுக்குத்தான். அதன் பிறகு...."

"ஐயோ கடவுளே!"

"ஞானம் எங்கட சக்தியையும் மீறி இவ்வளவையும் முயற்சித்துப் பார்த்திட்டம். நாங்க பெற்றவங்க என்ற காரணத்தினால முழுத்துன்பமும் நமக்கு மட்டும் நேர்ந்திட்டதாக அழுது வடிக்கிறம்... ஆனா எங்க குடும்பத்தோட எந்தவித இரத்த பந்தமுமில்லாத பஞ்சாட்சரம் - நம்ப பஞ்சு இரண்டு லட்சம் ரூபாவை குகனோட அவசர மூளை ஆபரேசனுக்கு தந்து உதவியிருக்கிறானே! அப்படியிருந்தும் பலன் தான் பூச்சியமாகப் போயிட்டது!"

"அந்தப் பணம் ஆதிக்கு கண் ஆபரேசன் செய்யிறதுக்காக வீட்டை அடமானத்துக்கு வச்சு திரட்டியிருந்தாரே....! கண் ஆபரேசனுக்கு செலவழித்திருந்தால் அந்தப் பிள்ளைக்காவது பார்வை கிடைச்சிருக்கும்..."

"ஆதிக்கு பார்வை கிடைக்கும் - அதுவும் கூடிய விரைவில்!"

"ஆமாம் ஞானம், பஞ்சாட்சரம் என் கண்களைத் திறக்க வைச்சிட்டான். தன் பிள்ளையின் தேக ஆரோக்கியத்தை புறந்தள்ளிட்டு தன் சினேகிதன் பிள்ளை உயிர் பிழைக்கவேணும்னு அவன் செய்த உதவி எனக்குள்ளேயிருந்த பழைய பகையை அடியோடு அழிச்சிட்டுது. போட்டி, பொறாமை அகன்று தெளிவு பிறந்திருக்கு."

"மேற்கொண்டு என்ன செய்யப் போறீங்க...?" ஞானம் புரியாமற் கேட்டாள்.

"எங்கட பிள்ளையின் உயிர்வாழ்க்கை கண்முன்னாலேயே முடிவுக்கு வரப் போகுது! அதன் பிறகு.... கண்ணிரண்டையும் ஆதிக்கே தானம் பண்ணிடலாம்னு முடிவெடுத்திருக்கேன். குகனுக்கும் கூட நண்பனுக்கு பார்வை பறிபோயிட்ட வருத்தம் கடைசிவரை உறுத்திக்கொண்டேயிருந்திச்சு...."

வாசலில் கன்னங்களில் நீர்க்கோடிட நின்ற அனுசியாவின் கன்னங்களை உள்ளங்கையால் துடைத்துவிட்டான் சதானந்தன்.

"கலங்காதேயம்மா, எல்லாத்துக்கும் முடிவு வரும்!"

வெளியே திரண்டிருந்த கார்த்திகை மாத காரிருளைக் கிழித்துக் கொண்டு பகலவனின் கதிர்கள்... பூமியை எட்டிப் பார்க்கக் காத்திருந்தன.

## சுனாமியிலிருந்து 6 வயது சிறுமியை காப்பாற்றிய சோபா மெத்தை

தாய்லாந்தின் கடலோர உல்லாச விடுதிப் பகுதி, சுனாமி அசுர அலையால் நாசம் அடைந்தபோது அங்கிருந்த 6 வயது சிறுமி சோபா மெத்தையைப் பிடித்துக் கொண்டதால் உயிர்பிழைத்தாள்.

புகெட் பகுதியில் உள்ள கவோ லாக் என்ற இடத்தில் இந்த உல்லாச ஓய்வக விடுதி உள்ளது.

பெற்றோர், சகோதரருடன் வந்திருந்த இந்த ஆறு வயது சிறுமி ரு, ஷியூ, நீச்சல் குளத்தில் விளையாடிக்கொண்டிருந்தாள்.

அந்த தருணத்தில் தான் திடீரென சுனாமி அலை எழும்பித் தாக்கியது. ஓய்வக விடுதியில் கடல் வெள்ளம் புகுந்தது.

வெள்ளத்தில் மிதந்து சென்ற சோபா மெத்தை தெய்வாதீனமாக அங்கு வந்தது.

அதை பிடித்துக்கொண்டு இச்சிறுமி மிதந்தபடி சென்றபோது, அருகே தலைகுப்புறக் கவிழ்ந்த படகு தென்பட்டது. அந்த படகைத் தேடிவந்த ஓய்வு விடுதி ஊழியர் ஒருவர் சிறுமியைக் கண்டு சிறுமியையும் அப்படகில் ஏற்றிக்கொண்டு தப்பி வந்தார்.

இச்சிறுமியின் குடும்பத்தாரில் மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. சிறுமியின் தந்தை ரெக்கி இந்த ஓய்வக விடுதியை நடத்திவரும் பிரெஞ்சு ஹோட்டல் குழுமத்தின் ஆசிய பிராந்திய மூது நிலை துணை தலைவர்.

சிறுமி கடந்தவாரம் சிங்கப்பூர் அழைத்து வரப்பட்டு அவரது உறவினருடன் சேர்க்கப்பட்டார்.

தாய்லாந்தில் சுனாமியில் மோசமாக பாதிப்புக்குள்ளான பகுதிகளில் இந்த விடுதிப்பகுதியும் ஒன்று. இந்த விடுதியின் ஊழியர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் என 300 பேரின் கதி தெரியவில்லை.

# பாரிய பொறுப்பு தமிழ்த்தேசம் மீது

சுனாமி பேரலைகளின் தாக்குதலால் குலைந்து போயுள்ள வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளை மீளக்கட்டி எழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு தமிழர் தேசத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

மக்களின் உடனடித் தேவைகளையும் இங்கு கவனிக்க வேண்டியுள்ளது. முக்கியமாக உணவு, மருந்து, பிரச்சினைகளை நிவர்த்தி செய்யவேண்டியுள்ளது.

இப் பேரழிவால் பல புதிய நெருக்கடிகளும் தோன்றக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சுகாதாரப் பிரச்சினைகள், கண்ணிவெடிகள் என்பன மக்களை அச்சுறுத்தி வருகின்றன.

தமிழர் தாயகப் பகுதிகளில் உணவு, மருந்து உட்பட்ட நிவாரணப்பணிகளில் விடுதலைப் புலிகளே தீவிரமாக ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அரசு தமிழர் தாயகப்பகுதிகளின் நிவாரண நடவடிக்கைகளில்மெத்தனப்போக்கைகையாண்டு வருகிறது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் உறவினர் நண்பர்களின் வீடுகள், வணக்க ஸ்தலங்கள்,பாடசாலைகளிலும் ஏறக்குறைய ஐந்து லட்சம் வரையான மக்கள் தங்கி உள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கான உடனடி நிவாரண நடவடிக்கைகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகமே தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இதனுடன் இணைந்து வெண்புறா அமைப்பு, விடுதலைப் புலிகளின் சிறப்பு விசேட அணிகள், பொது அமைப்பு தொண்டர்கள், தமிழீழ காவல்துறையினர், பொதுமக்கள் ஆகிய பிரிவுகளுடன் கிழக்கில் அரச படைகளும் மீட்பு நடவடிக்கைகள் மற்றும் நிவாரண உதவிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

நிவாரணப்பொருட்களைப்பொறுத்தவரை, தாயகப் பகுதிகளுக்கு பொதுமக்களின் உதவியுடன் தொண்டு அமைப்புக்களும், மலையகக் கட்சிகள் சிலவும் நிவாரணப் பொருட்களை அனுப்பியுள்ள அதேவேளை வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக பாரிய உதவிகளைச் செய்துள்ளதாக புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அரச மருத்துவமனைக்கு மேலதிகமாக விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினர் மக்களுக்கான சுகாதார மருத்துவ வழங்கல்களை மேற்கொண்டிருந்தனர்.

சர்வதேச நாடுகளிடம் இருந்து பெருமளவு நிவாரண உதவிப் பொருட்கள் வந்துள்ள போதும், தாயகப்பகுதிகளுக்குஅவை திருப்திகரமாக அனுப்பப்பட வில்லை எனவும் தென்னிலங்கைப் பகுதிகளுக்கே அவை திருப்பப்படுகின்றன என்றும் தமிழர் தரப்பினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அரசு வடக்கு– கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்புவதாக பெரிய அளவில் பிரசாரம் செய்யப்படுகின்றபோதும் அதில் எவ்வித உண்மையும் இல்லையெனத் தெரிகிறது.

அரசின் இந்தப் போக்கை புலிகள் தோலுரித்துக் காட்டியுள்ளனர். இது தொர்பாக புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிக்கையில், ''பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீட்புப்பணிகளை, நிவாரணப்பணிகளை மேற்கொள்வதில் விடுதலைப் புலிகளின் செயலணிக் குழுக்கள் தீவரமாக ஈடுபட்டுள்ளன. இந்நிலையில் அரசாங்கம் வடக்கு– கிழக்குப் பகுதிகளுக்கு உதவுவதாக பகிரங்கமாக அறிவித்துள்ளதே தவிர வேறொன்றும் இடம் பெறுவதாக இல்லை. இதனடிப்படையில் இலங்கை அரசின் போக்குக்குறித்து எங்களுக்குப் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசு தனது பிரசாரத்தின் ஊடாக நிவாரணப் உதவிகளை தென் பகுதிக்குத் திருப்பிக் கொள்வதாகவே தெரிகிறது.'' என்றார்.

இதிலிருந்து ஒன்றை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. எத்தனை அழிவுகளைச் சந்தித்தாலும் தமிழர்கள் மீது தென்னிலங்கை பேரினவாதம் கருணை காட்டப் போவதில்லை என்பது தான் அது.

கிழக்கின் பல பகுதிகளில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதனால் நிவாரண நடவடிக்கைகள் சில பகுதிகளைப் போய்ச் சேரவில்லை. கிழக்கில் புலிகளின் விசேட பிரிவுகள் வடபுலத்தில் இருந்து தேசியத் தலைவரின் உத்தரவுக்கமைய தளபதிகள், போராளிகள் என விரைந்து கொண்டிருக்கின்றனர். எமக்கு நாமே என்பது போல் இச் சம்பவம் உள்ளது.

நிவாரண உதவிகள் அகதிமுகாம்களைத் தவிர உறவினர், நண்பர்கள் வீடுகளில் உள்ளவர்களுக்கு அறவே கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இன்னொரு கோரமும் அரங்கேறுகிறது. அல்லல்படும் மக்களுக்குச் செல்லும் நிவாரண உதவிகளை சில மனிதகுலத்துக்கு எதிரான மனிதர்கள் கொள்ளையடித்து பதுக்கிவைத்திருக்கின்றமையே அது ஆகும்.

இக்கடல் பேரனர்த்தத்தின் பின்னால் பல பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. உடல்கள் இன்னமும் முழுமையாக அகற்றப் படாமையினால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் உரிய எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியமாகும். அது சுனாமி அழிவை விட இனத்தையே வேரோடு அழித்துவிடும் அபாயமுள்ளது. விழிப்பாய் இருந்து வருமுன் காப்போம். இதேபோல் இன்னொரு அபாயம் தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்பாளர்களால் விதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், பொறிவெடிகள். இவை மக்கள் வாழும் பகுதிகளுக்குப் பேரலைகளால் அடித்துச் செல்லப் பட்டுள்ளன. அவதானமாய் இருந்துகொள்ள வேண்டிய நேரம் இது.

பல உலகநாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளன. இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம்,சீனா, உட்பட பல உலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையின் பல உப நிறுவனங்களும் கப்பல்கள், விமானங்கள் மூலமாகவும் பெருமளவு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளன. இவை கடல் அனர்த்தத்தால் கோரமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்குப் பகுதிகளுக்கு இதுவரை அனுப்பப்படவில்லை. உருப்படியாக எதுவும் தாயகப்பகுதிகளுக்கு வரவில்லை.

பல்வேறு சர்வதேச நாடுகளினதும் அமைப்புகளினதும் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வருவதும் போவதுமாய் உள்ளனர். ஆனால், அங்கு களத்தில் நிற்கும் புலிகளுடாக நிவாரணங்களை வழங்க அவை தயார் இல்லை. இது ஒரு பாரிய மனிதாபிமான நெருக்கடி. இதில் வேறுபாடுகளுக்கு இடமில்லை. சர்வதேசம் பரிந்து செயற்பட வேண்டும். பாரிய அனர்த்தத்தை இதுவரை புலிகளே நேரடியாக எதிர்கொண்டு சமாளித்துவருகின்றனர். இத்தாலிய அரசின் உதவிப் பொருட்கள் மட்டும் புலிகளிடம் நேரடியாகக் கையிக்கப்பட்டுள்ளன.

இன்னொரு புறம் இலங்கையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான படைகள் குவிந்து வருகின்றன.

வடக்கு – கிழக்குப் பகுதி நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கையினை, வெளிச் சக்திகளை உள் நுளைக்காது, எமது தனித்துவத்தைப் பேணியவாறு மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தின் அபாயகரமான சில பக்கங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

ஏனெனில், எமது மக்களுக்கான இழப்புக்களுக்கு மத்தியிலும் நாம் உறுதி குலையாது விடுதலைப்பயணத்தை தொடரவேண்டியிருப்பது முக்கியமானதாகும்.

க.கவன்

---

இவ்வார 'ராசிபலன்' 10–01–2005 , 16 –01–2005

**பொ. சந்திரன்**

# ராசி பலன்

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | (மையம்) | | |
| | (மையம்) | | |
| சுக்கிரன் புதன் சூரியன் | செவ் | கேது | குரு |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | கேட்டை | புதன் |
| சுக்கிரன் | மூலம் | கேது |
| புதன் | பூராடம் | சுக்கிரன் |
| சூரியன் | உத்தராடம் | சூரியன் |
| குரு | சித்திரை | செவ்வாய் |
| சனி | புனர்பூசம் | குரு |

மார்கழி26 முதல் தை03 வரை

சந்திரன் தனு முதல மீனம் வரை

**மேடம்:அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

(1,8) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பது சிறப்பு இல்லை. இருப்பினும் ஆட்சியாக இருப்பதால் சில பல நன்மைகள் செய்யக்கூடும். மேலும் புதனின் நட்சத்திரத்தில இருப்பது பகையானநிலை. ராசியில் இராகு இருப்பது நல்லது இல்லை. எடுத்த முயற்சி தாமதமாகலாம். மன அமைதி இருக்காது.(2,7) உரிய சுக்கிரன் ஒன்பதில் இருப்பது நல்லது கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு.7இல கேது இருப்பது குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது. நாலாம் வீட்டில் சுக்கிரன் பார்ப்பதால் வாகன சுகம் உண்டு. தாய் நலம். (10, 11) உரிய சனி மூன்றில் இருப்பது மிகவும் நல்லது. தொழில்துறை முன்னேறும். அத்துடன் புதிய முதலீட்டுக்கு வாய்ப்பு உண்டு.(9,12)உரிய குரு 6இல் மறைவது பிதாவுக்குக் கூடாது. சயன சுகம் குறையலாம்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் எட்டில் இருப்பது நல்லது. பலன் செய்யும். கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது.சுக்கிரனுக்குக் கேது பகைக் கிரகம் அல்ல. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. ராசிக்கு இருபுறமும் தீய கிரகங்கள் இருப்பது சங்கடமான நிலை.(2,5) உரிய புதன் எட்டில் தனிய இருப்பின் பலன் செய்யாது. ஆனால், சூரியனுடன் சேர்ந்து இருப்பது நல்லது.கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் எட்டில் புதனோடு இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. தாய் நலம். (7,12) உரிய செவ்வாய் 7இல் ஆட்சியாக இருப்பது தோசமான நிலை.திருமணவாய்ப்பு பாதிக்கலாம்.குடும்பத்தில் அமைதி இருக்காது.தொழிலுக்குரிய சனி இரண்டாம் வீட்டில் இருப்பது தொழிற்துறையை பாதிக்கலாம்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 7இல் இருப்பது சிறப்பு இல்லை. ஆனால், சுக்கிரன் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சிகள் தாமதமாகும். தாய்க்கும் நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. ராசியில் சனி இருப்பது சங்கடமான நிலை. மன அமைதி இருக்காது. இரண்டாம் வீட்டுக்கு சுக்கிர பார்வை இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு நாலில் இருப்பது கேந்திராதிபத்திய தோசம் உண்டு. மேலும், இவ்விரு ராசிகளையும் சனி பார்ப்பதால் தீய பலன்களைத் கொடுக்கலாம் திருமண வாய்ப்புத் தடைப்படலாம். தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்காது.(8,9)உரிய சனி ராசியில் இருப்பது பிதாவுக்கு கூடாது. அதிஷ்டம் இருக்காது. நாஸ்திக கருத்துக்களுக்கு உடன் படக்கூடும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் தனு முதல் மீனம் வரை சஞ்சரிப்பதால் வார ஆரம்பத்தில் நல்ல பலனையும், வார இறுதியில் மத்திமான பலனையும் கொடுக்கலாம்.மேலும், சுக்கிர பார்வை ராசிக்குக் கிடைப்பதால் எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். மன அமைதி இருக்கும்.2க்குரிய சூரியன் ஆறில் இருப்பது கையில் பணமிருக்கும்.சொல்லுக்கு மதிப்பிருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 6இல் இருப்பது கூடாது. வாகனசுகம் இருக்காது. தாய்க்கும் கூடாது. நண்பர்களால் தொல்லை வரலாம். மூத்த சகோதரத்துடன் பகை வர வய்ப்பு உண்டு. (7,8) உரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (5,10)உரிய செவ்வாய் ஐந்தில்(5)ஆட்சியாக இருப்பது கூடாது. தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் ஐந்தாம் வீட்டில் இருப்பது கூடாது. ஆனால், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஓர் அளவு நல்ல பலனைச் செய்யலாம். எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். மன அமைதி இருக்காது. (2,11) உரிய புதன் ஐந்தாம் வீட்டில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரனுக்கு நல்ல பலன் உண்டு.நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (3,10) உரிய சுக்கிரன் ஐந்தாம் வீட்டில் இருப்பது தொழிற்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு.(4,9) உரிய செவ்வாய் நாலில் ஆட்சியாக இருப்பினும் தோசம் உண்டு. வாகன சுகம் இருக்காது. பெற்றோருக்குப் போதாத காலம் ஆனால், வீடு அமையப் பலன் உண்டு.(6,7)உரிய சனி11இல் இருப்பது திருமணபலன் உண்டு. நோய் விலகும். பகை நட்பாகலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் நாலில் தனிய இருப்பின் நல்ல பலன் செய்யாது. ஆனால், சூரியனோடு சேருவதால் நல்ல பலன் செய்யும். மேலும், நட்புக்கிரகமான சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழில் துறை முன்னேறும்.(2,9)உரிய சுக்கிரன் நாலில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்ல பலன் உண்டு. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது கேந்திராதிபத்திய தோசம் உண்டு. மேலும், இவ்விரு வீடுகளும் சனியின் பார்வையில் இருப்பதால் நல்ல பலன் இல்லை. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. வீட்டில் ஏதாவது பிரச்சினை இருக்கலாம். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம் அல்லது தடைப்படலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது. குரு சனி வழிபாடு தீயபலனின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8)உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது விசேஷம்.மேலும், கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதால், கேது, சுக்கிரனுடன் பகையில்லாதபடியால் நல்ல பலனைச் செய்வார்.எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும்.சென்ற இடம் எல்லாம் சிறப்பு உண்டாகும். (2,7) உரிய செவ்வாய் இரண்டில் ஆட்சியாக இருப்பினும், தோசமான நிலை. கையில் பணமிருக்கும். ஆனால், திருமணத்துக்கு தடை இருக்கும்.மேலும், 7இல் ராகு இருப்பது குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவாது.(4,5)உரிய சனி ஒன்பதில் இருப்பது நல்லதல்ல.வாகன சுகம் இருக்காது. குழந்தைகள் தான் தோன்றித்தனமான இருப்பர்.10ம் வீட்டுக்கு சுக்கிரபார்வை கிடைப்பதால் தொழில் துறை முன்னேறும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். ராசியில் கேது இருப்பது சங்கடமான நிலை.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது பலமான நிலைதான். இருப்பினும் தோசமான நிலையும் கூட மேலும், புதனின் நட்சத்திரத்தில் இருப்பது பகை என்று சில சோதிட நூல்கள் கூறுகின்றன. அதன் அடிப்படையில் எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி எட்டில் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. இளைய சகோதரத்துக்குக் கூடாது.(7,12)உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சயன சுகம் உண்டு. தொழிலுக்குரிய சூரியன் இரண்டில் இருப்பது கூடாது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.

**தனு:மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் இருப்பது கேந்திராதிய தோசம் உண்டு. மேலும், நட்புக்கிரகமான செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி தாமத மானாலும் நிறைவேறும். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை.(2,3)உரிய சனி 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது.இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை.(7,10) உரிய புதன் ராசியில் இருப்பது கூடாது.திருமண வாய்ப்புப் பாதிக்கலாம்.7இல் சனி இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது. தொழில்துறை பாதிப்புக்குள்ளாகலாம். ராசி சனியின் பார்வை பெறுவது கூடாது. சனி வழிபாடு சனியின் தீவிர தன்மையைக் குறைக்கலாம். (5,12) உரிய செவ்வாய் 12இல் மறைவது சயன சுகம் குறையலாம். குழந்தைகள் சொற் கேளார்.

**மகரம்:உத்தரடாம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது மிகவும் நல்லது. மேலும்,குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது.குரு சனிக்கு பகைவர் இல்லை.எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். யைில் பணம் இருக்கும்.(4,11) உரிய செவ்வாய் 11இல இருப்பது சிறப்பானது. வாகன சுகம் உண்டு. தாய் நலம். இருப்பிடம் அமையப் பலன் உண்டு.நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.(5,10)உரிய சுக்கிரன் 12இல் இருப்பது நல்லது. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.7ஆம் வீடு சுத்தமாக இருப்பதாலும்,சுக்கிர பார்வை பெறுவதாலும் திருமண வாய்ப்பு உண்டு.குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.குரு நல்ல இடத்தில் இருந்து ராசியைப் பார்ப்பதால் சிறப்பான பலனை எதிர்பார்க்கலாம்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகும். பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். சயன சுகம் குறையலாம்.(2,11)உரிய குரு எட்டில் இருப்பது கூடாது.கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்களால் தொல்லை வரலாம்.(3,10)உரிய செவ்வாய் 10இல் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை.(4,9)உரிய சுக்கிரன் 11இல் இருப்பது பெற்றோருக்கு நல்லது. வாகன சுகம் உண்டு. நல்ல இருப்பிடம் அமையலாம். 7க்குரிய சூரியன் 11இல் இருப்பது திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது கேந்திராதிபத்திய தோசம் உண்டு. இருப்பினும் நட்புக்கிரகமான செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இருப்பினும் சனியின் பார்வையால் தடங்கல்கள் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் இருப்பினும் சனித்தாக்கம் உண்டு. சென்ற இடம் எல்லாம் சிறப்பு உண்டு. (2,9) உரிய செவ்வாய் 9இல் ஆட்சியாக இருப்பினும் நல்ல பலன் செய்யாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல.4,7 உரிய புதன் பத்தில் இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. திருமண முயற்சி தாமதமாகலாம். காணி, வீடு, போன்றவற்றில் பிரச்சினை தோன்றலாம். ராசியை சனி பார்ப்பினும் குரு பார்ப்பது சிறப்பு உண்டு.

# அடிமனதில் ஏற்படும் பதிவுகளும் பாலுணர்வின் வெளிப்பாடுகளும்

***கேள்வி:-** பெண், வயது 22. நான் கடந்த சில மாதங்களாக திடீரென்று மெலிந்து கொண்டே போகின்றேன். 15 வயது பெண் போல் தோற்றமளிக்கிறேன். பசி இருக்கிறது. நிறையச்சாப்பிடுகிறேன். என்றாலும் உடல் பருப்பதில்லை. நான் என்ன செய்யவேண்டும்?*

**பதில்:—** திடீரென்று உடல் மெலிந்து போகின்ற படியாலும், பசி இருந்து சாப்பிட்டாலும் உடல் வைக்காத படியாலும் நீங்கள் ஒரு மருத்துவப் பரிசோதனைக்குப் போக வேண்டியது அவசியம். தைராய்ட் சுரப்பு கோளாறுகள், நீரிழிவு போன்ற நோய்கள் கூட உங்கள் மெலிவுக்குக் காரணமாக இருக்கலாம். எனவே THYROID PROFILE என்ற தைராய்ட் சுரப்பின் செயற்பாட்டை அறியும் இரத்தப் பரிசோதனைகளும், இரத்தத்தில் சர்க்கரைச்சத்து உள்ளதா என்பதை அறியும் பரிசோதனைகளும் கட்டாயம் செய்யப்படவேண்டும். இது தவிர நெஞ்சறை எக்ஸ்ரே பரிசோதனையும், வயிற்றினில் ஒரு USS எனப்படும் கேளா ஒலி அல்ட்ரா சவுண்ட்ஸ்கான் பரிசோதனையும் செய்வது உங்கள் நோய்பற்றி அறிந்து கொள்ள உதவும். சகல பரிசோதனைகளுடன் மருத்துவர் ஒருவரைக் கொண்டு செக்கப் செய்து கொள்ளவும்.

***கேள்வி:-** ஆண் வயது 18. இரவில் தூங்கும் போது பெண்களுடன் உடலுறவு கொள்வது போல் கனவு ஏற்படுகிறது. ஆனால், நான் ஒரு பெண்ணையும் நினைத்துக் கொண்டு தூங்குவதில்லை. இப்படி கனவுகள் ஏற்படும் போது என்னை அறியாமலே விந்து வெளியாகி விடுகிறது. ஒரு மாதத்திற்கு குறைந்தது மூன்று தடவையாவது இப்படியாகின்றது. இதனால் எனக்கு படிப்பில் மனதை ஒரு நிலைப்படுத்தமுடியவில்லை. மனச்சோர்வும் உடல்களைப்பும் இருக்கின்றன. பரிகாரம் கூறவும்.*

**பதில்:—** உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு இவ்வாறு தூக்கத்தில் விந்து வெளியாவது ஒரு இயற்கையான சம்பவமே. இதனை NOCTURNAL EMEI-SSION என்று கூறுவர். இது ஒரு நோயல்ல. இப்படி வெளியாகும் போது காமக் கனவுகள் தோன்றுவதும் இயற்கையே. இதனால் நீங்கள் பெண்களை எண்ணியே காலம் கழிப்பவர் என்று பொருளுமல்ல. எமது மனதில் அடிமனம் என்றொரு பகுதி உண்டு. இதனை SUBCONSCIOUS என்று கூறுவார்கள். நாம் படிக்கும் விஷயங்கள் நாம் காணும் காட்சிகள் இவையெல்லாம் இந்த அடிமனதில் பதிந்து கொள்ளும். இதே போலவே நீங்கள் நிஜத்தில் காணும் உங்கள் கல்லூரித் தோழிகள், நண்பிகள் உறவினப் பெண்கள், சினிமா நடிகைகள் போன்றோரின் பதிவுகள் அடிமனதில் பதிந்து போயிருக்கும். அதே வேளையில் இந்த வயதில் ஏற்படும் ஹோர்மோன் விளைவினால் SEXUAL FEELINGS என்கின்ற பாலுணர்வுகள் மனதில் கிளர்ந்து எழுவதும் வளர் இளம் பிராயத்து குணங்களில் ஒன்றாகும். இப்படி எழும் உணர்வுகளுக்கு— வடிகால் அமைத்துக் கொடுப்பது தூக்கத்தில் ஏற்படும் விந்து வெளிப்பாடு. இது பற்றி நீங்கள் மனதை அலட்டிக்



கொள்ளத் தேவையில்லை. விந்து ஒரு முக்கியமான உயிர்ச்சத்துப் போன்றும் அது விரயம் ஆனால் ஞாபகமறதி, சிந்தனைத் திறன், உடல் அழிவு ஏற்படும் என்றும் ஆதாரம் இல்லாத கருத்துக்களை சமூகத்தில் சிலர் புகுத்தியுள்ளனர் 'விந்து விட்டவன் நொந்து சாவான்' என்ற எதுகை மோனையோடு விந்துவின் பெருமையை பழமொழியாக உருவாக்கிவிட்டார்கள். இவற்றையெல்லாம் படித்தும் கேட்டும் உம் போன்ற இளைஞர்கள் தமது மனதில் குற்றமனப்பான்மையை ஏற்படுத்திக்கொண்டு செத்த மனிதர் போல் நடமாடுவதை நேரிலேயே கண்டுள்ளேன். உடலில் எவ்வாறு உணவு சமிபாட்டிற்காக — உமிழ் நீர் சுரக்கின்றதோ, சமிபாட்டுத் நொதியங்கள் சுரக்கின்றனவோ, அது போல் விதைப்பையில் உருவாகும் ஜீவ அணுக்களை கொண்டு செல்லும் ஊடகமாக விந்துசுரக்கப்படுகிறது. வெளியேறும் விந்துவில் ஜீவ அணுக்கள் உருவாக்கப்படுவதால் விந்து வெளியேற்றத்தினால் உடல் நலம் குன்றுமானால் திருமணமானோர் உடலுறவு கொள்வதினால் நோயாளிகளாகி விடுவர் அல்லவா? இளைய பருவத்தில் பலவித ஆசாபாசங்களுக்கு ஆளாகி—மனதை ஒரு நிலைப்படுத்தி கல்வியிலும் நற்செயல்களிலும் இளம் பராயத்தினரை ஈடுபடச் செய்வதற்காகவே முன்னர் இவ்வாறு விந்துக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் என்று எண்ணத்தோன்றுகிறது. எனவே உங்கள் இயற்கையான உடல் இயக்கச் செயற்பாட்டை பற்றி பிழையாக விளங்கி— குற்ற உணர்வுடன் வாழுவதை தவிருங்கள். இன்னும் நீங்கள் மனப்பக்குவம் அடைய இந்த விந்து வெளியேற்றம் தானாகவே குணமாகி விடும்.


***கேள்வி:-** ஆண் வயது 18. எனது மார்பு இரண்டும் பெண்களின் மார்புபோல் பருத்துக் காணப்படுகிறது. நண்பர்கள் கேலி செய்கிறார்கள். இது எதனால் ஏற்பட்டது. இதற்கு பரிகாரம் உண்டா?*

**பதில்:—** உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைக்கு GYNAECO-MASTIA என்று பெயர். பொதுவாக ஆண்களுக்கு நிறைய ஆண் ஹார்மோன் (ANDROGEN)ம் சிறிதளவு பெண் ஹோர்மன் (OESTROGEN)ம் இருக்கும். சிலருக்கு இந்த பெண் ஹோர்மன் ஏதோ ஒரு காரணத்தால் அதிகரித்தால் பெண்களுக்குரிய மார்பு வளர்ச்சி, உரோமக் குறைவு என்பவை ஏற்பட சாத்தியம் உண்டு. சில நோய்களினாலும், ஈரல் அழற்சியினாலும் அதிக மதுபான பாவனையினாலும், சில மருந்துகளினாலும் இவ்வாறு ஏற்படலாம். அதே வேளையில் வளர் இளம் பிராயம் என்கின்ற ADOLESCENT நிலையில் ஹார்மோன்களின் கட்டுப்பாடில்லா சுரப்பினாலும் இப்படி ஏற்படலாம். சில பாட்டிமார்கள் ஆண் குழந்தை பிறந்ததும் அவர்களின் மார்புகளை கசக்கி—பால்போன்ற திரவத்தை வெளியேற்றுவார்கள். இதனை ஆங்கிலத்தில் WITCH'S MILK சூனியக்காரியின் பால் என்ற அர்த்தத்தில் அழைப்பார்கள்.

இப்படிச் செய்தால்— உங்களைப் போல் மார்பு பெருக்காது என்று கருதினார்கள். ஆனால் இதற்கு சரியான மருத்துவ ஆதாரங்கள் இல்லை. எத்தனையோ ஆண்கள் இப்படி பிறந்தவுடன் பால் பிதுக்கி எடுக்காமலே திடகாத்திரமாக மார்பு பெருக்காமல் இருக்கின்றார்கள். எனவே இது ஆண்களுக்கு மார்பு பெருப்பதற்கான காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. உங்

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

கள் மார்புகள் அளவுக்கதிகமாக பெருத்திருந்தால் ஒரு சத்திர சிகிச்சை மூலம் மார்பில் உள்ள கொழுப்புப் பகுதிகளை அகற்றிவிடலாம். சத்திர சிகிச்சை செய்த இடமே



தெரியாமல் மார்புகளுக்கு அடியிலேயே கீறி இந்த சிகிச்சையை செய்யலாம். எதற்கும் ஒரு சத்திர சிகிச்சை நிபுணரின் ஆலோசனையை நாடவும்.

---

# சுனாமி அனர்த்த நிதியை.....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக வழங்கப்படும் எனவும், தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அவர்களுக்கூடாகவே நிவாரண உதவிகள் விநியோகிக்கப்படும் எனவும், அழிவுற்ற பகுதிகளை மீளக்கட்டியெழுப்பும் பணிகளில் வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பாகுபாடு காட்டப்படமாட்டாது எனவும் ஜனாதிபதி கல்முனையில் வைத்து உறுதியளித்தார்.

அதேவேளை, அரசின் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையில் புலிகளும் பங்கேற்க வேண்டும் எனவும், அவர் நேசக்கரம் நீட்டியுள்ளார். பேரலைகளால் பேரழிவுக்குள்ளான நாட்டைக் கட்டி எழுப்புவதற்காக பிரபாகரனுடன் கைகோர்த்துச் செயற்படுவதற்குதான் தயாராக இருக்கிறார் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆனால், இவ்வளவு அக்கறையுடன் தனது தேசப்பற்றை வெளிப்படுத்தியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவருடைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசும் வடக்கு—கிழக்குப் பகுதியை அரவணைத்துச் செல்லும் வகையில் செயற்படவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

## தென்னிலங்கைக்கே முன்னுரிமை

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் மங்கள சமரவீர, ரட்ணசிறி விக்கிரமநாயக்க போன்ற அரசின் முக்கிய புள்ளிகளினதும், ஜே.வி.பியினரதும் தாயகமான தென்னிலங்கையின் கரையோர மாவட்டங்களான அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை, களுத்துறை போன்ற இடங்களிலேயே அரச இயந்திரம் முழுமூச்சுடன் இயங்குகிறது.

இம்மாவட்டங்களில் அவசர நிவாரண உதவிகளும், மீட்புப் பணிகளும் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. கட்டட இடிபாடுகள் அவசர அவசரமாக அப்புறப்படுத்தப்பட்டு—துப்புரவு செய்யப்பட்டு—மீள் கட்டமைப்புக்கான ஏற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

எனினும், வடக்கு— கிழக்கில் இந்த ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இரு வாரங்களாகியும் கட்டட இடிபாடுகள் அகற்றப்படவில்லை. இப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது. தமிழ்ப்பிரதேசங்களில் புலிகளும், முஸ்லிம் பிரதேசங்களில் பொது அமைப்புகளும் முன்நின்று மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும், அரசின் பங்களிப்பு இல்லாமல் இப்பகுதிகளைத் துப்புரவு செய்ய முடியாது என்ற நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் நாட்டை மீளக் கட்டி எழுப்புவோம் என்ற அரசின் கோஷமும் திட்டமும் செயற்பாடும் தென்னிலங்கைக்கு மட்டும்தானா என்கிற ஐயம் எழுகிறது. ஜனாதிபதியின் கிழக்கு விஜயமும் உத்தரவாதங்களும் வெறும் கண் துடைப்புத்தானா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இயற்கையின் கோரத்தாண்டவத்தால் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்தும், பல்லாயிரம்கோடி பெறுமதியான சொத்துக்கள்— உடைமைகளை இழந்தும் நிர்க்கதியடைந்திருக்கின்ற ஒரே தாய்நாட்டில் இன, மத, பிரதேச வேறுபாடுகள் பார்க்கப்பட்டு — பாராபட்சம் காட்டப்படுவதை இந்த இக்கட்டான சூழ்நிலையில் மனிதாபிமானமுள்ள எந்தவொரு பௌத்த மகனும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

இரு தசாப்த கால யுத்தத்தினால் அழிந்துபோன வடக்கு— கிழக்கை ஓரளவு நிமிர்த்தி எடுத்துக்கொண்டிருந்த வேளையிலேயே சுனாமியின் பேரலைகளுக்குள் சிக்கி எமது கரையோரம் பேரழிவுக்குள்ளானது. இலங்கையின் வரலாறு கண்டிராத இப்பேரழிவுக்குப்பரிகாரம் காண்பதென்பது இலகுவான காரியமல்ல. அதனால் உலக நாடுகள் நமக்குக் கை கொடுத்துதவ முன்வந்திருக்கின்றன.

ஆனால், அந்த நாடுகள் வழங்குகின்ற நிதி உதிவிகளை ஒரு பகுதியினர் மட்டும் கபளீகரம் செய்துகொண்டு மற்றொரு பகுதியினரைக் கை கழுவிவிட்டு— நட்டாற்றில் விடுவதை அனுமதிக்க முடியாது. ஒரே நாடு ஒரே மக்கள் எனக் கூறுகின்ற அரசு, சுனாமி அனர்த்த நிதியைத் தென்னிலங்கைக்கு மாத்திரம் பயன்படுத்தவே முனைப்புக்காட்டுவதாகஅறிய முடிகிறது.

ஆகையினால், தமிழ் — முஸ்லிம் தலைவர்கள் தொடர்ந்தும் விழிப்பாக இருக்க வேண்டும். அரசில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் வடக்கு — கிழக்குப் பகுதிகளும் புனரமைப்புச் செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். நமது மக்களுக்கான வாழ்வாதாரங்களுக்கு வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

அகதி முகாம்களில் அடைக்கலம் புகுந்திருக்கின்ற நமது கரையோர மக்களுக்கு இன்னும் சில நாட்கள்— வாரங்கள்— மாதங்களுக்கு அரசு, அவர்களின் வயிற்றுப்பசிக்காக உணவுகளை வாரிவழங்கலாம். ஆனால், அநாதரவான அந்த மக்களின் நிரந்தர வாழ்வுக்கு இருப்பிடம் மற்றும் பொருளாதாரத்திற்கான தொழில் வசதிகள் செய்து கொடுக்கப்படுவதே அவசியத் தேவையாகும் என்பதை நமது தலைவர்கள் ஞாபகத்தில் வைத்துச் செயலாற்ற முன்வர வேண்டும்.

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165



# மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

## பற்றி எரியும் வீட்டில் தட்டிப்பறிக்கும் ஒரு கும்பல்

ஒரு நாட்டின் அல்லது ஒரு சமூகத்தின் பொருளாதார வாழ்க்கைத்தரத்தை மதிப்பீடு செய்யும்போது வறுமைக் கோட்டில், வறுமைக் கோட்டுக்குக் கீழ் என்று கூறுவது வழமை.

அதன்படி அளவிட்டுப்பார்த்தால் இந்த வறுமைக்கோட்டுக்குக்கீழ் – மிகவும் அதள பாதாளத்தில் தள்ளப்பட்டு– அவலவாழ்க்கை நடத்துபவர்கள்தான் தோட்டத்தொழிலாளர்கள்.

அவர்களுடைய ஒருநாள் சம்பளம் அவர்களின் ஒரு நாள் வாழ்க்கைக்கான உணவுக்கே போதாத நிலை. ஒருநாள் வேலைக்குப் போகாவிட்டால் மாதத்தில் ஒரு நாள் அவர்கள் பட்டினி – கிடக்க வேண்டிய பரிதாபம்.

இன்று நமது நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் சுனாமி பேரலையால் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு பல ஆயிரம் உயிர்களைப் பலி கொண்டுவிட்டது. பல லட்சம் பேரை அகதிகளாக்கிவிட்டது. பல ஆயிரம் பேரை ஊனமுற்றோராக்கிவிட்டது.

புதிதாக ஒரு அநாதைச் சமூகத்தை இறைவன் உருவாக்கிவிட்டு கண்களை மூடிக் கொண்டான்.

கணவனை இழந்த கைப்பெண்கள், மனைவியை இழந்த கணவன்மார், பெற்றோரை இழந்த குழந்தைகள், குழந்தைகளைப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கும் பெற்றோர் என பரிதவிக்கும் ஒரு சமூகம் உருவாகிவிட்டது.

இதனால் கண்ணீர் வடிக்காத – கதறி அழாத – மனிதர் இல்லை. இன, மத, மொழி, சமய பேதங்கள் இன்றி அனைவரும் இவர்களுக்குக் கை கொடுத்து உதவினர். தமது தகுதிக்கேற்ப முடிந்த உதவிகளைச் செய்தனர். வசதி படைத்தவர்கள் வாரி வழங்கினார்கள்.

இவர்கள் எல்லோரையும் மிஞ்சிவிட மாட்டார்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். அன்றாட பிழைப்பை கொண்டு நடத்துவதற்கே தட்டுத்தடுமாறுகின்றனர். அவர்களுக்கே ஒழுங்கான வீடுகள் இல்லை. பசியின் கொடுமையை அனுபவபூர்வமாக உணர்ந்தவர்கள். இவர்களுடைய வாழ்க்கைத் தரம் மோசம். வறுமைக் கோட்டின் கீழ் படு பாதாளத்தில் இருக்கின்றனர்.

இப்படியான நிலையிலும் இந்த ஏழைத் தொழிலாளர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி உள்ளனர்.

மலையக மக்கள் முன்னணித்தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரனின் பகிரங்க வேண்டுகோளை ஏற்று மலையகத் தொழிலாளர்கள் கட்சி, இன, தொழிற்சங்க பேதங்களை ஒதுக்கிவீசிவிட்டு தமது ஒருநாள் ஊதியத்தை வழங்க முன்வந்தனர்.

அதோடு நின்றுவிடவில்லை. புது வருடப் பிறப்பிற்காக தாம் எடுத்த வைத்திருந்த ஆடைகள் மற்றும் உணவுப் பொருட்கள், பால்மா வகைகள் என தமது தகுதியையும் மீறி வழங்கி உள்ளனர். மலையகத்தில் இருந்து பல லொறிகள் மூலம் தாம் சேகரித்த பொருட்களை தாமே கொண்டு வந்து இவர்கள் கொடுத்ததைக் காணமுடிந்தது.

ஆனால், தோட்ட நிர்வாகிகளும், பேரினவாத அரசும் அதற்கும் கூட முட்டுக்கட்டை போட்டுவிட்டன.

அதாவது மலையகத் தொழிலாளர்கள் இரத்த உறவினாலும், பந்த பாசத்தினாலும், பேசும் மொழியினாலும் ஒன்றுபட்ட வடக்கு – கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ், முஸ்லிம் சகோதரர்களுக்கே கொண்டு சென்று வழங்க விரும்புகின்றனர். இதை இனவாதம் என்றோ, சமூகப்பிரிவினை உணர்வு என்றோ படம் பிடித்துக் காட்ட முயல்வது மடைமை.

அவர்களுடைய உணர்வுகளும், ஆதங்கங்களும் நியாயமானவையே.

தென்பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு ஒரு அனர்த்தம் ஏற்படும்போது அரசாங்கம் வாரிச்சுருட்டிக் கொண்டு நிவாரணப்பணிகளை மேற்கொள்கிறது. அவர்களுக்கு உதவிகளை வழங்க அனைத்து அரச இயந்திரங்களும் உஷார்ப் படுத்தப்பட்டு முடுக்கிவிடப்படுகின்றன.

ஆனால், வடக்கு – கிழக்கு மாகாணத்திலோ அல்லது மலையகத்திலோ ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்துவிட்டால், அரசு கண்டும் காணாதது போல் இருக்கின்றது. வெளி உலகுக்கு காட்டுவதற்காக அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் சென்று பார்ப்பதும் சென்று வந்தபின் பாரபட்ச மற்ற முறையில் நஷ்ட ஈடுகள் வழங்கப்படும் என அறிக்கை விடுவதும் வழமை. இது, ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்ற கதையாகிவிட்டது. இதற்கும் ஆதாரங்கள் உண்டு. சுனாமிப் பேரலைகு முன் கிழக்கு மாகாணத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகச் சென்றார். அகதி முகாம்களில் தங்கி இருப்பவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப் படும். அதற்கான நிதியை வழங்கி உள்ளேன், என்று கூறிவிட்டு வந்ததோடு சரி.

இப்பிரதேச மக்களின் நிலை பனையில் இருந்து விழுந்தவனை மாடேறி மிதித்ததோடு, கொம்பினாலும் குத்தி கொன்றுவிட்ட பரிதாபம். முதலில் வெள்ளப் பெருக்கு. தொடர்ந்து சுனாமி பேரலைத் தாக்கம். மரணபீதி ஓயும் முன் மீண்டும் வெள்ளப் பெருக்கு. ஆனால், பிரதமரும், ஜனாதிபதியும் அறிவித்த உதவிகள் இப்பிரதேச மக்களின் கைக்கு இன்னும் கிட்டவில்லை.

இது மட்டுமல்ல, தென்பகுதியில் ஏற்பட்ட அடைமழை, மண் சரிவு என்பனவற்றால் காலி, பலாங்கொடை, இங்கிரியா, காவத்தை, இறக்குவானை போன்ற பகுதிகளில் உள்ள தோட்டத் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இப்பிரதேச கிராமவாசிகளுக்கும், பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் இழப்பீடுகள் வழங்கப்பட்டன. அதேவேளை தோட்டத் தொழிலாளர்கள் ஓரம் கட்டப்பட்டனர்.

இவைமட்டுமல்ல கந்தப்பளையில் இடம் பெற்ற இனமோதலின்போது ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு பாகுபாடற்ற முறையில் இழப்பீடுகள் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. அது எழுத்திலும் பேச்சிலும் மட்டுமே.

இப்படி பல்வேறு சம்பவங்களின்போதும் ஏமாற்றப்பட்டவர்கள், ஏமாந்தவர்கள் தமிழர்கள். இவ்வாறான நிலையில் வடக்கு – கிழக்கில் ஏற்பட்டவெள்ள அனர்த்தத்தாலும், கடல் கொந்தளிப்பாலும் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அரசின் உதவிகள் நேரடியாகக் கிடைக்கும் என்பது கேள்விக் குறிதான்.

தனியார் அமைப்புகளும், நிறுவனங்களும் கொண்டு சென்ற நிவாரணப் பொருட்களை இடை நடுவில் சூறையாடி உள்ளனர். சிங்களப் பிரதேசங்களுக்குத் திருப்பி அனுப்பி உள்ளனர்.

இதைத்தடுக்க வேண்டிய இராணுவத்தினரும், பொலிஸாரும் விசமிகளின் செயலைக்கண்டும் காணாமலும் இருந்துவிட்டனர். இதுதான் வேதனை.

இதனால்தான் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தம்மால் வழங்கப்படும் உதவிகள் அனைத்தும் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கே செல்லவேண்டும் என்கின்றனர். உதவி செய்வதும், நன்கொடைகளை வழங்குவதும் தனிமனித உரிமை.

இதை எவராலும் தடுக்கவும் முடியாது. இவருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று கண்டிசன் போடவும் முடியாது.


ஆனால், மலையத்தில் உள்ள தோட்ட நிர்வாகிகள் தொழிலாளர்களால் சேகரிக்கப் பட்ட பொருட்களை, அந்தத் தொழிலாளர்களுக்கே தெரியாமல் பலவந்தமாக தென் பகுதிக்கு அனுப்பி உள்ளனர். நிர்வாகத்தின் இச்செயலுக்கு சில தொழிற்சங்கத் தோட்டத் தலைவர்களும் உடந்தையாக செயற்பட்டுள்ளனர். தொழிலாளர்கள் ஆட்சேர்த்தும் அதனை தோட்ட நிர்வாகங்கள் பொருட்படுத்தவில்லை.

அதோடு நின்றுவிடவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் வழங்கிய ஒருநாள் சம்பளப் பணத்தையும் பெருந்தோட்டத்துறை அமைச்சுக்கே அனுப்பி வைக்க வேண்டும் என அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா தோட்டக்கம்பெனிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது 'பிச்சை எடுக்குமாம் பெருமாள். அதைத் தட்டிப் பறிக்குமாம் அனுமான்' என்பது போலிருக்கிறது. அமைச்சரின் இந்தச் செயல் சுனாமி பேரலையைவிடக் கொடூரமானது.

தோட்டத்தொழிலாளர்கள் இரத்தம்வடித்து வியர்வை சிந்தி உழைத்த தமது வேதனத்தையே வழங்குகின்றனர். அது அவர்கள் விரும்பும் மக்களுக்கே சென்றடைய வேண்டும். அதை அரசாங்கமோ அல்லது ஒரு அமைச்சரோ தட்டிப்பறிக்க முடியாது. சர்வாதிகாரமாக நடக்க முற்பட்டால் அவர்கள் கடவுளின் சாபத்திற்கு உள்ளாவார்கள் என்பது உறுதி.

கடவுள் தண்டனை கொடுக்கும்வரை நாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மலையக அரசியல்வாதிகளும், தலைவர்களும் தமது பேதங்களை மறந்து இவ்விடயத்தில் ஒன்றுபட்டு செயறபட வேண்டும். இதிலும் அரசியல் இலாபம் கருதி காலை வாரிவிடாமல் தொழிலாளர்களின் விருப்பப்படி தாம் விரும்பியவர்களுக்கு உதவிகள் சென்றடைய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இனியும் தாமதிக்கக் கூடாது. செயலில் இறங்குங்கள்.



## டேஸ்ட்கடை தணிகாசலம்

# கடவுளே நீ எங்கே? ஒளிந்து கொண்டாயா?

தணிகாசலம் அண்ணன் டவுனில் இருந்துவந்த பஸ்ஸிலிருந்து இறங்கினார். அவருடைய பிரயாணப்பை கனமாக இருந்தது போல் அவருடைய இதயமும் கனத்தே இருந்ததை அவருடைய வாட்டமான முகம் அப்படியே படம் பிடித்துக்காட்டியது. எத்தனை சோதனைகள் வந்தாலும் கலக்கம் அடையாத தணிகாசலம் அண்ணன் பெரிதும் கலங்கிப் போய்க் காணப்படடார்.

பஸ்ஸில் இருந்து இறங்கிய தணிகாசலம் அண்ணனைக் கண்டதும், பஸ்ஸடிக்கு நின்றவர்கள் அவரை கூட்டமாக வளைத்துக் கொண்டனர்.

இரண்டு வாரங்களின் முன் மட்டக்களப்புக்கு உறவினர்களைப் பார்க்கச் சென்றிருந்தார். இந்தவேளையில் கடல் கொந்தளிப்பும் ஏற்பட்டது. இரண்டு வாரங்களாக தணி அண்ணனைப் பற்றி எந்த தகவலும் இல்லை. தோட்டத்துச் சனங்கள் ரேடியோ கேட்பதும், டி.வி.பார்ப்பதுமாகப் பெரும் கவலையுடனே காணப்பட்டனர். பெரியவர்கள், என்ன ஆனாரோ என்று வாய்விட்டு அழவும் கடவுளைக் கூட வாயில் வந்தபடி திட்டவும் ஆரம்பித்து விட்டனர்.

'கடவுளே! உனக்குக் கண் இல்லையா? உனக்கு ஏன் பூஜையும், பிரார்த்தனையும்! எங்கள் பிள்ளைகளை இப்படிக்கூண்டோடு கொள்ளை கொண்டு போய்விட்டாயே!' என்றும் புலம்பினர்.

இந்த சந்தர்ப்பத்தில் தணிகாசலம் அண்ணன் வந்து சேர்ந்தது எல்லோருக்கும் சற்று நிம்மதியைத்தந்தது. அவரிடம் என்ன கேட்பது, எதைக்கேட்பது என்ற திக்பிரமை பிடித்தவர்கள் போல் நின்றுவிட்டனர். எல்லோரையும் கண்டவுடன் தணிகாசலம் அண்ணனின் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டிவிட்டது. எல்லோரும் கட்டிப்பிடித்துக்கொண்டு கதறி அழ ஆரம்பித்துவிட்டனர்.

தணிகாசலம் அண்ணன் எல்லோரையும் அமைதிப்படுத்தினார். "நடக்கவேண்டியவை எல்லாம் நடந்துமுடிந்துவிட்டன. கண் இமைக்கும் நேரத்தில் பல ஆயிரம் பேரின் உயிர்களைப் பலி எடுத்துவிட்டான் கடல் அரக்கன். இறந்தவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய பிரார்த்திப்போம். மிஞ்சி இருப்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம் அதைத்தான் நாம் செய்ய முடியும்" என்றார் தணி அண்ணன்.

அப்போது இடைமறித்த ஐயாக்கண்ணுத் தாத்தா. "தம்பி நீங்க உங்களுடைய சகோதரங்களையும், பிள்ளைகளையும் தானே பார்க்கப் போனீர்கள். அவர்களின் நிலைமை எப்படி?" என்றார்.

***

'மட்டக்களப்பில் ஏற்பட்ட வெள்ளத்தால் அடிபட்டுவிட்டோம். உதவ வாருங்கள்' என்று தணி அண்ணனின் சகோதரியிடம் இருந்து தந்திவந்தது. தந்தி வந்த சமயம் பஸ் போக்குவரத்து இல்லை. உடனே போக முடியவில்லை. 'வெள்ளம் வடிந்துவிட்டது. வீடுகளுக்கு திரும்பி வந்துவிட்டோம்' என்ற தகவலும் கிடைத்தது.



சகோதரியின் குடும்பத்துக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான உடுபுடைவைகளையும், அத்தியாவசிய உணவுப்பொருட்களையும் வாங்கி மூட்டையாகக் கட்டிக் கொண்டு மட்டக்களப்புக்கு இரவு பஸ்ஸில் புறப்பட்டுவிட்டார் தணி அண்ணன்.

வழமையாக அதிகாலை நான்கு மணிக்கு முன் மட்டக்களப்பை அடைந்துவிடலாம். ஆனால், அன்றைய தினம் மன்னம்பிட்டியப் பால திருத்த வேலைகளுக்காக மூடப்பட்ட பாதை காலை 5.30 மணிக்கே திறக்கப்பட்டது. இதனால் பஸ் எட்டு மணிக்கே மட்டக்களப்பை அடைந்தது.

மட்டக்களப்பில் பழக்கமான ஒரு ஹோட்டலில் மூட்டையை இறக்கி வைத்துவிட்டு முகம், கால் கழுவிக் கொண்டு சூடாக ஒரு கப் போப்பியை குடித்தார். நீண்ட பிரயாணக்களைப்பு தீர சிறிது ஓய்வெடுத்த பின் ஒரு ஆட்டோவைப் பிடித்துக்கிளம்பினார்.

சில நொடிக்குள் எதிர்த் திசையில் இருந்து மரண ஓலம் கேட்டது. 'ஓடுங்கள் ஓடுங்கள், கடல் சீறி வருகின்றது' எனக் கூறிக் கொண்டே மக்கள் கூட்டம் கூட்டமாக ஓடிவந்தனர். கட்டிய உள்ளாடைகளுடனும், இரவு நேர நைட்டிகளுடனும் கையில் கிடைத்த பிள்ளைகளை இழுத்துக் கொண்டு ஓடிவந்தனர். இடியும் இல்லை, மின்னலும் இல்லை, மழையும் இல்லை. காலை சூரியன் இளம் வெயிலை இதமாகப் பரவவிட்டுக் கொண்டிருந்தான்.

ஆனால், கடல் அரக்கனோ சீற்றமுடன் பாய்ந்து நொடிப் பொழுதில் கரையோரக் கிராமங்கள் அனைத்தையும் துவம்சப்படுத்திவிட்டான்.

ஆட்டோ சாரதி தைரியமான இளைஞன். தண்ணீருக்குள்ளும் ஆட்டோவைத் திருப்பி மேட்டுப்பகுதியில் நிறுத்திவிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ ஓடிவிட்டான்.

தணி அண்ணனும் செய்வதறியாது தலை தெறிக்க அங்கும் இங்கும் ஓடினார். நகரெங்கும் ஒப்பாரி, மிதக்கும் சடலங்கள்.

தணி அண்ணன் செல்ல வேண்டிய புதுமுகத்துவாரம் நாவலடிக்கிராமம் முற்றாகவே அழிக்கப்பட்டு விட்டது என்ற செய்தி தணி அண்ணனை நிலை குலையச் செய்துவிட்டது.

கல்லடிப் பாலத்தை கடந்து செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை. காலை முதல் இரவு வரை கால் போன போக்கில் தணி அண்ணன் அலைந்தார். பிரேதங்கள் குவிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் சகோதரியின் முகம் தெரிகின்றதா? பிள்ளைகள் காணப்படுகின்றனரா என்று புரட்டிப் புரட்டித் தேடினார். ஒருவரும் இல்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

# மிஸ்டர் வேதாளம்



வார இதழின் இறுதிக்கட்ட வேலைகளில் மூழ்கி இருக்க... திடீரென ஆஜரானார்... திருவாளர்... வேதாளம்.

''என்ன இறுதிக்கட்ட நேரத்தில் வருகின்றீர்? விசேஷம் என்ன?'' என்றோம்.

''எங்கே யாரிடமும் எதுவும் பேசமுடியவில்லை. எல்லோர் வாயிலிருந்தும் சுனாமி பற்றிய பேச்சுத்தான். இந்தச் சுனாமி வந்தாலும் வந்தது. சமாதானப்பேச்சு விவகாரம், எஸ்.பி.திஸாநாயக்கா விவகா்ரம் எல்லாம்சுனாமி அலைகளுடன் இழுபட்டுப்போய்விட்டது.''

''ஆமாம்..சரி. அப்படியென்றால் சுனாமி பற்றிநீரும் பேச வேண்டியதுதானே!''

''என்னத்தைப்பேச இருக்கிறது. எல்லாவற்றையும்— எல்லாரும்— எல்லா நேரமும் பேசித்தள்ளிக்கொண்டே இருக்கிறார்களே!'' என்றார்.

''அப்படி என்றால் இவ்வாரம் உம்மிடமிருந்து சரக்குக்கிடைக்காதோ...? அப்படி என்றால் நேரத்தை மினக்கெடுத்தாமல் இடத்தைக் காலிபண்ணும்'' என்றோம்.

''சரக்கில்லாமல் இவ்வளவு தூரம் வருவேனா?'' என்றார் வேதாளம்.

''அப்படி என்றால் எடுத்து விடும்'' என்றோம்.

''நம்மவர்கள் கஷ்டமான நிலையையும் காசாக்குவதில் கெட்டிக்காரர்கள் தெரியுமோ?'' என்றார்.

''புதிர் வேண்டாம். விஷயத்துக்கு வாரும்.''

''இப்போ நாட்டில் புதுவித தொழில் ஒன்று ஆரம்பித்திருக்கிறார்கள் தெரியுமோ?''என்றார்.

''என்ன விடயம்? விரிவாகச் சொல்லும்''என்றோம்.

''அதாவது மாலைதீவு கடலிலே அமிழ்ந்துபோகும் ஒரு ஆபத்து இருப்பதாகவும், எனவே, மாலைதீவு மக்கள் தாங்கள் விரும்பிய எந்த ஒரு நாட்டுக்கும் சென்று PR எனப்படும் நிரந்தர வதிவிட உரிமை கோரலாம் என்றும் ஒரு நடவடிக்கை அமுலில் இருக்கிறது.''

''இது பழைய நடைமுறையாச்சே! அதில் இப்போ என்ன?''

''தற்போதைய சுனாமி அனர்த்தத்தின் பின் அந்த நடைமுறை தீவிரப்படுத்தப் பட்டிருக்கிறது. அதனால் பல மாலைதீவுக்காரர்கள் நாட்டைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.''

''ஆம். அதில் நமக்கு என்ன லாபம்?''

இங்கிருந்து ஆட்களை கப்பல் மூலம் மாலைதீவுக்குக் களவாகக் கொண்டு சென்று இறக்கிவிட்டு, அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று 'நாங்களும் மாலைதீவுக் காரர்கள்... எமக்கு நிரந்தர வதிவிட உரிமை தாருங்கள்' என விண்ணப்பிக்க முடியும் என்று சொல்லி மாலைதீவுக்கு ஆட்களைக் கப்பல் மூலம் கூட்டிச்செல்ல சிலர் ஆயத்தங்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அதற்கென பல லட்சம் ரூபாய்கள் கோரப்பட்டு வருகின்றன.''

''என்ன கதை இது... மாலைதீவுக்குள் நுழைவதென்றால் பாஸ்போட், விசா எல்லாம் தேவையே... அங்கிருந்து வெளியேறவும் ஆவணங்கள் தேவையே?''

''மாலைதீவிலேயே பல தீவுகள் இருக்கின்றன. அங்கே ஏதாவது ஒரு தீவில் ஆட்களை இறக்கி விடுவார்களாம். அங்கிருந்து நகர்ப்புறத் தீவுகளுக்குச் சென்று சுனாமி வெள்ளத்தில் எமது சொத்துக்கள் எல்லாம் அடிபட்டுச் சென்றுவிட்டன. ஆனால், நாங்கள் மாலைதீவுக்காரர்கள்தான் என்று பொய்சொல்லி அங்கே ஆவணங்களைப் பெற முடியும் என்றும், இயலாதவிடத்து தாமே மாலைதீவுவாசி என்ற ஆவணங்களை அங்கே பெற்றுத் தருகிறோம் என்றும் உறுதிமொழி வழங்கப்படுகிறதாம். இதற்கென பிரத்தியேகமாக பல லட்சங்கள் கறக்கப்படுகிறதாம்.''

''எனக்கென்றால் இது சாத்தியமான விடயமாகப்படவில்லையே!''

''சாத்தியமாகப்படவில்லைத்தான். இதற்கு முன்னர் எல்லாம் இத்தாலிக்கென்றும், அவுஸ்ரேலியாவுக்கென்றும் எத்தனை பேர் கப்பல்களில் அனுப்பப்பட்டார்கள். அவையெல்லாம் சாத்தியப்பட்டனவா? ஏதோ இங்குள்ள சிலர் சுளையாகப் பணத்தைப் பறித்துக்கொண்டு ஏதோ ஒரு கப்பலில் ஏற்றி அனுப்பிவிடுகிறார்கள். போனபின் அதனைப்பற்றி யார் கவலைப் படுகிறார்கள்..''

''ஐயையோ... அப்படியென்றால் இது ஏமாற்றுவேலையல்லவோ? பலர் ஏமாறப் போகிறார்களே!''

''ஆமாம். என்ன செய்வது... என்னிடம் இதுபற்றி தெரிவித்த ஒருவருக்கு நான் நிலைமையை விளக்கினேன். ஆனால், அவரோ எனது கதையைக் கேட்பதாக இல்லை. அவர்கள் மாலைதீவிலே இறக்கி—அங்கே தங்கள் பெயர்களைப் பதிந்து ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு விமான டிக்கெட்டும் எடுத்துத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். பத்து லகரங்கள் கொடுத்துவிட்டேன். இன்று அல்லது நாளை புறப்பட்டுவிடுவேன். பாய்... என்று சொல்லிவிட்டுப்போகிறார். இதற்கு மேல் நாம் என்ன செய்வது?''

''ரஷ்யா போன்ற நாடுகளில் இவ்வாறு ஏஜன்சிகளால் ஏமாற்றப்பட்டு பலர் அலைகிறார்களே... இன்னுமா எங்களவர்கள் திருந்தவில்லை.'' என்றோம்.

''சரி.. அடுத்து அமெரிக்காவுக்கு அடுத்த நாடு ஒன்று தம்மிடம் ஏற்கனவே விசாவுக்கு விண்ணப்பித்திருந்தவர்கள், நிராகரிக்கப்பட்டவர்களின் விண்ணப்பங்களை மீளப் பரிசோதனை செய்து கொஞ்சம் தமது சட்ட திட்டங்களை இழக்கி பலருக்கு விசா வழங்கி வருகிறது.''

''ஆம்... கேள்விப்பட்டோம். அதிலென்ன?''

ஆனால்...சுனாமிஅலைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்குத்தான் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது. ஆனால், இதனை அறிந்த எங்கள்சகோதரர்கள் சிலர் அடிபிடிபட்டு அந்த நாட்டுவிசாவுக்கு விண்ணப்பிக்கிறார்கள்''

''நம்மவர்களுக்கு ஒரு நூல் கிடைத்தால் போதுமே. சரி..சரி.. விசா கிடைத்ததோ?''

''எங்கே கிடைக்கிறது? பாதிக்கப்பட்டிருந்தால்தானே கிடைக்க. கிடைக்காதவர்கள் இப்போ கையிலே காசுடன் அலைகிறார்கள். யாராவது கிராமசேவையாளரை அல்லது பிரதேச செயலாளரைப்பிடித்து எமக்கும் சுனாமியில் பாதிப்பு ஏற்பட்டது என எழுதி வாங்குவதற்காக''

''அடடா... சுனாமி பயங்கரத்துக்குப்பின்னால் இவ்வளவு விவகாரம் இருக்குதா...? வேறு என்ன விடயம் வைத்திருக்கிறீர்?'' என்றோம்.''

''அவ்வளவுதான்'' என்றவர் ...''டாடா...பாய்பாய்'' என்றபடி காற்றோடு கரைந்தார்.

# கவனயீனமா?.....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

1962இல் மகா இலுபள்ளமையிலும், 1966இல் பதுளையிலும், 1968/ 1971இல் மத்தியமாகாணத்திலும், 1974இல் அக்கரைப்பற்று, பலாங்கொடை, குருத்தலாவ, பொகவந்தலாவ ஆகிய இடங்களிலும், 1975இல் காலியிலும், 1976இல் தங்காலையிலும், 1979இஸ்பிரிவ்வெலியிலும், 1980இல் திருகோணமலையிலும், 1993இல் கண்டி, அநுராதபுரம் ஆகிய இடங்களிலும் நில அதிர்வுகள் ஏற்பட்ட துக்கான பதிவுகள் உள்ளன.

சுனாமி அலையைப்பற்றி இலங்கை, இந்திய விஞ்ஞானிகள் ஏன் ஆரம்பத்தில் அக்கறை கொள்ளவில்லை என்ற கேள்வி எழலாம்.

பசுபிக் கடலை அண்மித்த நாடுகளுக்கு இது அறிந்த விடயம். அவர்கள் அவதானத்துடன் இருந்துவருகின்றனர்.

ஆனால், இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் சுனாமி அலையால் பாதிக்கப்படக்கூடிய பிராந்தியமாகக்கருதப்படவில்லை. இந்துமகா சமுத்திரத்தை பாதுகாப்பான பிராந்தியமாகவே விஞ்ஞானிகள் கருதினர்.

இதனால்தான் சுனாமி பற்றி அறிவு இந்நாட்டு மக்களுக்கு தேவையற்றதாக இருந்தது.

இலங்கை, இந்தியா, இந்தோனேசியா ஆகியநாடுகளில்சுனாமியின் ஆபத்து எதிர்வுகூறல் மக்களுக்குப் புதிதாகவே இருந்தது. வேடிக்கைகளில் ஆர்வமுள்ளவர்கள் கடலில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டுவியப்புற்றனர். அந்த வியப்பு விபரீதத்தில் முடிவுற்றது. எவ்வாறு நிலப்பகுதியில் நில அதிர்வுகளும், எரிமலைகளும் ஏற்படுகின்றனவோ அதே போல் கடலுக்கடியிலும் நில அதிர்வுகளும் எரிமலைகளும் ஏற்படுகின்றன.

இவ்வாறு ஏற்படும்போது கடல் உள் வாங்கிச்சென்று மணல் மட்டம் அதிகரிக்கிறது. இதனைக் கண்ட மக்கள் ஆவலுற்று மணலை நோக்கி ஓடினர். சிப்பிகள் அள்ளினர். வித்தியாசமான பொருட்கள் இருக்குமா என்று தேடி ஓடினர். ஆனால், கடல் அவர்களை எல்லாம் அள்ளி அழித்தது.

100 மீற்றர் 200 மீற்றர் வரை கடல் உள் சென்றது. அதேவேளை, மணித்தியாலத்திற்கு 500 முதல் 600 கிலோமீற்றர் வேகத்தில் மீண்டும் வந்து தாக்கியது. அந்தத்தாக்கத்தில் ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிந்தன. உறவுகள் பிரிந்தன.

இந்த நிகழ்வுகள் இலங்கை, இந்தியா, மலேசியா, மாலைதீவுகளுக்குப் புதிய விடயமாக இருந்தாலும், சர்வதேச அளவில் இந்தமாதிரியான நிகழ்வுகள் நடந்தவண்ணமே உள்ளன.

## ஜப்பானில் பேரழிவு

ஜப்பானில் 1896ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அலைகள் 7 மாடி கட்டடம் அளவு உயர்ந்தன. 26,000பேர் மாண்டனர்.

1883இல் யாவா தீவில் 36, 000 பேர் மடிந்தனர். 1958 இல் அலாஸ்காவில் 516 மீற்றர் உயர்ந்த அலையினால் ஆயிரக்கணக்கில் மடிந்தனர்.

சுனாமி அலைகள் பலவகைப்படும். கடல் அலை வித்தியாசப்படும். ஆனால், கடல் அலைக்கும், சுனாமிக்கும் வேறுபாடுகள் உள்ளன.

சந்திரனின் ஈர்ப்பு சக்தி காரணமாகவும், நடுக்கடலில் புயல் தோன்றும்போதும் அலைகள் தோன்றும். ஒரு அலைக்கும் மற்றைய அலைக்குமிடையில் உயரம் ஒன்று முதல் 5 அடி வரை இருக்கும்.

ஆனால், சுனாமி அலையின் போது அலைகளுக்கிடையிலான வித்தியாசம் நூற்றுக்கணக்கான அடியில் இருக்கும். அதே வேளை சுனாமியின் தரை நோக்கிய வீச்சும் மிக அதிகளவில் காணப்படும். அதனால்தான் சுமத்திராவில் ஏற்பட்ட அலை இலங்கைவரை பரவியது.

ஆசியாவில் ஏற்பட்ட இந்த அனர்த்தம் காரணமாக பல நாடுகள் பீதி அடைந்துள்ளன.

கடற்கரையை மையமாகக் கொண்டு இயங்கும் நட்சத்திர விடுதிகள், பொழுது போக்கு இடங்கள் ஆகியவற்றுக்கு இப்பொழுது ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கடல் அடியிலிருந்து 6 அடி மட்டுமே உயரம் கொண்ட மாலைதீவு, கடல் மட்டத்திலிருந்து 3 அடி உயரமுள்ள பங்களாதேஷ், அமெரிக்காவில் புளோரிடா மாநிலம் என்பவை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து வருகின்றன.

கடலோரப்பிரதேசத்தில் அமைக்கப்படும் புதிய சாலைகள், இறால் பண்ணைகள், தொழிற்சாலைகள் விரிவாக்கல் திட்டங்கள் என்பவற்றை எதிர்காலத்தில் திட்டமிட்டுச் செய்தால் மக்கள் அவலத்தை எதிர் நோக்க வேண்டி ஏற்படாது.

இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை அமைப்பு வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது பலருடைய விருப்பம்.

ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையில் ஜப்பானின் கோபேயில் நடைபெறவுள்ள அனர்த்தத் தவிப்பு சர்வதேச மாநாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என சர்வதேச சுனாமி முன்னெச்சரிக்கை மையப் பணிப்பாளர் கலாநிதி வெறளா ஹெங் அறிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பானது ஆக்கபூர்வமாக அமைய வேண்டும் என அனைவரும் பிரார்த்திக்கின்றனர்.

# கடவுளே நீ எங்கே?...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரேதங்கள் குவிக்கப்பட்ட மட்டக்களப்பு வைத்தியசாலையிலேயே பிரேதங்களோடு பிரேதமாகக் குந்திவிட்டார். பிரேதங்கள் வந்து குவிந்து கொண்டே இருந்தன. காயப் பட்டவர்களும் கொண்டு வரப்பட்டனர். மட்டக்களப்பு நகரமே செத்த வீடானது. எங்கும் அழு குரல், ஒப்பாரி.

ஒருவாறு மறுநாள் பொழுதும் விடிந்தது. மெதுவாக ஹோட்டலை நோக்கிச் சென்றார். அங்கே ஹோட்டல் முதலாளி கூறியது பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்திவிட்டது.

ஆம் ஆட்டோவில் விட்டுச்சென்ற பொருட்களை அப்படியே கொண்டுவந்து கடையில் ஒப்படைத்திருந்தான் அந்த இளைஞன்.

"ஐயா இது நடக்க கூடியவிடயமா!" என்று ஆச்சரியப்பட்டார் தணி அண்ணன். "ஆம் உண்மை தான் உங்களுக்கு உதவியாக வந்த பொடியன் இயக்கத்தை சேர்ந்தவன். இங்கே எந்த மோசடிக்கும் இடமளிக்க மாட்டார்கள்" என்றார் கடை முதலாளி.

"ஐயா சாமான்கள் அப்படியே இருக்கட்டும் நான் எனது பிள்ளைகளைத் தேடிப் பார்த்து விட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு கல்லடிப் பாலத்தைக் கடக்கும் போது தான் அந்த இடி தணி அண்ணரின் தலையில் விழுந்தது.

தனது சகோதரியின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வசிக்கும் செல்வநாயகம், தலைவிரி கோலத்தில் ஓடிய தணி அண்ணனை அடையாளம் கண்டுகொண்டு தடுத்து நிறுத்தினார்.

"ஐயா நடந்தவை எல்லாம் ஒரு நொடிப் பொழுதுக்குள் முடிந்துவிட்டன. நான் கொஞ்சம் சாமான் வாங்க காத்தான் குடிக்கு வந்தேன். அந்த சிறிது நேரத்தில் அனைத்து வீடுகளும் அடித்துச் செல்லப்பட்டன. வெளியில் சென்றிருந்த ஒரு சிலரைத்தவிர எல்லோருமே போய்விட்டனர்" என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதார்.

"இப்போது காத்தான் குடியில் சில சடலங்கள் கரை ஒதுங்கி இருப்பதாகக் கூறினார்கள். வாருங்கள் போய்ப்பார்ப்போம்" என மோட்டார் சைக்கிளில் கிளம்பினார் நண்பர். தணி அண்ணனும் ஏறிக்கொண்டார்.

பிணக்குவியலை கிண்டிப் பார்த்தனர். அங்கே தணி அண்ணனின் சகோதரி தனது ஒருவயது மகளைக் கட்டிப்பிடித்தபடியே சடலமாகக் காணப்பட்டார். குடும்பத்தில் வேறு எவருமே காணப்படவில்லை.

அடையாளம் காணப்பட்ட சடலங்கள் விசாரணையின் பின் குவியல் குவியலாக ஒரே குழியில் அடக்கம் செய்யப்பட்டன.

இவற்றை எல்லாம் முடித்துவிட்டு ஐந்து ஆறு நாட்களாக சவக்காலைகள், அகதி முகாம்கள் எல்லாம் தேடிக்களைத்துப் போனார் தணி அண்ணன். எவருமே மிஞ்சவில்லை. நாவலடிக்கிராமம் மக்கள் வாழ்ந்த அடையாளம் கூட இல்லாமல் அமிழ்ந்து போய்விட்டது. எவரும் உயிர் தப்பவில்லை என்ற அரசாங்க அதிபரின் அறிவித்தலைக் கேட்ட தணி அண்ணன் தான் கொண்டு போன பொருட்களை எல்லாம் அகதி முகாம் ஒன்றில் ஒப்படைத்துவிட்டு சோகச் சுமையை சுமந்துகொண்டு வீடுவந்த சேர்ந்துள்ளார்.

***

இது தான் நடந்த சம்பவம் என தணி அண்ணன் கூறியபோது அங்கே எழும்பிய அழுகை ஒலியும் விசும்பல்களும் இன்னும் ஓயவில்லை.

# அன்றைய கால பெண்களின் வாழ்க்கை முறை எவ்வாறானது?

எழுச்சிகளும், புரட்சிகளும் காலங்காலமாய் இருந்து வந்தாலும் இன்றும்பெண்களை இரண்டாந்தரப் பிரஜையாக எண்ணும் மனப்பாங்கு சமூகங்களில் இருந்து விலகவில்லை. பெண்ணின்தனிப்பட்ட சுதந்திரத்தில் தலைபோடும் நிலையும் மாறவில்லை. அவளின்அசைவுகள் கூட அலசப்படுகின்றன, உடைகள் பற்றிப் பேசப்படுகின்றன, அணிகலன்கள்பற்றி ஆராயப்படுகின்றன.

பெண் விடுதலை என்றால் என்ன? அதன் தார்ப்பரியம் என்ன? என்பவை பற்றி சில ஆண்களுக்கு மட்டுமல்ல பல பெண்களுக்குமே இன்னும் புரியவில்லை.

இன்றைய உலகில் பெண்கள் முன்னேறிவிட்டார்கள்தான். அதை இல்லையென்று யாரும் சொல்ல முடியாது.

பெண்களின் பங்கு என்பது உலகில் மிகமுக்கியமானது. அவர்கள் இல்லாமல் ஆண்களால் பெரிதாக எதையும் சாதித்து விட முடியாது.

இருந்தும் பெண் ஏன் அன்றுஅடக்கப்பட்டாள்? ஏன் ஒடுக்கப்பட்டாள்?

அன்று ஏட்டில் எழுதிய நாம் இன்று கணினியில் எழுதுகிறோம். புறாவைத் தூதுவிட்ட நாம் மின்னஞ்சலில் அசத்துகிறோம். பெண்ணை மட்டும் அடங்கு என்று சொல்ல இன்னும் நாம் காட்டிலா வாழ்கிறோம் அல்லது எம்மைச்சுற்றி விலங்குகளா நடமாடுகின்றன?

காட்டு வாழ்க்கையை விட்டு நாட்டு வாழ்க்கைக்கு நாம் என்றோ மாறிவிட்டோம். இருந்தும் மூளையில் பதியப்பட்ட அடிப்படையான ஆதிகாலப் பிரச்சினையை கருத்தில் கூடக் கொள்ளாமல் இன்னும் பெண்கள் வீட்டுக்குள் ஒடுங்க வேண்டியவர்கள் என கண்மூடித்தனமாய் சிலர் கருதுகிறார்கள்.

அன்று சூழ்நிலை கருதி– பாதுகாப்பு கருதி குழந்தை பெற்ற பெண்கள் வீட்டினுள் தங்கினார்கள் என்றால், இன்று அந்த எந்தக்காரணங்களும் இல்லாமல் பெண்கள் வீட்டுக்குள் அடங்க வேண்டும் என நினைக்கிறோம்.

உண்மையில் ஒரு ஆணை விட ஒரு பெண்ணால்தான்ஒரு வியாபார ஸ்தலத்தையோ அல்லது ஒரு பெரிய நிறுவனத்தையோ கூட்டாகக் கொண்டுநடத்தி கூடுதலாக வெற்றி பெற வைக்க முடியும்.

ஒரு சொல்லை ஒரு ஆணிடம் சொன்னால் அவனால் அந்தச் சொல்லுக்கு ஒரு அர்த்தம் தான் கண்டுபிடிக்க முடியும் என்றால் ஒரு பெண்ணிடம் சொன்னால் அவள் அதுபற்றி நன்கு சிந்தித்து பல கோணங்களில் பல அர்த்தங்களைன் கண்டுபிடிப்பாள். ஒரு விடயத்தைச் சொன்னால் அதுபற்றி நன்கு யோசித்து அதற்குப் பதில் சொல்லும் தன்மை ஆண்களின் மூளையில் ஒரு பங்கு என்றால் அதைக் கிரகித்து பதில் சொல்லும் தன்மை பெண்களின் மூளையில் ஆறு பங்கு என்பது ஆய்வாளரின் கண்டுபிடிப்பு.

அன்றைய காலத்தில் தேவை கருதி வீட்டுக்குள் இருந்த பெண்களிடமிருந்து மெதுமெதுவாக சுகங்களை அனுபவிக்கத் தொடங்கிய ஆண்கள் ஒருகாலத்தில் பெண்களை வெறும் சுகபோகப் பொருளாகவே பாவிக்கத் தொடங்கினர். சுயநலம் கருதி உளவியல் ரீதியான தாக்கத்தைக்கொடுத்து பெண்களை அடிமைப்படுத்தியும்விட்டனர். இதனால் வீட்டுக்குள்ளேயே இருந்து இசைவாக்கம் பெற்ற மூளையிடமிருந்து விடுதலைபெற முடியாத பெண்கள் தாம் வீட்டுக்குள் முடங்க வேண்டியவர்கள்தான் என நினைத்து தமக்குத்தாமே விலங்கிட்டு அடங்கியும் விட்டார்கள்.

> **இவ்வார பொன்மொழி**
>
> *அடுத்த நாளை அருமையாகத் திட்டமிட ஆசைப்படுகிறீர்களா? அதற்கு ஒரே வழி இன்றைய வேலைகளை மிச்சம் வைக்காமல் இன்றே செய்து முடிப்பது தான்.*




இதேநேரம் இவையெல்லாம் பிழை. முன்னர் நாம் வீட்டுக்குள் முடங்க வேண்டிய காரணங்கள் இருந்தன. இன்று வெளியே சென்றாலும் எம்மால் எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று சில பெண்கள் சிந்திக்கவும் தவறவில்லை. சிந்திக்கத் தொடங்கிய பெண்களின் விழிப்பு நிலையே இன்று சில ஆண்களுக்குப்பிரச்சினையாகஇருக்கிறது. பெண்களிடம் ஏற்பட்ட இந்த மாற்றத்தை ஆண்களின் மூளை ஏற்றுக்கொள்ள முடியாமல் திண்டாடுகிறது.



இந்த உண்மைக் காரணங்களை ஆண், பெண் இருபாலாரும் உணர்ந்து செயற்படும் பட்சத்தில் இந்தப் பெண்ணடிமை, பெண் அடக்குமுறை, பெண்ணை இரண்டாந்தரப் பிரஜையாகஎண்ணும்தன்மை எல்லாமே அர்த்தமற்ற செயல்கள் என்பது நன்கு புலப்படும்.

இப்போது கூட உங்கள் மனதில் எங்கே பெண்கள் அடிமையாக இருக்கிறார்கள் என்ற கேள்வி எழலாம். அவர்கள் சுதந்திரமாகத்தானே திரிகிறார்கள் என்ற சிந்தனை ஓடலாம். ஆயுதம் தாங்கிப் போராடுகிறார்கள் என்ற பிரமிப்பு ஏற்படலாம். இத்தனை சலுகைகள் கொடுத்தும் இன்னுமா திருப்தி இல்லை என்ற எரிச்சல் எழலாம்.

உண்மையில் பெண்களுக்கு இன்னும் முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. வெறும் சலுகைகள் மட்டும் வாழ்க்கை இல்லை. அவள் சுயம் பேணப்பட வேண்டும். அவள் சுயமாக இயங்கச் சுதந்திரம் கிடைக்க வேண்டும். பெண் இப்படித்தான் வாழ வேண்டும் என்று சமூகத்தின் அடிமனதில் எழுதி வைக்கப்பட்ட சில எழுதாத சட்டங்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும். அவள் அவளாக வாழ அவள் மனதில் தைரியம் வர வேண்டும். இது பற்றியதான சிந்தனை சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரிடமும் எழ வேண்டும்.

கருப்பையில் மூன்று மாதக் கருவாக இருக்கும் போதே ஒரு குழந்தை தாயின் உணர்வுகள், தாயைச்சுற்றி ஒலிக்கும் குரல்கள்...என்று எல்லாவற்றையும் கிரகிக்கத் தொடங்கி விடும். வெளியில் கேட்கும் சினிமாப் பாடலைக் கூட மனப்பாடம் செய்யத் தொடங்கிவிடும். இது இன்றைய ஆய்வாளரின் கண்டுபிடிப்பு.

இதன் விளைவுகளை பெற்றோர்கள் சார்பான முறையில் சிந்தித்து ஒரு பெண் தாயாகத் தொடங்கியதிலிருந்தே ஒவ்வொரு செயற்பாட்டின் போதும் இதை கருவுக்குள் உருவெடுத்திருக்கும்எமது பிள்ளையும்கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது என்ற எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். பிறந்த பின்னும் குழந்தைகள் வளர்ந்துகொண்டிருக்கும்போதே ஒவ்வொரு விடயத்திலும் ஆண் குழந்தை பெண் குழந்தை என்ற பேதமின்றி பாராபட்சமின்றி அவர்களை வளர்க்க வேண்டும். அப்போது தான் பெண் அடிமை என்பது முற்றாக ஒழிய வழி ஏற்படும்.

# கர்ப்ப காலத்தில்...

ஒரு பெண்ணின் வாழ்க்கையை முழுமைப்படுத்தும் விடயமே தாய்மைதான்.

இந்தத் தாய்மைப் பேற்றை அடையும் பெண்கள், தங்களுக்கென்று இருக்கிற கடமைகளையும் முழுமையாக நிறைவேற்றினால்தான் அந்தத் தாய்மை முழுமை அடையும்.

சில கடமைகள், கர்ப்பம் அடைந்தவுடனேயே தொடங்கிவிடும். கர்ப்பவதி தனது உடல் ஆரோக்கியத்தைக் கவனிப்பது மிகவும் அவசியம். இல்லையெனில் இதன் விளைவு நேரடியாக வயிற்றில் உள்ள குழந்தையைப் பாதிக்கும். சில பெண்கள், இது குறித்த சில மன பயத்திலேயே தன்னை ஒரு நோயாளியாகக் கருதிக்கொள்கிறார்கள்.

இதன் விளைவுதான் பிரசவத்தின் போதோ அல்லது அதற்கு முன்போ வலிப்பு நோய் வருகிறது.

பிரபல மகப்பேறு மருத்துவ நிபுணர் ஒருவர் கர்ப்ப காலத்தின்போது, உணவில் பச்சைக்க காய்கறிகள் மற்றும் புத்தம் புதிய பழங்கள் அதிக அளவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். சில பெண்கள் அதிக அளவில் நெய் மற்றும் உலர் பழங்களைச் சேர்த்துக்கொள்வார்கள். இது கலோரியை மட்டும் தான் அதிகரிக்கும். இவற்றிலிருந்து ஊட்டச்சத்துக்கிடைக்காது. ஆகவே, தேவைக்கேற்ப இவற்றைச் சாப்பிட வேண்டும்.

முறையான ஊட்டச்சத்து மிக்க உணவைச்சாப்பிடாத பெண்கள், சத்துக்குறைபாடு மற்றும் உடல் சோர்வுக்கு ஆளாக நேரிடும். கர்ப்பிணிப் பெண்களுக்கு இது நல்லதல்ல.

தகரங்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்களை, குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் உட்கொள்ளக் கூடாது. ஏனெனில் உணவு கெடாமல் இருக்கும்பொருட்டு, இதில் பதப்படுத்தப்படும் இரசாயனங்கள் சில சேர்க்கப்படுகின்றன. இது கருவில் வளரும் குழந்தையின் வளர்ச்சியைத் தடுத்து, உடல் உறுப்புகளில் குறைபாட்டை உருவாக்கும்.



சரியான கால இடைவெளியில்காய்கறி மற்றும் பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் தாய் மற்றும் சேய்க்குத் தேவையான அளவு சத்துகள் கிடைக்கும்.

கர்ப்பிணிப் பெண்கள் தேநீர், கோப்பியைத் தவிர்ப்பது சிறந்தது. இதில் உள்ள கோர்பின் மற்றும் நிக்கொட்டின் கர்ப்பத்தில் வளரும் சிசுவைப் பாதிக்கும்.

அதிக நேரம் நிற்பதும், கால்களைத் தொங்கப் போட்டபடி இருப்பதும் தவறு. நாற்காலி அல்லது சோபாவில் உட்காருவதை தவிர்க்க வேண்டும். முடிந்தவரையில் நன்கு வசதியாக உட்கார வேண்டும். இல்லையேல் படுக்கையில் சம்மணமிட்டு இருக்கலாம்.

எப்போதும் இடதுபுறமாகப் படுத்து உறங்கவும். அப்போதுதான் சிசுவுக்குத் தேவையான அளவு ஒட்சிசன் கிடைக்கும். கணனியில் வேலை செய்யும்போது பாதுகாப்பான ஸ்கிரீனைப் பயன்படுத்தவும். இதிலிருந்து வெளியாகும் கதிர்களால் சிசுவுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடும்.

இரவில் எட்டு மணி நேரமும், மதியம் 2 மணி நேரமும் உறங்குவது அவசியம். கர்ப்பிணிகளை அதிக அளவு தண்ணீர் அருந்தும்படி வைத்தியர்கள் கூறுவார்கள். இதனால் மலச்சிக்கல், மூல நோய், சிறுநீர்ப்பையில் ஏற்படும் நோய்த்தொற்று போன்றவை தடுக்கப்படுகின்றன. அதனால்தான் அதிக அளவு தண்ணீர் குடிக்கச் சொல்கிறார்கள்.

****

## சமையல் குறிப்பு

### சீரகக் குழம்பு

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| புளி | –எலுமிச்சம்பழ அளவு. |
| உப்பு | –தேவையான அளவு. |
| சரக்குத்தூள் | – 1 கரண்டி. |
| கடுகு | – சிறிதளவு. |
| சீரகம் | – 1/2 கரண்டி. |
| மிளகாய் வற்றல் | – 4 |
| பெருங்காயம் | – 1 துண்டு. |
| உளுத்தம்பருப்பு | –1/2 கரண்டி |
| துவரம்பருப்பு | – 1 கரண்டி. |
| கருவேப்பிலை | – சிறிதளவு. |
| நல்லெண்ணை | – சிறிதளவு. |

**செய்முறை**

புளியைத் தண்ணீரில் நன்றாக ஊற வைக்கவும். புளி நன்கு ஊறியவுடன் புளிச்சத்து தீரும்வரை நன்றாகப் பிசைந்து கொஞ்சம் புளித்தண்ணீரை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளவும். பின்பு ஒரு தாச்சியில் சிறிது நல்லெண்ணையை ஊற்றி கொதித்தவுடன் அதில் கடுகு, மிளகாய், சீரகம், பெருங்காயம், ஆகியவற்றைப்போட்டு, கடுகு வெடித்தவுடன் உளுத்தம்பருப்பு, துவரம் பருப்பு ஆகியவற்றைப்போட்டு அவை நன்கு சிவந்தவுடன் மீதி வைத்திருக்கும் புளித் தண்ணீரை அதில் ஊற்ற வேண்டும். குழம்பு சுமார்10 நிமிடங்கள் கொதித்தவுடன் (புளிவாசனை போனவுடன்) அரிசி மாவைக் கரைத்து ஊற்றி ஒரு கொதி வந்தவுடன் இறக்கிப் பரிமாறவும்.

# சிந்தனை முத்துக்கள்

1. நித்திரை செய்பவனைக் கொல்வதற்கு வீரம் தேவை இல்லை. நல்ல நம்பிக்கை வைத்தவர்களை ஏமாற்ற அதிக சாமர்த்தியம் வேண்டியதில்லை.
02. எப்போதும் உண்மையே பேசினால் எவற்றையும் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.
03. நீ சொல்லப் போகும் வார்த்தை மௌனத்தை விட சிறந்ததென்று திடமாக தெரியும் வரை வாயைத் திறவாதே.
04. பிறர் குறை காண்பவன் அரை மனிதன். தன்குறை காண்பவன் முழுமனிதன்.
05. மொழி என்பது ஒரு கருவியல்ல அது மனித உள்ளம் படிக்கும் தேன்கூடு.
06. அமைதியாய் இரு நீ யாரையும் கவர்ந்து கொள்வாய்.
07. உன்னைத் திருத்துவது உனக்கு எவ்வளவு கஷ்டமாக உள்ளது என்பதை நீ புரிந்து கொள்வாய். ஆனால், மற்றவர்களை திருத்துவதற்கு உனக்கு அதிக சந்தர்ப்பம் இல்லை என்பதைத் தெரிந்து கொள்வாய்.

*பி. தமிழினி,*
*தரம் 11,*
*ம/மல்வாவி மத்திய கல்லூரி.*

# அறிந்து கொள்ளுங்கள்

| நூல்கள் | நூலாசிரியர்கள் |
|---|---|
| கம்பராமாயணம் | கம்பர் |
| நல்வழி | ஔவையார் |
| மகாபாரதம் | பாரதமுனிவர் |
| திருக்குறள் | வள்ளுவர் |
| பெரியபுராணம் | சேக்கிழார் |
| திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| கந்தபுராணம் | கச்சியப்ப சிவாச்சாரியார் |

*பு. உமா*
*தரம் 7A*
*மு/மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம்.*

# பொது அறிவு

01. இலங்கையின் முதல் பத்திரிகை? உதயதாரகை
02. இலங்கையில் தாள் நாணயம் புழக்கத்திற்கு வந்தது எப்போது? 1885 இல்
03. பூச்சியத்தை உலகிற்கு வழங்கிய நாடு? இந்தியா
04. தொலைபேசியை கண்டுபிடித்தவர் யார்? கிரகாம்பெல்
05. விண்வெளிக்குச் சென்ற பெண்மணி யார்? வலன்ரீனா
06. மஞ்சல் ஆறு ஓடும் நாடு எது? சீனா
07. குளோனின் முறை மூலம் உருவாக்கப்பட்ட குரங்கின் பெயர்? டெற்றா (Tetra)
08. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ எது? குறிஞ்சி
09. உலகில் நான்குவரி தேசிய கீதத்தைக் கொண்ட நாடு? ஜப்பான்
10. தமிழ் அகராதியை தொகுத்தவர் யார்? கதிரவேற்பிள்ளை

*தீ. சரவணப்பிரபு.*
*தரம் 8, மு/ பாரதி வித்தியாலயம்.*

# இலங்கையில் உள்ள ஆராய்ச்சி நிலையங்கள்

| | | |
|---|---|---|
| 01. தேயிலை | - | தலவாக்கொல்லை |
| 02. இறப்பர் | - | அகலவத்தை |
| 03. இயற்கைப்பட்டு | - | கண்டி |
| 04. உருளைக்கிழங்கு | - | நுவரெலியா |
| 05. பருத்தி | - | அம்பாந்தோட்டை |
| 06. சோயா | - | பல்லேகல |
| 07. வளிமண்டலம் | - | கொழும்பு [பௌத்தலோக மாவத்தை] |
| 08. விவசாய கால்நடை | - | மகா இலுப்பல்லம |
| 09. தென்னை | - | லுணுவில |
| 10. நெல் | - | மகா இலுப்பல்லம, பத்தலகொட, ஹிங்குராக்கொட. |

*துவான் சிந்து,*
*யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*

# இருவர்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

வெற்றிச்சிரிப்பு சிரித்த நாகராஜன், "மாடசாமி! என்ன பயந்துட்டியா? துப்பாக்கி நம்மகிட்ட இருக்கும்போது எதுக்கு பயப்படனும்! துப்பாக்கியை பதினைந்து வயதில் பிடித்த அனுபவம் எனக்கு இருக்கு. ஆபத்துக்கு பாவம் இல்லே!" என்றபடி சிங்கத்தை குறிவைத்து சுட்டார். சிங்கமும் சுருண்டு விழுந்து செத்தது.

"சிங்கத்தைக் கொல்வது சட்டப்படி குற்றம். சரி! சரி! முதலில் வீட்டுக்கு நடையைக் கட்டுவோம். வா, வா..." என்று அவசரப்படுத்தி வீட்டை நோக்கி வேகநடை போட்டனர்.

இருவரும் வீட்டை அடையும்போது இரவு 2 மணி. பண்ணையாரின் வீடு ஒன்றில் இருவரும் தங்கினர். அங்கே இருந்த காப்பித்தூள், சர்க்கரை ஆகியவற்றை பயன்படுத்தி காப்பி தயாரித்துக் குடித்துவிட்டு சற்றே ஆசுவாசப்படுத்திக் கொண்டனர்.

சிங்கத்தை சுட்ட விடயம் வெளியே தெரிய வரப் போகிறது என்ற பயம் பண்ணையாருக்கு ஏற்பட்டது.


மாடசாமி உடனே, "முதலாளி, இதுக்கா பயப்படுறீங்க? நான் இருக்கிறேன். கவலைப்படாதீங்க. நீங்க வெளியூர் போன சமயத்திலே நான்தான் வேட்டைக்கு போய் சிங்கத்தை சுட்டு விட்டு வந்தேன் என்று கூறி உங்களுக்காக சிறை செய்கிறேன்" என்றான்.

"சரி! மாடசாமி நானே ஒரு இரண்டு நாள் கழிச்சு ரகசியமாய் போய் வன இலாகா அதிகாரிகளிடம் சொல்லி விடுகிறேன். பொலீஸில் நீ போய் சரண் அடைந்துவிடு முடிந்தால் பிணையில் உன்னை வெளியே எடுத்துடறேன்...!"

கமலம் ஒரு கதை போலச் சொல்லி முடித்ததும் தினேஷ் அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "அம்மா! என் அப்பா எப்படிப்பட்ட தியாகம் செஞ்சிருக்காரு! ஆனால், திமிர் பிடிச்ச மகேஷுக்கு எங்கே புரியப் போகுது?" என்றதும் கமலம், "தம்பி! காய்த்த மரம்தான் கல்லடிக்கும் என்று பழமொழி இருக்கு. நீ அப்பா மாதிரி மற்றவர்களுக்கு உதவுற பனப்பான்மையை வளர்த்துக்கொள். நீ நல்லா படித்து நல்ல உத்தியோகம் தேடிக் கொள்" புத்திமதி கூறினாள்.

"அப்படியே நடக்கிறேம்மா..." என்ற தினேஷ் இனி தினமும் அப்பா வருகைக்காக வாசலையே பார்க்கிறான்! கமலமும்தான்!

(முற்றும்)



# வழி காட்டுங்கள்



குஞ்சுவாத்து அங்கே! தாய் வாத்து இங்கே! பாவம் தாய் வாத்துதான். என்ன பண்ணும்? வழி தெரியாமல் தடுமாறும் அதற்கு நீங்களாவது சரியான வழியைக் காண்பித்து உதவக் கூடாதா தம்பி தங்கைகளே?

# சர்வதேச குறியீடுகள்

| | |
|---|---|
| 01. ஒலிவ் மரத்தின் இலை | — சமாதானம் |
| 02. புறா | — சமாதானம் |
| 03. சக்கரம் | — வளர்ச்சி |
| 04. தலை கீழாகக் கொடி | — துக்கம் |
| 05. அரைக்கம்பக் கொடி | — இரக்கம், அனுதாபம் |
| 06. வெள்கைக் கொடி | — சமாதானம் (பௌத்தர்களின் துக்கம்) |
| 07. மஞ்சள் நிறக் கொடி | — தொற்று நோய் |

*ரா. ராஜினி,*
*தரம் 9B,*
*கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்.*

# மனிதன் மனிதனாக

தோற்றத்தில் அடக்கம் வேண்டும்
செல்வத்தில் எழிமை வேண்டும்
வறுமையில் வாய்மை வேண்டும்
சினத்தில் பொறுமை வேண்டும்
தொழிலில் நேர்மை வேண்டும்
கடமையில் நாணயம் வேண்டும்
வாழ்கையில் கட்டுப்பாடு வேண்டும்
பழகுவதில் கண்ணியம் வேண்டும்
வாக்கில் உண்மை வேண்டும்
சிந்தனையில் தெளிவு வேண்டும்
செயலில் மனிதத் தன்மை வேண்டும்
முயற்சியில் தூய்மை வேண்டும்

*—விமலேஸ்வரி—*

# சிறார்களின் கைவண்ணம்



















ஜெ. ஜெயசுலக்ஷன்
யா/மருதங்கேணி இ.த.க.வித்தியாலயம்


சூழ்ந்து கொண்ட இருளை அகற்றிக்கொண்டு புதியதோர் நாளைக்காக அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்போம்
அன்று போல் இன்றும், இன்று போல் என்றும் அல்லல்படும் அப்பாவி மக்களுக்கு உறுதுணையாக இருந்து அவர்களின் சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வதற்கு வழிவகுத்து கை கொடுப்பதே எமது நோக்கமாகும்.
செலின்கோ கூட்டு நிறுவனத்திற்கு சொந்தமான எந்தவொரு நிறுவனத்தினதும் அங்கத்தவரோ அல்லது வாடிக்கையாளரோ "சுனாமி" கடல் கொந்தளிப்பினால் விபத்திற்கு உள்ளாகி இருந்தால் அவர்களின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப பாடுபடுவதே எமது நோக்கமாகும்.
எங்களின் நிறுவனத்தின் மீது நீங்கள் வைத்த விசுவாசத்தின் காரணமாக உங்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதே எமது நோக்கமாகும்.
மீண்டும் கட்டியெழுப்புவோம் - எமது தாய் தேசத்தை
தேசமான்ய டாக்டர் லலித் கொத்தலாவல
தலைவர்
செலின்கோ கூட்டு நிறுவனம்
தகவல் வழங்கும் நிலையம்
செலின்கோ கூட்டு நிறுவனம்
13, டிக்மன்ஸ் ஒழுங்கை (ஆர்.ஏ.டி மெல் மாவத்தை) கொழும்பு 4
பக்ஸ்:2582850 மின்னஞ்சல்: saranaseva@ceylincoconsolidated.com
உடனடி அழைப்புக்களுக்கு :
2550800
"சுனாமி" கடல் கொந்தளிப்பால் விபத்திற்கு உள்ளான செலின்கோ கூட்டு நிறுவனத்தின் அங்கத்தவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் உதவி பெறுவதற்கு இவ்விண்ணப்ப பத்திரத்தை உடனடியாக நிரப்பி அனுப்பவும்.
பெயர் :
விலாசம் :
தொலைபேசி :
நீங்கள் முகம் கொடுத்திருக்கும் விபத்தின் தன்மை :
நீங்கள் கொடுக்கல் வாங்கல் செய்யும் நிறுவனம் :
திகதி:
கையொப்பம்:

## 14 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

# தொடரும் தவிப்பு

ஆம்! அற்புதம் சொல்லியது போல் அவரைத் தவிர மற்றவர்களால் காவல்துறையின் கெடுபிடிகளை சமாளிக்க முடியாதுதான். அந்த அளவுக்கு படுத்தி எடுத்துவிடுவார்கள். அதிகாரிகள் கூட அமைதியாக சென்று விடுவார்கள், ஆனால், இந்த கடைநிலைக் காவலர்கள் படுத்தும்பாடு இருக்கிறதே, அப்பப்பா. தகுதியற்றவர்களிடத்தில் அதிகாரம் இருக்கும் இடத்தில் எல்லாம் இந்நிலைதான். தாங்கள் ஏதோ அரசர்கள் போலவும், மனு காணவருபவர்கள் ஏதோ அதிகாரத்திற்கு அடங்கி நடக்க கடமைப்பட்ட அடிமைகள் போலவும் அவர்கள் நடந்து கொள்ளும் விதம், அவர்கள் சொன்னது அனைத்தையும் கேட்டு சொன்னபடி செய்து அமைதியாகச் செல்ல வேண்டும். ஏன் என்று கேட்கக் கூட வேண்டாம். லேசாக முகம் சுளித்தாலே போதும்.... அந்தக் காவலர்கள் போடும் ஆட்டமும், படுத்தும்பாடும்.

அன்புக்குக் குழந்தை பிறந்திருந்த சமயம். அற்புதத்தால் செல்ல முடியாது போகவே இராஜாவை அனுப்பி இருந்தார். அறிவு கேட்டிருந்த பொருட்கள், பெரும்பாலும் புத்தகங்கள், பத்திரிகைகள்-அவற்றை வாங்கிச் செல்லும்படி சொல்லி இருந்தார். சென்று திரும்பிய இராஜாவோ தான் கொண்டு சென்ற அத்தனையையும் அப்படியே பத்திரமாக வீட்டுக்கு கொண்டு வந்துவிட்டார். கேட்டதற்கு, அனுமதி கிடைக்கவில்லை என்றார். அற்புதத்திற்கு மிகுந்த கோபம். அதோடு ஒருவாரம் மகன் படிப்பதற்கு எதுவுமின்றி இருக்க வேண்டுமே என்ற வருத்தம் வேறு. ஏனெனில் படிப்பது மட்டுமே உள்ளே இருந்தவர்களுக்கு மிகப் பெரிய பொழுதுபோக்காய் இருந்தது. வேறு வெளி உலகத் தொடர்பின்றி இருப்பவர்களுக்கு படிப்பதற்கும் எதுவும் இல்லையென்றால் என்னதான் செய்வார்கள். எவ்வளவு நேரம் தான் ஒரு தனி அறையில் பேசுவதற்கோ கேட்பதற்கோ யாருமின்றி சுவரைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருக்க முடியும். அதுவும் ஓடியாடி சுறுசுறுப்பாய் இருக்க வேண்டிய இந்த இளம் வயதில் ஒரு அறையில் முடங்கி இருப்பதே கொடுமை. குறைந்த பட்சம் மூளைக்காவது வேலை கொடுக்கும் புத்தகங்களும் இல்லாமல் ஒருவாரம் மகன் அவஸ்தைப்பட வேண்டுமே என்ற வருத்தமே அற்புதத்திற்கு மேலோங்கி நின்றது. அதோடு, வாரா வாரம் கொடுப்பவற்றைக் கூட கொடுக்கவிடாமல் செய்து விட்டார்களே என்ற கோபம் வேறு. அடுத்தவாரம் இராஜாவிற்கு மறுக்கப்பட்டவற்றையும் சேர்த்து எடுத்துக் கொண்டு போனார். அந்த முறை ஏனோ ஒன்றும் சொல்லாமல் அனுமதித்துவிட்டனர். அற்புதம் விடவில்லை. சிறை அதிகாரியிடமே போய் முறையிட்டார். இதே பொருட்களை சென்ற வாரம் என் மருமகன் கொண்டு வந்த போது ஏன் அனுமதிக்கவில்லை என்று சண்டை போட்ட பிறகு தான் அவர் மனம் ஆறியது. இப்படிப் பல சந்தர்ப்பங்கள்.

அவையெல்லாம் நினைத்துக் கொண்டே, சென்னை செல்வதற்கு தேவையானவற்றைஎடுத்துவைத்தார்.

*****

சென்னை சென்று திரும்பிய அற்புதத்திற்கு அடுத்த அழைப்புக் காத்திருந்தது. திருவனந்தபுரத்தில் மரண தண்டனை எதிர்ப்பு மாநாடு. அங்கு இயங்கி வந்த கேரள சிவில் மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த முகுந்தன் மேனன் என்பவர் எழுதிய கடிதம் வந்திருந்தது. அக்கடிதத்தில் அவர், அவர்கள் அமைப்பின் சார்பாக மரண தண்டனை எதிர்ப்பு மாநாடு நடத்துவதாகவும் அற்புதமும் குயில்தாசனும் அதில் கலந்துகொண்டு அறிவைப் பற்றியும் வழக்கு பற்றிய செய்திகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டுமெனவும் கேட்டிருந்தார்.

அதைப் படித்த அற்புதத்திற்கு சற்றுக் குழப்பம். இவர்கள் யாரென்றே தெரியாது. இந்தக் கூட்டத்திற்கு போவதா வேண்டாமா? போனால், அதனால் ஏதும் புதிய பிரச்சினைகள் வந்துவிடுமோ என அச்சப்பட்டார். உடனடியாக நெடுமாறனை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டார். செய்தியைச் சொன்னவுடன் தாராளமாக போய்ட்டு வாங்கம்மா என்றார். அதோடு ''இந்த முகுந்தன் மேனன்தான் இந்தத் தீர்ப்புக்கு எதிராக அறிக்கையிட்ட முதல்வெளி மாநிலத்தவர். அவரை நம்பி நீங்கள் பேசலாம். எனக்கும் அழைப்பு வந்திருக்குதும்மா. நம்ம குழு சார்பாக விடுதலை இராசேந்திரனும் இதுல கலந்துக்குவாரு. அதனால் தைரியமா போயிட்டு வாங்க. என்றைக்குக் கிளம்பறீங்கன்னு சொல்லுங்க. நான் நம்ம தோழர்களுக்குச் சொல்லி உங்களை அழைச்சிட்டு போகச் சொல்றேன்'' - என்றார்.

செல்லும் தேதி முடிவானவுடன் மீண்டும் நெடுமாறனுக்கு தகவல் சொன்னார் அற்புதம். ''ஒன்றும் கவலைப் படாதீங்கம்மா. நம்ம பையன்தான் தாமகுன்னு பேரு. உங்கள ரயலிடில பார்த்துக் கூட்டிடிட்டுப்போவாரு. அவரோட போய் கன்னியாகுமரி எல்லாம் சுத்திப் பார்த்துட்டு மாநாட்டிலேயும் கலந்துகிட்டு வாங்க''- என்றார்.


கூடியிருந்தோரிடம் துண்டேந்தி......

செல்லும் நாளும் வந்தது. எப்போதும் அடித்து பிடித்து முன் பதிவில்லாத பெட்டியில் ஏறி, இடம் கிடைத்தால் ஒண்டிக்கொண்டு உட்கார்ந்து, கிடைக்கா விட்டால் தரையில் செய்தித்தாளைவிரித்துஅமர்ந்து சென்று பழகியவருக்கு, இன்று தனக்கென ஒதுக்கப்பட்ட ஒரு இடத்தில் பிரச்சினையின்றி அமர்ந்து செல்வதே ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது.

அதுவும், திருமணமாகி இத்தனை வருடத்தில் இருவரும்தனியாகப்பயணம்செய்வதுஇதுவேமுதல்முறை.திருமணமானது முதல் வெளியூர் என்றால் பெரும்பாலும் கழகக் கூட்டங்கள், மாநாடுகள், போராட்டங்கள்தாம். குயில்தாசனின் குடும்பம் முழுவதும் திராவிடர் கழக உறுப்பினர்கள். அவரது சித்தப்பா திராவிடர் கழகத்தில் ஒரு பொறுப்பில் இருந்தார். தலைமைக்கு மிக நெருக்கமானவராகவும் இருந்தார். அதனால் எங்கே கூட்டம், மாநாடு என்றாலும் ஒரு வண்டி ஏற்பாடு செய்து, குயில்தாசனின் குடும்பம், சித்தப்பா குடும்பம் என அனைவரும் செல்வது வழக்கமாக இருந்தது.

திருமணமான புதிதில் இது எல்லாமே அற்புதத்திற்கு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. அற்புதத்தின் தந்தை தி.மு.க.வில் இருந்தவர் என்றாலும் கடவுள் நம்பிக்கை உள்ள குடும்பம். ஆனால் குயில்தாசனின் குடும்பமோ அறவே கடவுள் நம்பிக்கை அற்றவர்கள்.

முதலில் அதனை ஏற்றுக்கொள்ள சிரமமாக இருந்தாலும் மெல்ல மெல்ல அற்புதமும் அக்கொள்கைகளுக்கு மாறிவிட்டார். குயில்தாசன் அவரை மாற்றிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். ஆனால் அப்படி மாற்றுவதற்கு எந்தக் கடுமையான வழியையும் அவர் பின்பற்றவில்லை. மிக இயல்பான, அன்றாட நடவடிக்கைகள், பேச்சுகள் மூலம் தான் அதை சாதித்தார். அற்புதத்திற்கு இன்றும் ஞாபகமுள்ளது.

திருமணத்திற்குப் பின் சில தினங்களில் ஒரு நாள் குயில்தாசன் அற்புதத்திடம் ' நீ எந்த சாமி கும்பிடுவே? '' எனக் கேட்டார்.

'' ஏன் ? முருகன் தா்ன்''- என்றார் அற்புதம்.

'' அப்ப எனக்கு வசதியாப் போச்சு. முருகனைப் போல நானும் 2 பொண்டாட்டி கட்டிக்கிட்டா நீ ஒன்றும் கேட்க மாட்ட இல்ல.....'' அற்புதம் திகைத்துவிட்டார். இப்படி கேலி கலந்த இயல்பான பேச்சுக்களே அவரை மாற்றின.

முதன் முதலாக கழக மாநாட்டிற்கு போனபோது கூட அற்புதத்திற்கு எல்லாமே திகைப்பைத் தருவதாக இருந்தது.

சாவிற்கு சென்றால் கூட நகையெல்லாம் அணிந்து பகட்டாக செல்லும் குடும்பம் அற்புதத்தினுடையது. ஆனால் எந்த ஒரு நகையுமின்றி கறுப்புச் சேலை, வெள்ளை ரவிக்கையில் மிக எளிமையாக அங்கு நடமாடிய பெண்களைப் பார்த்தபோது அவருக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. அதோடு பலது பிடித்துமிருந்தது. ஆண்களும் பெண்களும் நட்புடன் பழகுவதும் பெண்களுக்கு மிகுந்த மதிப்பு கொடுக்கப்பட்டதும் அற்புதத்தை வெகுவாகக் கவர்ந்தன.

இவையெல்லாமும் கூட மெல்ல மெல்ல அற்புதம் பெரியாரின் கொள்கைகளின் பாலும், கழகத்தின் பாலும் ஈர்க்கப்பட்டதற்கு முக்கிய காரணங்கள் எனலாம்.

பெரியார் மீதும் பெரியார் கொள்கைகள் மீதும் அளவற்ற நம்பிக்கையும் பற்றும் உடையவராக குயில்தாசன் இருந்தார். அந்த நம்பிக்கையையும் பற்றையும் தன் மனைவி குழந்தைகளுக்கும் அவர் ஊட்டினார்.

தன் திருமணத்தை பெரியார்தான் நடத்திவைக்க வேண்டுமென மிகவும் ஆசைப்பட்டார். அவர் குடும்பத்தினரும் அதற்கான முயற்சி எடுத்தனர். ஆனால் பெரியாரால் வர முடியவில்லை. தற்போதைய கழகத் தலைமை தான் அப்போது வந்து நடத்தி வைத்தது.

திருமணம் பெரியார் தலைமையில் நடத்த இயலாத குறையை தன் மூத்த மகளுக்கு அந்த மாபெரும் தலைவரின் வாயால் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். அன்புமணி என்று அந்தக்கிழவன் அக்குழந்தையை அவர் உச்சி முகர்ந்து கூறியபோது குயில்தாசன், அற்புதம் இருவரின் உடலும் சிலிர்த்தது. மகிழ்வின் எல்லைக்கே சென்றனர்.

அந்த அளவிற்கு கழகத்தோடு இரண்டறக் கலந்து நின்றனர்.

அப்படி அவர்கள் இருந்ததால் அற்புதத்தின் உறவினர்களோடு பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்தது. அற்புதத்தின் தாய்க்குக் கூட இவர்கள் இப்படி இருப்பது பிடிக்கவில்லை. ஒவ்வொரு முறை சந்திக்கும் போதும் அற்புதத்தை திட்டிக்கொண்டு தான் இருப்பார்.

'இப்படி சாமி கிடையாது. பூஜை கிடையாது. நாள் கிழமைன்னு எதுவும் இல்லாம இருக்கீங்களே. அவருதான் அப்படின்னா நீயுமில்லைமாறிப்போயிட்ட. என்ன ஆகுமோ' - என்று புலம்பிக் கொண்டிருப்பார். அதன் உச்சக்கட்டம் அற்புதம் தாலியைக் கழட்டியபோது நடந்த சண்டைதான்.

(தவிப்புத் தொடரும்....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# இராவணன் இராட்சதனா.....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் நதிகளும் நகரங்களும் ஆரியர் வருவதற்கு முன்னரே பெயர் பெற்றுத் திகழ்ந்தன. மொழி வாழ்ந்ததால் தான் பெயர்களும் வழங்கலாயின.

இலங்கையில் கடம்பநதி, மல்வத்து ஓயா எனவும் பட்டிப்பளை ஆறு கல் ஓயா எனவும் இப்படி பலவும் மாறிப் போயின. காளிகுளம் களுவாப்பி ஆயிற்று. 'வாவி' எனும் தூய தமிழ்ச் சொல்லின் திரிபே 'வாப்பி', மகாவம்சத்தில் காளிகுளம் சொல்லப்பட்டுள்ளது. இப்படித்தான் பிறவும்!

வால்மீகி முனிவரும் 'தன்பெருநை' நதியையே இராமாயணத்தில் தம்ரபா்ணி எனக் குறிப்பிடுகிறார். பின்னர் தமிழரும் தம்ரபா்ணி எனும் பெயரையே தாமிரபரணி என்றவாறு தமிழ் மயப்படுத்திக் கொண்டனர்.

வால்மீகி முனிவர் தென்திசைப் பெயர்களை சரிவரச் சொன்னாரில்லை. அப்படியானால் 'ராவண' என்று சொல்லியிருக்கும் பெயர் சரியானதா? அதனை ஆராய்ப்புகுவது அவசியமாகிறது.

மிகப் பழங்காலத்தில் குடிமக்கள் அரசனின் பெயரைச் சொல்வதில்லை! இறைவன் என்றே அழைத்தனர்! அக்காலத்தில் அரசன் என்ற பெயர் தோன்றியிருக்கவில்லை. அரசு (ஆட்சி) செய்வதால் அரசன் என்ற பெயர் பின்னரே தோன்றியது. முற்காலத்தில் இறைவன் என்றே குடிமக்கள் விளித்தனர். (இறைவன் என்றால் அரசன் என்றும் பொருள்)

ஆதலின் தமிழ் பழங்குடி மக்களால் 'இறைவன்' என வழங்கப்பட்ட சொல்லே மரபுவழி கதைகளுக்குள் விரவிநிலை பெற்றிருக்குமாதலால் வால்மீகி முனிவரும் அதையே பெயரென நினைத்து தனது உச்சரிப்பின் படி (றைவனா - றவன - றாவன) 'றாவண' என்று குறித்திருக்கலாம்.

சில தமிழறிஞர்கள் கூறியிருப்பது போல் இராவணன் என்பவனே நிலந்தரு திருவிற் பாண்டியன் என்றாலும், அல்லாவிட்டாலும், 'இறைவன்' என்ற சொல்லையே வால்மீகி முனிவர் வடமொழியில் 'றாவண' என வழங்கினாரெனக் கொள்வதே சரி. அதாவது 'றாவண' என்பது இறைவன் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு.

வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கும் இந்த 'றாவண' என்ற பெயரையே தமிழர் 'இராவணன்' என தமிழ் மயப்படுத்தி இலக்கியங்களில் ஏற்றினர். கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தமது தேவாரப்பதிகத்தில் (திருநீற்றுப் பதிகம்) 'இராவணன் மேலது நீறு' என்று சொல்லியிருப்பது யாவரும் அறிந்ததே.

**வேந்தன்**

வால்மீகி இராமாயணத்தில் இராவணன் இலங்கை அரசன் என்று குறிப்பிடப்படவில்லை. மாறாக இராட்சதர்களின் அரசன் எனக் குறிப்பிடப்படுகிறான். (இந்திய) துணைக்கண்டத்தில் கடத்தற்கரிய பெருங்காடான தண்ட காருண்யம் வரை இராட்சதர்களின் ஆட்சிவிரவியிருந்ததாக வால்மீக இராமாயணம் கூறுகிறது. அதனாற் போலும் இலங்கையின் வேந்தனாக இராவணனை வால்மீகி முனிவர் குறிப்பிடவில்லை. அவரின் கூற்றுப்படி இராவணன் இராட்சதர்களின் அரசன் மட்டும்தான். 'லங்கா' என்பது வடநாட்டைச் சேர்ந்த நிலப்பிராந்தியமெனும் சர்ச்சை இந்திய வரலாற்று அறிஞர்களிடையே நீண்ட காலம் நிலவி வந்ததையும் பலரும் அறியாமலிருக்கலாம்.

'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று கம்பர் சொல்லியிருப்பதில் 'இலங்கை வேந்தன்' எனும் விபரிப்பு கம்பருடையதேயல்லாமல் வால்மீகி முனிவருடையதன்று. அவர் இராவணனை இராட்சதர்களின் அரசன் என்றே கூறுகின்றார்.

உண்மையில் இந்த இராட்சதர்கள் என்போர் யார்? தற்காலத்தில் எல்லாமே ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படும் போது ஆதிவரலாற்றைத் திசைதிருப்ப சித்திரிக்கப்பட்ட இந்த இராட்சதர்களை மட்டும் ஆராயப்புகாமலிருக்க முடியுமா?

மிகப் பழங்காலத்தில் மனித பரிணாம வளர்ச்சியைக் கருத்திற் கொள்ளாமல் இலங்கையின் நீள் நிலப்பரப்பளவு மேனியுடைய இராட்சதர்கள் வாழ்ந்தனரென்பது மானிடவியலுக்கு முற்றிலும் புறம்பான கூற்று.

ஆதலின் ஆரியர் வருவதற்கு முன் துணைக்கண்டத்தின் சொந்த மக்களாகவிருந்த கருமைநிற ஆதி திராவிடரையே வால்மீகி முனிவர் இராட்சதர்களெனசிருட்டித்தார். உண்மையில் இராட்சதர்குலம் உலகில் வாழ்ந்திருக்குமானால் இன்று அந்தக் குலம் எங்கே? இராம இலட்சுமணர் சார்ந்த ஆரியர்குலம் பல திக்குகளிலும் மேலாண்மையுடன் அரசியற்றி வரும் போது இராமர் காலத்தில் முன்னரே வாழ்ந்து வந்ததாக பகரப்படும் கருமை பருமை மேனி அமைப்புகளைக் கொண்ட அந்த இராட்சதர் குலம் எங்கே போனது?

இராவணனுடனான போருக்கு இராம இலட்சுமணர் அனுமார் படையையும், கரடிப்படையையுமே அழைத்து வந்தனர். எந்த மனிதப்படையையும் அவர்கள் அழைத்து வரவில்லை. ஆனால், கம்பர் தனது கதையில் கரடிப்படையை மறைத்துவிட்டார்! கரடிப்படையும் போருக்கு வந்ததாகச் சொன்னால் காவியத்தின் நம்பகத்தன்மை குன்றிவிடுமெனக் கம்பர் நினைத்தார் போலும். அப்படியானால் அனுமார்படை! அது அவ்விதமிருக்க-

போர்க்களத்தில் இராவணன் இறந்த பின் இராட்சதர் தலைவனின் கீழ் வாழ்ந்த பிற இராட்சதர்கள் வேறெவரின் கீழும் வாழ விரும்பாததால் திடீரென மறைந்து போயினரென இராமாயணம் கூறுகிறது.

இக்கூற்றிலிருந்து இராட்சதர், அரக்கர் என்பதெல்லாம் வெற்றுக் கற்பனை என்பது தெளிவாகிறதல்லவா! -முற்றும்-

# இலங்கையில் இன்று சுனாமி நாளை.......

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய-அவுஸ்ரேலியா தட்டு- அதாவது இந்தியா- இலங்கை போன்ற நாடுகளை தன்மீது சுமந்துள்ள இந்தத் தட்டில் இப்பொழுது ஒரு விரிசல் ஏற்பட்டுள்ளது. கடந்த ஏழரை மில்லியன் வருடமாக நடந்து கொண்டிருக்கும் இந்த விரிசல் உண்மை தான் என்று சமீபத்தில் புவியியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்திய அவுஸ்ரேலிய தட்டு ஆசியாவினுள் உந்தி எழும்பும் தாக்கத்தால் இந்த வெடிப்பு உருவாகியுள்ளது. இந்த வெடிப்பினால் இந்தத் தட்டு- இந்தியத் தட்டு என்றும் அவுஸ்திரேலியத் தட்டு என்றும் இரண்டாகப் பிரியலாம். இந்தப்பிரிவும் அதன் பின்னர் இந்த இரண்டு தட்டுக்களும் பொருந்தும் இடமும் கிட்டத்தட்ட இலங்கையின் தென் கரையிலிருந்து 300 கிலோ மீட்டர் தூரத்தில் சமுத்திரத்தின் அடியில் உள்ளது. இந்தப்பிரிதல், பொருந்துதல் நிகழ்வுகளினால் அவ்விடத்தில் ஒரு பூமி அதிர்வு ஏறபடும் சந்தர்ப்பம் அதிகமாகிறது. இந்த நிகழ்வு நடைபெறுகின்றது என்பதை சமீபத்தில் நில அளவீடு நடத்திய JANES COCHORANG என்ற LAMONT DOH ERTZ EARTH OBSERVATORY நிபுணர் அடித்துக் கூறியுள்ளார்.

எனவே, இன்றோ, நாளையோ என்றோ ஒருநாள் நாம் இலங்கை மக்கள் ஒரு பூமி அதிர்வை எதிர்கொள்ளவிருக்கிறோம்.

பூமி அதிர்வை முன்னே அறிவிக்கக் கூடிய கருவிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. பூமி அதிர்வு நடந்த பின்னர் எவ்வளவு தூரத்தில், எவ்விடத்தில் நடந்தது என்பதை அறிவிக்கும் கருவிகளே தற்போது செயற்பாட்டில் உள்ளன. பூமி அதிர்வு தனி ஒரு சம்பவம் அல்ல. பூமி அதிர்வு நடை_பெற்ற இடத்தை EPICENTER அதிர்வு மையம் என்று அழைப்பர். இந்த இடத்தில்தான் பூமியின் தட்டுகளின் செருகல், மோதல் நடைபெறுகிறது. இந்தச் செருகல் மோதல் விஷயங்கள் மெல்ல நடைபெறுவதால் - அந்த இடத்தில் சின்னச் சின்ன அதிர்வுகள் AFTER SHOCKS ஏற்படுவதுண்டு. இவை 6.5 ரைட்டர் அளவுக்கு அதிகமாகும் வேளையிலேயே பாரிய தேசங்கள் ஏற்படும். அல்லது அதிர்வு மையத்துக்கு அருகில் இருக்கும் நாடுகளில் சேதங்களை ஏற்படுத்தும்.

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி சுமத்திராவுக்கு சமீபமாக சமுத்திரத்தின் அடியில் ஏற்பட்ட பூமி அதிர்வு 9.0 ரைட்டர் அளவினதாயிருந்ததால் சுமாத்திராவிலும் இந்தோனேசியாவிலும் அந்தமானிலும் பூமி அதிர்வு அழிவுகளைத் தந்தது. அதேவேளை அதிர்வின் விளைவாக சுனாமி அலைகள் உருவாகி பாரிய அழிவைத் தந்தன.

எனவே, இலங்கைக்கு சமீபமாக உள்ள இந்த விரிசல் பெரிதாகும்போதோ முட்டி மோதும்போதோ- கீழிறங்கி ஒன்றோடு ஒன்று சேரும்போதோ- அன்று நிச்சயம் பூமி அதிர்வு நிகழலாம். அது என்று நடக்கும்? எந்தப் பாரிய அளவில் நடைபெறும்? அல்லது சிறுசிறு அதிர்வுகளாக நடந்து சேதங்களை தொடர்ந்து தருமா? அல்லது அதிர்வால் இலங்கை கடற்கரையோரங்கள் அடிக்கடி சுனாமி அலைகளைச் சந்திக்குமா? ஆண்டவன் ஒருவனுக்குத்தான் வெளிச்சம். ஆனால், நாம் இந்த பேராபத்துக்குத் தயாராக இருக்க ஆவன செய்ய வேண்டும்.

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுகள்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திறந்தவெளி அரங்கிலும், கண்காட்சி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் இடம்பெற்றன.

கண்காட்சியில் அமெரிக்காவரை கப்பலோட்டிய யாழ். தமிழரின் 'அன்னபூரணி' கப்பலின் மாதிரி வடிவம் வைக்கப்பட்டிருந்தமை அனைவரையும் கவர்ந்தது.

மாநாட்டு நிகழ்வில் ஆய்வுக்கட்டுரைகளுடன் துறைபோன அறிஞர்கள் ஆய்வு செய்தமை ஒரு புறம் நடந்தது. அவைபற்றிய திறனாய்வு மக்கள் மத்தியில் நடந்தது. மறுபுறம் பலவகைக் கலைநிகழ்ச்சிகள், காமன்கூத்து, நாட்டார்பாடல்கள், நாட்டிய நாடகங்கள், நாடகங்கள், கூத்துவகைகள் என்பன மக்களை மகிழ்வித்தவண்ணம் நடைபெற்றன. எல்லா நிகழ்ச்சிகளிலும் மக்கள் வெள்ளம் போல் திரண்டிருந்தனர்.

மாநாட்டில் ஏழாம் நாள் விழாவில் பண்பாட்டை வலியுறுத்தும் அலங்கார ஊர்திகளின் பவனி பல்லாயிரக்கணக்கான மக்களுடன் நடைபெற்றது. அதில் பண்டாரவன்னியனை ஆங்கிலேயர் விலங்குடன் கைது செய்யும் காட்சியும் சித்திரிக்கப்பட்டிருந்தது. போராளி பொன். சிவகுமாரன் அதில் பண்டாரவன்னியனாக வந்திருந்தார்.

பவனி ஊர்வலமாக வந்து கொண்டிருந்தபோது முத்திரைச்சந்திப் பகுதியில் வைத்து பொலிஸாரால் ஊர்வலம் வழிமறிக்கப்பட்டது. பண்டாரவன்னியனின் ஊர்தியை விலக்கிவிட்டு பவனியை நடத்துமாறு ஊர்வலத்தினர் கேட்கப்பட்டனர். சிவகுமாரன் உட்பட ஊர்வலத்தில் வந்த இளைஞர்களும், மக்களும் நடுவீதியில் அமர்ந்து சில மணி நேரம் சத்தியாக்கிரகம் இருந்தனர். இப்போராட்டத்தினால் பொலிஸார் பணிந்தனர். ஊர்வலம் யாழ். நகருக்கு வந்து சேர்ந்தது. நகரம் முழுவதும் ஒரே மக்கள் கூட்டம். அதேநேரம், ஒரே அடைமழை. மழையில் தோய்ந்து கொண்டும் மக்கள் விழாவைக் கண்டுகழித்தனர்.

ஜனவரி 10 விழாவின் எட்டாம் நாள் இறுதி நாளாகவும் கொண்டாடப்பட்டது. விழா முதலில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகிஇருந்த போதும் 50 ஆயிரத்துக்கும் அதிக மக்கள் வந்திருந்ததால் மண்டபத்தின் முன்னால் உள்ள வெளிக்கு மாற்றப்பட்டது.

இறுதிநாள், வெளிநாட்டவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நாள். வெளிநாட்டறிஞர்கள் தமிழின் பெருமையை, பண்பாட்டின் பெருமையைப் பேசினர். இறுதியாக தமிழக ஜமால் முகமது கல்லூரிப் பேராசிரியர் நைனார் முகமது தமிழின் பெருமையைப் பேசிக் கொண்டிருந்தார். அப்போதுதான் அந்த வரலாற்று துயரச்சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாண பொலிஸ் பொறுப்பதிகாரி சந்திரசேகரா தலைமையிலான பொலிஸார் மக்களுக்குள் நுழைந்தனர். மக்களை ஈவிரக்கமின்றித் தாக்கத் தொடங்கினர். துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டது. மக்கள் சிதறி ஓடினர். துப்பாக்கிச் சூட்டில் அறுந்து விழுந்த மின் கம்பிகளால் ஒன்பது தமிழ் உயிர்கள் பறிக்கப்பட்டன.

தமிழாராய்ச்சிப் படுகொலைகள் பற்றி விசாரணைக்குழு மக்களின் அழுத்தத்தால் நியமிக்கப்பட்டது. விசாரணை முடிவில் பொலிஸாரே உயிர்ப்பலிகளுக்கு காரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது. தீர்ப்பு அப்படியே கிடப்பில் போடப்பட்டது. பொலிஸார்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. பொலிஸாரின் அடாவடித்தனம் தொடர்ந்தது. ஆனால் தமிழ் மக்கள் சுதாரித்து விழித்துக் கொண்டனர்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 142

சொற்சிலம்பம் 142 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் தினம் ஜனவரி 16ஆம் திகதி ஆகும். விடைகள் ஜனவரி 23ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 30ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.140க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 140

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 க | 3 வா | 4 ச | ம் | ■ | 5 சு | 6 க |
| 7 ம | ரு | ங் | கு | ■ | 8 ச | தி | ர் |
| த் | ■ | 9 க | னி | 10 த | ல் | ■ | வ |
| 11 து | 12 கி | ல் | ■ | 13 வி | லா | 14 ச | ம் |
| 15 வ | லி | ■ | 16 பு | ■ | 17 ப | ணி | ■ |
| ம் | ■ | 18 ப | தி | 19 க | ம் | ■ | 20 க |
| ■ | 21 ம | தி | ய | ம் | ■ | 22 ஊ | ன் |
| 23 ம | தி | ல் | ■ | 24 பி | ர | தா | னி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 142

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | 9 | | | | |
| ■ | | ■ | 10 | | ■ | | ■ |
| 11 | | 12 | | ■ | 13 | | 14 |
| 15 | | | ■ | 16 | | | |
| 17 | | ■ | 18 | | | ■ | |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| ■ | 21 | | ■ | 22 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 142

**இடமிருந்து வலம்**

1. தண்டிகை.
4. ஒரு சரக்கு;சர்பத்துக்குப் போடுவார்கள்.
8. பதில் உதவி.
10. வாயினால் கவ்வு.
11. சான்று.
13. தகைமை பற்றிய நிலைமை.
15. செதுக்கும் கலையில் வல்லவர்/ சிற்பி.
16. நீதி கேட்டு கண்ணகி வந்தது இக் கோலத்தில். தன் சபதம் நிறைவேறும் வரை திரௌபதி தோற்றமளித்ததும் இக் கோலத்தில் தான்.
17. மேல்நாட்டுக் குடிவகை ஒன்று.
18. நிலைவரம் பற்றிய தன்மை.
19. இல்லாள்.
20. பல அல்ல.
21. அரைவாசி.
22. சடப் பொருட்களின் மூன்று நிலைகளுள் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

1. புறாவுக்குக்காகத் தனது சதையை அறுத்துக்கொடுத்த சக்கரவர்த்தி.
2. காம நோய்.
3. சிறைப்பிடிக்கப்பட்டவன்.
4. தேசிய விளையாட்டுகளில் ஒன்று.
5. தோழன்.
6. கைகூப்பு.
7. ஏவுகணை ரகம்.
9. மிக நீண்டகால அளவீடு.
11. ஒன்றை வரவேற்று உதவுவது.
12. மன்மதன் மனம் கவர்ந்தவள்.
13. ஒன்றை வழிப்படுத்தும் பொறுப்பு.
14. மூன்று முனை கொண்ட வேல்.
16. தலையில் எழுதப்பட்டது.
18. மறக்காமல் ஞாபகம் கொள்.
19. நிலா/ அறிவு.
20. சைவர்கள் வாயில் அடிக்கடி ஒலிப்பது.

## சொற்சிலம்பம்-139 பரிசு பெறுவோர்.

1. பொன்.இராசரத்தினம்,
   மே.பா/ எஸ்.என்.ராஜா, ராஜபுரம்,
   மல்வம் குறுக்கு வீதி, உடுவில்.
2. திருமதி.பற்றிமாறோஸ் அன்ரன்,
   கள்ளப்பாடு வீதி,
   முல்லைத்தீவு.
3. சிவா சண்முகலிங்கம்,
   இல. 71/9,
   காலி வீதி,
   தெகிவளை.

### பாராட்டுப்பெறுவோர்

1. இ. ஆறுமுகம்,
   தொட்டிலடி,
   சங்கானை.
2. சு.சதீஸ்,
   இல.587, இராமநாதபுரம்,
   கிளிநொச்சி.
3. சே.இந்திராணியம்மா,
   துன்னாலை,
   கரவெட்டி.
4. எஸ்.நீரஜா,
   பாரதி ஒழுங்கை,
   மட்டக்களப்பு.
5. வி.தர்மராஜதுரை,
   தும்பளை,
   பருத்தித்துறை.
6. த.கலைச்செல்வி,
   உயிலங்குளம்,
   துணுக்காய்.
7. கே.அன்ரனிதாஸ்,
   கூழாவடி ஒழுங்கை,
   ஆனைக்கோட்டை.
8. எம்.நதார்,
   117/6, ஜின்னாநகர்,
   திருகோணமலை.
9. செல்வி.ந.பர்மிளா,
   கோணப்புலம் வீதி,
   மல்லாகம்.
10. ச.குமாரசாமி,
    தேக்கவத்தை,
    வவுனியா.

# ஜோக்ஸ்

அவரச அவசரமாக மருத்துக்கடை ஒன்றுக்கு பெண் ஒருத்தி ஓடிவந்தாள். கடைக்காரரைப் பார்த்து அழுகையும் - ஆத்திரமும் மேலிட "எனக்கு ஒரு நஞ்சுப் போத்தல் தாருங்கள்" என்று கேட்டாள்.

பெண்ணின் கோபத்தை உணர்ந்த கடைக்காரர் ஏதோ விபரீதம் நடக்கப் போவதை உணர்ந்து "எதற்கு நஞ்சுப் போத்தல்?" என்று கேட்டார்.

அந்தப் பெண் "எனது கணவனைக் கொல்ல வேண்டும்" என்றாள்.

இதனைக் கேட்டு பதறிப்போன கடைக்காரர் "அப்படி எல்லாம் செய்யக்கூடாது..." என்று புத்திமதி கூறினார்.

ஆனால் அந்தப் பெண்ணோ கேட்பதாக இல்லை.....

"நான் இருக்கும் போதே இன்னொரு பெண்ணுடன் தப்புப் பண்ணுகிறான் எனது கணவன்" என்று கூறி கையிலே வைத்திருந்த போட்டோ ஒன்றை கடைக்காரரிடம் காட்டினார்.

போட்டோவைப் பார்த்த கடைக்காரர் கடுமையாக கோபமடைந்து உடனேயே ஒரு நச்சுப் போத்தலை எடுத்து அந்தப் பெண்ணின் கையிலே கொடுத்து - "இந்த அயோக்கியனை உடனடியாக கொன்றுவிடு" என்று கூறினார்.

ஏனென்றால் அந்தப் போட்டோவிலே அந்தப் பெண்ணின் கணவருடன் இருந்தது கடைக்காரனின் மனைவி....

# குறும்பு



தின்று தீர்ப்பதற்கு மட்டும்தான் மரக்கறிகள் இல்லை.. இப்படி ஒரு முகத்தை உருவாக்கவும் பயன்படுத்தமுடியும்.

# கண்ணாமூச்சி



இந்தப் படத்தின் உள்ள பச்சை வட்டத்தினுள் இருக்கும் கறுப்புப் புள்ளியை... வைத்தகண் வாங்காமல் கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டிருங்கள். கொஞ்சநேரத்தின் கறுப்புப்புள்ளி கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும்.


## பண்டிகைக் கால பரிசு மழை!

அதிர்ஷ்ட சீட்டிழுப்பு

MMBL




முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்

மற்றும் 20 கிராம், 10 கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக் குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கிகாரம் பெற்ற MMBL உபமுகவர்கள் ஊடாக பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள் 011 2372 333

ரூபாய் 250,000 ற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்.

WESTERN UNION

பணப் பரிமாற்றம்

AUTHORISED AGENT

MMBL
Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)

● அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்



## திருகோணமலையில்... சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

திருகோணமலையில் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

011 4724401 - 3 011 2399666 - 70



## EXPOAIR எக்ஸ்போ ஏயார்

your friend in the skies...

வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் - கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888

கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91

Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com







மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்...

உங்களின் இக்காலத் தெரிவுக்கு...

## குமரகுரு

புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ் சாலை, கிளிநொச்சி

Tel: 021 228 5971

KUMARAKURU TEXTILE & FANCY HOUSE
Yarl Road, Kilinochchi.





இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஜன. 09 ஆம் திகதி வெளியிடப்பட்டது.